வெளியீடு 6-4-2004

Issued 6-4-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை பிப்ரவரி 6, 2004—தொகுதி 55—எண் 2

**Friday, the 6th February, 2004—Volume 55—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

...egislative Assembly Secretariat, Chennai - 600 009

D
N21, 31'P04
P04.55-2
185088

[Price Rs. 3.00

250/2004

6-2-2004

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

*உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 1 மற்றும் 2)* 173-317

**2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

*தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004* 318

**3. தகவல் கோரல்—**

*உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்* 319

**4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்**—*தொடர்ச்சி* 319-412

திரு. வை. சிவபுண்ணியம் 319-330

திரு. கு. பிச்சாண்டி 331-345

திரு. எம்.ஏ. ஹக்கீம் 353-364

திரு. சி. ஞானசேகரன் 365-378

திரு. கே. ஆறுமுகம் 378-389

* திரு. ப. அரசன் 389-395

திரு. கே.சி. கருணாகரன் 395-404

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 404-412


53-458—1

பக்கங்கள்

- **அரசினர் தீர்மானங்கள்—**
  - *(அ) விதி 13(2)—ஐப் பயன்படுத்துதல் மற்றும் விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்* 412
  - *(ஆ) விதி 32-ஐத்— தளர்த்தல்* 422 - 423
- **அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**
  - *தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004* 413 - 422
  - மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 413, 414, 419 - 421, 422
  - திரு. சி. ஞானசேகரன் 413 - 415
  - திரு. கே.சி. கருணாகரன் 416
  - திரு. ஜி.கே. மணி 416 - 418
  - திரு. சோ. இராசேந்திரன் 418 - 419

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 423 - 426

185088
N 21 ... P04 . 552

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 23, சுபானு – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 பிப்ரவரி 6, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்."*

*"ஊழ்" என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள். சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள்.*

### 1. வினாக்கள்–விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்***
**(பட்டியல் 1 மற்றும் 2)**

**முதல் பட்டியல்**

1—

**மதகு திறந்து விடல்**

**வினா என் 11655—திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தேவகோட்டை வட்டம், சருகனி ஆற்றின் உருவாட்டி அணையிலிருந்து பொன்னலிக்கோட்டை கண்மாய்க்கு தண்ணீர் வருவதற்கு ஏதுவாக ஒரு மதகினை நிரந்தரமாக திறந்துவிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

---

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை-**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) உருவாட்டி அணையின் வலதுபுறம் உள்ள உருவாட்டி கால்வாய் மூலம் 6 கண்மாய்களும் (1. உறுதிக்கோட்டை கண்மாய் 2. சார்வனேந்தல் கண்மாய் 3. கெடுங்குளம் கண்மாய் 4. வேம்பக்கோட்டை கண்மாய் 5. பனக்கரை கண்மாய் 6. உருவாட்டி கண்மாய்) இடதுபுறம் உள்ள கால்வாய் மூலம் சருகனியாறு கண்மாயும் பாசன வசதி பெறுவதற்காகக் கட்டப்பட்டுள்ளது. இதில் பொன்னலிக்கோட்டை கண்மாய் இடம் பெறவில்லை.

பொன்னலிக்கோட்டை கண்மாய் மற்றும் இதர கண்மாய்கள் பாசனவசதி பெற பொன்னலிக்கோட்டை அணைக்கட்டு கட்டப்பட்டு உள்ளது. அதில் பொன்னலிக்கோட்டை கண்மாய் பாசன வசதி பெற பொன்னலிக்கோட்டை அணையில் மதகு உள்ளது.

இந்நிலையில் உருவாட்டி அணைக்கட்டில் இருந்து பொன்னலிக்கோட்டை கண்மாய்க்கு தண்ணீர் செல்ல உருவாட்டி அணையில் ஒரு மதகினை நிரந்தரமாக திறந்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**2—**

**தூர்வாரும் பணி**

**வினா எண் 18967—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலிலுள்ள ஈமச் சடங்கு செய்யக்கூடிய இடமான ஆற்றின் பகுதியை தூர்வாரும் பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் பணி எப்பொழுது நடைபெறும்?

**விடை-**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) ஆற்றில் தூர்வாருவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை. பாசனக் கால்வாய்களுக்கு மட்டுமே கிடைக்கின்ற நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு தூர்வார இயலும். எனினும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து தேவைப்படும் தொகையை ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இப்பணியை செய்ய இயலும்.

**3—**

**வாய்க்கால் தூர்வாருதல்**

**வினா எண் 29058—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓடமணல் ஊராட்சியில் உள்ள கருப்படி வாய்க்காலை தூர்வாரி சுத்தப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை-**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓடமணல் ஊராட்சியில் உள்ள கருப்படி வாய்க்காலை கடந்த ஆகஸ்டு 2002-ல் மாண்புமிகு முதலமைச்சரின் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**4—**

**வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்துதல்**

**வினா எண் 29078—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, தெற்கு வாய்க்காலை தூர்வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2004 பிப்ரவரி 6

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, தெற்கு வாய்க்கால் கடந்த ஆகஸ்டு 2002-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலை நிவாரணத் திட்டத்தின்கீழ் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**5—**

**தங்கும் விடுதியில் அறைகள் அமைத்தல்**

**வினா எண் 31760—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் தங்கும் விடுதியில் தங்குவதற்கு போதிய அறைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆழியார் அணையில் உள்ள விருந்தினர் மாளிகையில் தற்போதுள்ள மூன்று அறைகளே போதுமானதாக இருப்பதால் மேற்கொண்டு அறைகள் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.*

**6—**

**பதிவுத் துறை வருமானம்**

**வினா எண் 31840—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 பிப்ரவரி 6]

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பதிவுத் துறை வாயிலாக கடந்த இரண்டு ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு?*

*(ஆ) அதில் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தின் மூலம் 2001-2002-ல் ரூ.1738.03 இலட்சமும், 2002-2003-ல் ரூ.2437.88 இலட்சமும் அரசுக்கு வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.*

*(ஆ) செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தின் மூலம் 2001-2002-ல் ரூ.2448.98 இலட்சமும், 2002-2003-ல் ரூ.3021.08 இலட்சமும் அரசுக்கு வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.*

**7—**

**சார்பதிவாளர் அலுவலக வருமானம்**

**வினா எண் 33714—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் எத்தனை ஆவணங்கள் பதிவாயின?*

*(ஆ) அவற்றால் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கப்பெற்றது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2,464 ஆவணங்கள் பதிவாகி உள்ளன.*

*(ஆ) பதிவான ஆவணங்களின் மூலம் அரசுக்கு ரூ.122.38 இலட்சம் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.*

**8—**

**மும்முனை மின்சாரக் கட்டணச் சலுகை**

**வினா எண் 20531—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட நகரத்தில் பகுதி நேர மும்முனை மின்சாரம் வழங்கும் பகுதி மக்களுக்கு கட்டணச் சலுகை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) இதனால் அரிசி ஆலை வைத்துள்ளவர்கள் தொழில்ரீதியாக பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

**விடை-**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட நகரத்தில் பகுதி நேர மும்முனை மின்சாரம் வழங்கும் பகுதி மக்களுக்கு கட்டணச் சலுகை வழங்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) நாட்ராம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பகுதி நேர மும்முனை மின்சாரம் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் வழங்கப்படுகிறது.

மின்னூட்டிகளில் 300 தொழிற்சாலை மின் இணைப்புகளுக்கு கூடுதலாகவோ அல்லது மொத்த பளுவில் 50 சதவீதம் தொழிற்சாலை பளு இருக்கும்பட்சத்தில் நகர/தொழிற்சாலை மின்னூட்டிகளாகக் கருதப்பட்டு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கிட அம்மின்னூட்டி தகுதி பெறுகிறது.

ஆனால், நாட்ராம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கிடும் 11 கிலோ வோல்ட் நாட்ராம்பள்ளி மின்னூட்டி மேலே குறிப்பிட்ட விதிமுறைக்குள் வரவில்லையாதலால் 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க இயலவில்லை.

இருப்பினும் மேற்படி நாட்ராம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கிடும் 11 கி.வோ. நாட்ராம்பள்ளி மின்னூட்டி தொழிற்சாலை/நகர மின்னூட்டிக்கான தகுதி பெற்றிடும்போது 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.





வாரிய விதிமுறைகளின்படி மின்னூட்டிகள் தொழிற்சாலை/நகர மின்னூட்டிகளாகக் கருதப்படும்பட்சத்தில் அம்மின்னூட்டியில் 24 மணி நேர மும்முனை மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது.

**9—**

**மின் கட்டணத் தொகை**

**வினா எண் 24189—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஹைபாரஸ்ட் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் கடந்த 15 மாதங்களாக சம்பளமின்றி உள்ளதால் அவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கான மின்சாரத் தொகையை தவணை முறையில் பெற்றுக்கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மின்வாரிய விதிமுறைகளின்படி நடப்பு மின்கட்டணத் தொகையை தவணை முறையில் செலுத்த இயலாது.

**10—**

**மின் வசதி**

**வினா எண் 34898—திரு. டி. மணி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் குரால் நத்தம் கிராம ஊராட்சியில் போதிய மின்வசதி செய்யப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[2004 பிப்ரவரி 6

சேலம் மாவட்டம் குரால் நத்தம் கிராம ஊராட்சியில் போதிய மின்வசதி செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. மேலும் கீழ்க்கண்ட மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 1. விவசாயம் | 131 |
| 2. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 5 |
| 3. வீட்டு உபயோகம் | 186 |
| 4. வணிக உபயோகம் | 12 |
| 5. தெரு விளக்கு | 8 |

மற்றும் குரால் நத்தம் கிராம ஊராட்சிக்குட்பட்ட ஜருகுமலை பகுதியைச் சார்ந்த மேலூர், கீழூர் ஆகிய குக்கிராமங்களில் 12 சூரிய ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**11—**

**மின் பிரிவு அலுவலகத்தைப் புதுப்பித்தல்**

**வினா எண் 35648—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதியில் பழைய குயவர்பாளையம் சாலையிலுள்ள மின் பிரிவு அலுவலகத்தைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**விடை–**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்குத் தொகுதியில் பழைய குயவர் பாளையம் சாலையிலுள்ள பழைய கட்டடம் முழுவதுமாக இடிக்கப்பட்டு புதிய மின் பிரிவு அலுவலகத்தின் கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தக் கட்டுமானப் பணிகள் ஜனவரி 2004-க்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2004 பிப்ரவரி 6]

**12—**

**வாகனம் வாங்க கடனுதவி**

**வினா எண் 35886—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுகிராமங்களிலும் பணியாற்றும் லயன்மேன் போன்ற மின் துறை பணியாளர்களுக்கு மோபெட் போன்ற வாகனங்கள் வாங்க கடன் வழங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

லயன்மேன் போன்ற மின் துறை பணியாளர்களுக்கு மோபெட் (Moped) போன்ற வாகனங்கள் வழங்கும் கருத்துரு வாரியத்தில் உள்ளது. அனைத்து சம்பள ஏற்ற முறையின் (Regular employees in time scales) கீழ்வரும் பணியாளர்கள் குறைந்தபட்சமாக 6 வருடங்கள் பதவிக்காலம் பெற்றிருந்தால் அவர்கட்கு மோபெட் (Moped New only 50 c.c. and below) வாங்க முன்பணம் வழங்கப்படுகிறது.

**13—**

**குடியிருப்புகள் கட்டுதல்**

**வினா எண் 35887—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பணியாற்றும் மின்துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[2004 பிப்ரவரி 6

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் பணியாற்றும் மின் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் கருத்துரு அரசிடம் இல்லை.

**14—**

**குடியிருப்பு வசதி**

**வினா எண் 35890—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவுடையார் கோவில் துணை மின் நிலையத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தரும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆவுடையார் கோவில் துணை மின் நிலையத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தரும் எண்ணம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**15—**

**ஒரு விளக்கு திட்டம்**

**வினா எண் 38458—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டத்தில் பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு விளக்கு ஒரு குடிசை திட்டம் மூலம் 31-3-2002 வரை 49,459 பயனாளிகள் பயன் பெற்று உள்ளார்கள். கடந்த நிதியாண்டிற்கு (2002-2003) 2506 பயனாளிகளுக்கு மின் இணைப்பு



2004 பிப்ரவரி 6]

தர ஒதுக்கீடு தரப்பட்டு 31-3-2003 வரை மேற்படி 2506 பயனாளிகளுக்கும் மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 51,965 குடிசைவாழ் மக்கள் 31-3-2003 வரை மின் இணைப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

**16—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 38957—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப் பட்டினம் ஊராட்சி, புதுக்குடி வடக்கு கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் மணமேல்குடி மின்வாரிய பிரிவு அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதுக்குடி, புதுக்குடி வடக்கு, கடலூர் ஆகிய கிராமங்கள் இயங்கி வருகின்றன. இந்தப் பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டதில் அந்த ஊர்களுக்கு மின் சப்ளை செய்யும் பிரிவு மின்மாற்றியில், ஒரு முனையில் பழுது இருந்தது கண்டறியப்பட்டு சரி செய்யப்பட்டது. தற்பொழுது சீரான மின்னழுத்தத்துடன் கூடிய மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே தற்பொழுது உடனடியாக அங்கு புதிய மின்மாற்றி அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**17—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 38959—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் ஊராட்சி, சித்தகன்னி கிராமத்தில் புதிய மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் ஊராட்சி, சித்தகன்னி கிராமத்தில் தற்பொழுது மின் விநியோகம் சுப்பிரமணியபுரம் எஸ்.எஸ்.1 என்ற மின்மாற்றியிலிருந்து வழங்கப்படுகிறது. இந்த மின்மாற்றியின் மின்பாதையில் இறுதிப் பகுதியில் அமைந்துள்ள மின்னிணைப்பில் மின்னழுத்தம் சீராக 225 வோல்ட் (பி.எச்-என்) உள்ளதால் தற்பொழுது இந்தக் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியமில்லை என்ற பொழுதிலும், எதிர்காலத்தில் மின்மாற்றியின் பளுவைப் பொறுத்து தேவைப்பட்டால் புதிய மின்மாற்றி அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**18—**

## நீதிமன்றத்திற்குக் கட்டடம்

**வினா எண் 40275—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் நீதிமன்றத்திற்கு இந்த ஆண்டு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் ஒரு நீதிமன்றம்தான் உள்ளது. அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்குக் கட்டடம் கட்டுவதற்காக திருக்கழுக்குன்றத்திலுள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான (சர்வே நம்பர் 459/A-1 இல் உள்ள 1.5 ஏக்கர்) நிலத்தினை நீதித் துறைக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கிடைத்த உடன் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.*



**19—**

## வழக்கறிஞர்கள் நல நிதியம்

**வினா எண் 42025—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதி சட்டத்தின்கீழ் இயங்கும் நல நிதியத்தில் (வெல்பேர் பண்ட்) எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?*

*(ஆ) 2002 ஆம் ஆண்டு எத்தனை வழக்கறிஞர்கள் குடும்பத்தாருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) 31-8-2003 வரை தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியத்தில் 15,884 வழக்கறிஞர்கள் சேர்ந்துள்ளனர்.*

*(ஆ) 2002 ஆம் வருடம் 120 வழக்கறிஞர்கள் குடும்பத்தாருக்கு ரூ.1,76,16,000/- வழங்கப்பட்டுள்ளது.*

**20—**

## கோயில் குளம் தூர்வாருதல்

**வினா எண் 12313—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள கைலாசநாதர் கோயில் குளத்தை தூர்வாரி தெப்பம்விட அரசு ஆவன செய்யுமா?*

[2004 பிப்ரவரி 6

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள கைலாசநாதர் திருக்கோயிலின் திருக்குளம் திருக்கோயில் திருப்பணி கமிட்டி மற்றும் கோடிக்காரர்களால் உபயமாக பசலி 1409 இல் தூர்வாரப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. தற்போது திருக்கோயிலின் தேர்த் திருப்பணி ரூ.25 இலட்ச செலவில் துவக்கப்பட்டு 50% தேர்ப்பணி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் முடிந்த பின்னர் தேர்த்திருவிழா நடந்த பிறகு தெப்போற்சவமும் நடத்தப்படவுள்ளது. தேர் திருப்பணி முடிவடைய மேலும் சுமார் ஒரு வருடம் ஆகும். அதன் பின்னரே தெப்போற்சவம் நடைபெறும்.

21—

### மாரியம்மன் கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 20469—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு மாரியம்மன் கோயிலைப் புதுப்பிக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஓர் பட்டியலைச் சேராத திருக்கோயில். மேற்படி திருக்கோயிலில் சுமார் ரூ.5,00,000/- மதிப்பில் உபயமாக திருப்பணிகள் செய்யப்பெற்று கடந்த 16-09-1999-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. தற்போது திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளதால், அத்தியாவசியமாக செய்யப்பட வேண்டிய திருப்பணி வேலைகள் ஏதும் இல்லை. எனவே, கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.



2004 பிப்ரவரி 6]

22—

### ஆரம்பப் பள்ளிகள் மற்றும் பிளஸ் 2 பள்ளிகள் துவக்குதல்

**வினா எண் 12464—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் கல்வியாண்டிற்கான ஆரம்பப் பள்ளிகள் மற்றும் பிளஸ் 2 பள்ளிகள் புதியதாக துவங்க தனியார் எத்தனை பேர் விண்ணப்பித்து இருந்தார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

| | | தொடக்கப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | அனுமதி/அங்கீகாரம் கோரி 2001-2002-ம் கல்வி ஆண்டில் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 35 பள்ளிகள் | 145 பள்ளிகள் |
| 2 | இவற்றில் அனுமதி/அங்கீகாரம் வழங்கப்பட்ட பள்ளிகளின் விவரம் | 24 பள்ளிகள் | 86 பள்ளிகள் |
| 3. | இவற்றில் சில குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் நிலுவையில் உள்ள பள்ளிகளின் விவரம் | 11 பள்ளிகள் | — |
| | நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | — | 59 |

23—

### தொழில்நுட்பப் பயிலகம் தொடங்குதல்

**வினா எண் 20808—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநாவலூர் தொகுதியில் ஊராட்சி ஒன்றிய அளவில் தொழில்நுட்பப் பயிலகம் தொடங்க அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 6

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

தற்போது அரசுத் தரப்பில் புதிய தொழில்நுட்பப் பயிலகம் துவங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

**24—**

**தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள்**

**வினா எண் 39345—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

மாநில தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கீழ்க்காணும் விவரப்படி 8 கோயில்கள் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன:

**காஞ்சிபுர மாவட்ட பாதுகாக்கப்பட்ட சின்னங்கள்**

| வ. எண் | கோயில்களின் பெயர் | கிராமம் | வட்டம் |
|---|---|---|---|
| 1. | சிவன் கோயில் | சிவன்கூடல் | திருப்பெரும்புதூர் |
| 2. | மகாதேவர் கோயில் | இடையார்பாக்கம் | திருப்பெரும்புதூர் |
| 3. | சிவன் கோயில் | சிவபுரம் | திருப்பெரும்புதூர் |
| 4. | விட்டல் ஆலயம் | விட்டலாபுரம் | திருக்கழுக்குன்றம் |
| 5. | திருலோக்கியநாத ஜீனசுவாமி ஆலயம் | திருப்பருத்திக் குன்றம் | காஞ்சிபுரம் |
| 6. | சொக்கீஸ்வரர் ஆலயம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 7. | சிவன்கோயில் | கூரம் | காஞ்சிபுரம் |
| 8. | சந்திரபிரபா ஆலயம் | திருப்பருத்திக் குன்றம் | காஞ்சிபுரம் |



2004 பிப்ரவரி 6]

**25—**

**நோயாளிகள் விவரம்**

**வினா எண் 30815—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு ஒரு நாளைக்கு வரும் வெளி நோயாளிகள் எத்தனை பேர்? உள் நோயாளிகள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 2002 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு சராசரியாக 5358 வெளி நோயாளிகளும், 1139 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

**26—**

**கொசுக்கடி வியாதிகளுக்கு மருந்து அளித்தல்**

**வினா எண் 42395—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொசுக்கடியால் ஏற்படும் யானைக்கால், விரைவீக்கம் போன்ற வியாதிகளுக்கு ஊசி மருந்து தரப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ மற்றும் ஆ) கொசுக்கடியால் ஏற்படும் யானைக்கால் நோய் கிருமி உள்ளவர்களைக் கண்டறிந்து டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

[2004 பிப்ரவரி 6

டி.இ.சி. மருந்து மாத்திரை வடிவில் மட்டும்தான் கிடைக்கிறது. ஊசி வடிவில் இல்லை. இந்நோய் கண்டு தவிர்க்க முடியாத காரணங்களினால் டி.இ.சி. மருந்து தருவதில் விடுபட்டுப் போனவர்களுக்கு கால்வீக்கம் போன்ற அறிகுறிகள் உண்டாகும் வாய்ப்புண்டு. தற்காலிக நிவாரணமாக வெப்ப சிகிச்சை, மின் அதிர்வு சிகிச்சை மற்றும் காற்றழுத்த சிகிச்சை தேசிய யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு மையத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. வலி நிவாரண மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

விரைவீக்கம் ஏற்பட்டவர்கள் ஆலோசனையின்பேரில் அரசு மருத்துவமனைக்குச் சென்று, ஊசி மருந்துகள், அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். அவர்களுக்கு சிகிச்சை அளிக்க அனைத்து வசதிகளும் அரசு மருத்துவமனையில் உள்ளன. இருப்பினும் நோய் முற்றிய நோயாளிகளை முழுவதுமாக குணப்படுத்த இயலாது.

**27—**

### மதில் சுவர் கட்டுதல்

**வினா எண் 43427—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் சுகாதார நிலையத்திற்கு சுற்று மதில் சுவர் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது சுற்றுச் சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.



2004 பிப்ரவரி 6]

**28—**

### சிமெண்ட் களம் கட்டுதல்

**வினா எண் 29411—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கன்னியாக்குடி ஊராட்சியில் உள்ள கீழவெளி மற்றும் மேலவெளியில் சிமெண்ட் களம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* 2003-2004 ஆம் நிதியாண்டில் சீர்காழி தொகுதி, கன்னியாக்குடி ஊராட்சி, கீழவெளி மற்றும் மேலவெளியில் சிமெண்ட் களம் கட்ட நாகப்பட்டினம் விற்பனைக் குழு மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**29—**

### தரிசு நிலங்கள் விவரம்

**வினா எண் 33611—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டத்தில் மேம்படுத்தப்பட்ட தரிசு நிலங்கள் எத்தனை எக்டேர்?

*(ஆ)* அந்நிலங்கள் அளிக்கப்பட்ட தனி நபர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* புதுக்கோட்டை மாவட்டத்தில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் 823 எக்டேர் தரிசு நிலமும், அன்னவாசல் ஊராட்சி

[2004 பிப்ரவரி 6

ஒன்றியத்தில் 686 எக்டேர் தரிசு நிலமும் ஆக மொத்தம் 1509 எக்டேர், மக்கள் பங்கேற்புடன் நடைபெறும் விரிவான தரிசு நிலத் திட்டத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் 2070 பயனாளிகள், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் 1111 பயனாளிகள் ஆக மொத்தம் 3181 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**30—**

**நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 39818—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில், 2001-2002 ஆம் நிதியாண்டில் நீர்வடிப்பகுதி திட்டங்களுக்கு ஒப்பளிப்புச் செய்யப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் நீர்வடிப்பகுதி திட்டங்கள் எதுவும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**31—**

**தரிசு நில மேம்பாடு மற்றும் நவப்ரா திட்டம்**

**வினா எண் 39819—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நவப்ரா திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் நடப்பட்ட மரங்கள் எத்தனை?

(ஆ) அதற்கான செலவினங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நவப்ரா திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் மரங்கள் எதுவும் நடப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**32—**

**தொழுநோய் மறுவாழ்வு இல்லங்கள்**

**வினா எண் 20105—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் மறுவாழ்வு இல்லங்கள் சேலம் மாவட்டத்தில் எத்தனை உள்ளன?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தேவியாக்குறிச்சியில் மட்டும் ஒரே ஒரு அரசு மறுவாழ்வு இல்லம் உள்ளது.

(ஆ) அரசு மறுவாழ்வு இல்லம், தேவியாக்குறிச்சியில் ஜனவரி 2003 மாத அறிக்கையின்படி மொத்தம் 191 இல்லவாசிகளே இருப்பில் உள்ளனர். (ஆண்கள் 112, பெண்கள் 64, ஆண் குழந்தைகள் 7, பெண் குழந்தைகள் 8) ஆனால் அவ்வில்லத்திற்கு அரசு 425 இல்லவாசிகளை நிர்ணயித்து உள்ளது. (400 பெரியவர்கள் + 25 சிறியவர்கள்). ஆனால் 50 சதவீதத்திற்கும் குறைவான இல்லவாசிகளே தற்போது இல்லத்தில் உள்ளதால் புதியதாக

வரும் தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம், தேவியாக்குறிச்சி இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். எனவே தற்போது புதியதாக அரசு மறுவாழ்வு இல்லம் சேலம் மாவட்டத்திற்குள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

**33—**

### சத்துணவுக்கூடம்

**வினா எண் 20658—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித்தொகை பெறும் எத்தனை பேர் மதிய உணவு சத்துணவுக்கூடத்தில் சாப்பிடுகின்றனர்? இத்திட்டத்தின் மூலம் தாம்பரம் தொகுதியில் எந்தெந்த சத்துணவுக்கூடத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மொத்தம் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களில் 1,44,973 (ஆண்கள் 27526 பெண்கள் 117447) நபர்கள் சத்துணவுத் திட்டத்தில் உணவு உட்கொள்கின்றனர். தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களில் எவரும் சத்துணவுக்கூடத்தில் உணவு உட்கொள்ளவில்லை.

**34—**

### அரசு ஏழைகள் பராமரிப்பு விடுதி

**வினா எண் 22781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியிலுள்ள அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதியில் பிச்சைக்காரர்கள் எத்தனை பேர் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்?

(ஆ) இங்கு சேர்க்கப்படுபவர்களுக்கு என்ன வகையான தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன?

(இ) இதன் ஓர் ஆண்டு நிர்வாகச் செலவு என்ன?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி என்னும் ஊரில் அரசு ஏழைகள் பராமரிப்பு விடுதி ஏதும் இல்லை. சேலம் மாவட்டத்தில் தேவியாக்குறிச்சியில் மட்டுமே அரசு மறுவாழ்வு இல்லம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில் தற்போது 191 இல்லவாசிகள் தங்கியுள்ளனர்.

(ஆ) அரசு மறுவாழ்வு இல்லம் தேவியாக்குறிச்சியில் தங்க வைக்கப்பட்டுள்ள இல்லவாசிகளுக்கு பாய் முடைதல், துணி நெய்தல், காலணிகள் செய்தல் போன்ற கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

(இ) இதன் ஒரு ஆண்டு நிர்வாகச் செலவு தோராயமாக ரூ.40,61,000/- ஆகும்.

**35—**

### புதிய சத்துணவுக்கூடம் கட்டுதல்

**வினா எண் 23499—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகரத்திற்கு புதியதாக சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள மாணவ/மாணவிகள் கல்வி பயில 12 பள்ளிகளும், 10 முதல் 14 வயது முடிய உள்ள மாணவ/மாணவிகள் கல்வி பயில 9 பள்ளிகளும் ஆக 21 பள்ளிகள் இயங்கிவருகின்றன. இப்பள்ளிகளில் சத்துணவு மையங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2 வயது முதல் 4 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்கள் நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள்

வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. எனவே, புதியதாக சத்துணவுக்கூடம் கட்டவேண்டிய அவசியம் இல்லை.

**36—**

### சத்துணவுடன் முட்டை வழங்குதல்

**வினா எண் 25591—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகளுக்கு வழங்கிவரும் சத்துணவில் மீண்டும் முட்டை கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் சிறார்களுக்கு முட்டை வழங்கப்பட்டதில் திருப்தி அற்ற நிலை, அதாவது அழுகிய முட்டை காணப்பட்டதாலும், முட்டையில் குறைவான கலோரி சக்தியும் (79.6 கே) புரதச் சத்தும் (6.5 கிராம்) உள்ளதாலும், முட்டைக்குப் பதிலாக வழங்கப்படும் 20 கிராம் உருளைக்கிழங்கு, 20 கிராம் கருப்புக் கொண்டைக் கடலை, 20 கிராம் பச்சைப்பயறு வாரத்தில் ஏதேனும் 3 நாட்களுக்கு வழங்கப்படும்போது அதில் 158.2 கலோரி சக்தியும் 8.54 கிராம் புரதச் சத்தும் ஒரு குழந்தைக்கு ஒரு வாரத்தில் கிடைக்கிறது என்று வல்லுநர் குழுவில் பரிந்துரை செய்ததால், இவைகளைக் கருத்தில் கொண்டு, முட்டை வழங்கும் திட்டத்திற்கு மாற்று ஏற்பாடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

இவ்வாணையின்படி, இத்திட்டத்தில் பயன்பெறும் பள்ளி சிறார்களுக்கு, வாரத்தில் ஏதேனும் 3 நாட்களில் முறையே ஒரு நாள் 20 கிராம் உருளைக்கிழங்கு, மற்றொரு நாள் 20 கிராம் கருப்புக் கொண்டைக்கடலை (முழு அளவில்) பிறிதொரு நாள் 20 கிராம் பச்சைப்பயறு (முழு அளவில்) ஆகியவற்றை சமைத்து சத்துணவுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

ஆகவே, குழந்தைகளுக்கு வழங்கிவரும் சத்துணவுடன் மீண்டும் முட்டை வழங்கும் திட்டத்தினை அமல்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.





**37—**

### பிச்சை எடுப்பதைத் தடுத்தல்

**வினா எண் 25632—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை போன்ற பெரு நகரங்களில் போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் குறிப்பாக போக்குவரத்து அறிவிப்பு விளக்குகளின் அருகில் பிச்சை எடுப்பது அரசு அறியுமா?

(ஆ) இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை போன்ற பெரு நகரங்களில் போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பது அரசுக்குத் தெரிய வருமேயானால், அருகிலுள்ள காவல் நிலையங்களைத் தொடர்பு கொண்டு அப்பிச்சைக்காரர்களைக் கைது செய்து நீதிமன்ற குற்றவியல் நீதிபதி முன் ஆஜர்படுத்தி தண்டனை பெற்ற பின் அவர்களை அரசு ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**38—**

### உதவித்தொகை வழங்குதல்

**வினா எண் 27097—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதரவற்ற விதவைகளுக்குக் கிடைக்கும் சலுகைகள், உதவித் தொகைகளை கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1) விதவையின் குழந்தைகள் திருமணத்திற்கு ரூ.10,000/- திருமண உதவியாக வழங்கப்படுகிறது.

2) ஆதரவற்ற விதவை மறுமணம் செய்தால், இத்திருமணத்திற்கு ரூ.10,000/- நிதி உதவி வழங்கப்படுகிறது.

3) இளம் விதவைகளுக்கு (அதாவது 18 வயது முதல் 40 வயதுக்குள்) சேவை இல்லங்களில் சேர்த்து அவர்களுக்கு தங்க இடம் மற்றும் இலவச புத்தகம், தொழிற்கல்வி, உடுத்த உடைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

4) இலவச தையல் இயந்திரம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

5) விதவைகளின் குழந்தைகள் படிப்பதற்கு இலவச நோட்டு, புத்தகம் வழங்கப்படுகிறது.

1. கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்களில் இலவசமாகத் தங்குவதற்கு இடம் மற்றும் உடைகள், கல்வி, தொழிற் கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

2. இலவச தையல் இயந்திரம் வழங்குவதில் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

(ஆ) ஆதரவற்ற விதவைகளுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு சமூக நலத் துறையின் மூலம் வழங்கப்படுவதில்லை.

**39—**

## வணிக வளாகம் அமைத்தல்

**வினா எண் 36620—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருள்களை விற்பதற்கு தமிழக முக்கிய நகரங்களில் தனியாக வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1. தற்போது மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சென்னையில் ஆர்.கே. மடம் சாலையிலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வணிக வளாகத்தில் 2 கடைகளை மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, மாத வாடகை அடிப்படையில் எடுத்து நடத்தி வருகிறது. இதில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் பெற்று விற்பனை செய்யப்படுகின்றன.

2. 2003-2004 ஆம் நிதி ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநில அளவில் ரூ.1.00 கோடி செலவில் விற்பனை மையம் ஒன்று அமைக்க கருத்துரு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**40—**

## இலவச சீருடைத் திட்டம்

**வினா எண் 37419—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் எட்டாம் வகுப்பு வரை பயிலுவோருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) இலவசச் சீருடை வழங்கும் திட்டம் ஏற்காடு தொகுதியில் செயல்படுத்தப்படுகிறது.*

*(ஆ) மொத்தம் 32758 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.*

41—

### மகளிர் சுய உதவிக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 39365—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதி, அழகாபுரம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சுய உதவிக் குழுக்கள் கூட்டம் கூடவும், கலந்துரையாடவும் ஏற்கெனவே தங்கள் பகுதியிலுள்ள அரசுக் கட்டடங்களான பள்ளிக்கூடங்கள், சமுதாயக் கூடம், சத்துணவு மற்றும் ஊட்டச்சத்து மையங்கள் மற்றும் இதர அரசுக் கட்டடங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் கூட்டம் அங்கன்வாடி மையங்களில் நடக்க அனுமதிக்கலாம் என அரசாணை (நிலை) எண் 33, சமூகநலம், நாள் 8-3-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, ஆண்டிமடம் தொகுதி, அழகாபுரம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் எதுவும் இல்லை.*



42—

### சத்துணவு மையம் அமைத்தல்

**வினா எண் 40489—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் தொகுதி, காரப்பட்டு ஊராட்சி, வண்ணாம்பள்ளியில் ஊட்டச்சத்துணவு மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) தற்சமயம் இல்லை. தற்போது இக்கிராமத்தில் உள்ள பயனாளிகள் அருகில் உள்ள காரப்பட்டு மையத்தில் பயனடைந்து வருகிறார்கள்.*

*(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை. மேலும், தற்போது கிராம மக்களின் மக்கட்தொகையும் குறியீட்டு அளவினை விட குறைவாக உள்ளது. ஒரு மையம் தொடங்கிட மக்கட்தொகை 1000 இருக்க வேண்டும். வண்ணாம்பள்ளி கிராமத்தில் மக்கட்தொகை 887 நபர்கள்தான் வசிக்கின்றனர்.*

43—

### சத்துணவு மையம் அமைத்தல்

**வினா எண் 40490—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் தொகுதி, காட்டேரி ஊராட்சி, வெப்பாலம்பட்டியில் ஊட்டச்சத்துணவு மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) தற்சமயம் இல்லை. தற்போது இக்கிராமத்தில் உள்ள பயனாளிகள் அருகில் உள்ள காட்டேரி மையத்தில் பயனடைந்து வருகிறார்கள்.*

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை. இருப்பினும், இனிவருங்காலங்களில், இங்குள்ள பயனாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, மத்திய அரசின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் புதிதாக ஊட்டச்சத்து மையம் அமைத்திட பரிசீலிக்கப்படும்.

44—

## அரசு மறுவாழ்வு இல்லம்

**வினா எண் 41965—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் எவ்வளவு பேர் தங்கி வசிக்கிறார்கள்?

(ஆ) அவர்கள் செய்யும் பணிக்கு இன வாரியாக வழங்கப்படுகின்ற கூலி விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு—பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் தங்கியுள்ள இல்லவாசிகள் விவரம்

| அரசு நிர்ணயித்த எண்ணிக்கை | | தற்போது தங்கியுள்ளவர்கள் விவரம் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பெரியவர்கள் | சிறியவர்கள் | ஆண் | பெண் | சிறியவர்கள் | | |
| | | | | ஆண் | பெண் | |
| 400 | 25 | 189 | 133 | 16 | 11 | 349 |





(ஆ) அவர்கள் செய்யும் பணிக்கு இன வாரியாக வழங்கப்படும் கூலி விவரம்— பீஸ் வேலைக்கூலி.

| | | | |
|---|---|---|---|
| 1. பாய் நெய்தல் | 700 துண்டுகள் வருடத்திற்கு | ரூ.1.00 | ஒரு யூனிட் |
| 2. மேற்படி செய்தல் | 200 துண்டுகள் வருடத்திற்கு | ரூ.1.40 | ஒரு யூனிட் |
| 3. நெசவுப் பிரிவு— | | | |
| (1) பாண்டேஜ் | 6000 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.20 | ஒரு மீட்டர் |
| (2) காஸ் | 100 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.30 | ஒரு மீட்டர் |
| (3) காடா | 600 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.20 | ஒரு மீட்டர் |
| (4) புடவைகள் | 150 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.50 | ஒரு மீட்டர் |
| (5) வேட்டிகள் | 150 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.60 | ஒரு மீட்டர் |
| (6) டவல் | 300 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.40 | ஒரு மீட்டர் |
| (7) சர்ட் துணி | 400 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.65 | ஒரு மீட்டர் |
| (8) வார்ப்பிங் மற்றும் சைசிங் | 8000 மீட்டர் வருடத்திற்கு | ரூ.0.20 | ஒரு மீட்டர் |
| (9) பின் ஒயின்டிங் | 2400 யூனிட் வருடத்திற்கு | ரூ.0.20 | ஒரு யூனிட் |
| (10) பெரிய ஷர்ட் வருடத்திற்கு | 200 எண்கள் | ரூ.1.00 | ஒன்றுக்கு |
| (11) சிறிய ஷர்ட் வருடத்திற்கு | 100 எண்கள் | ரூ.0.75 | ஒன்றுக்கு |

| | | | |
|---|---|---|---|
| (12) | சிறிய டிரவுசர் | 100 எண்கள் வருடத்திற்கு | ரூ.0.75 ஒன்றுக்கு |
| (13) | பெரிய டிரவுசர் | 20 எண்கள் வருடத்திற்கு | ரூ.1.00 ஒன்றுக்கு |
| (14) | ஜாக்கட் | 100 எண்கள் வருடத்திற்கு | ரூ.0.75 ஒன்றுக்கு |
| (15) | பாவாடை | 100 எண்கள் வருடத்திற்கு | ரூ.1.00 ஒன்றுக்கு |
| (16) | குழந்தைகள் கவுன் | 50 எண்கள் வருடத்திற்கு | ரூ.0.75 ஒன்றுக்கு |
| | வாரக்கூலி விருப்பமுள்ள பணியில் வேலை | 150 நபர்கள் ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு | ரூ.50. |

45—

### பழங்குடியினர் வாழ்க்கைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 31075—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி ஒன்றியத்திலுள்ள ஜம்போதி கிராமத்தில் வாழும் (இருளர்) பழங்குடியினர் வாழ்க்கைத்தரம் உயர இலவசமாக ஆடுகள், கறவை மாடுகள், பாசன வசதிகள், வீடுகள் மற்றும் கிணறுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஆடுகள், கறவைமாடுகள் 50% மானியத்தில் வழங்குதல், இலவச வீடுகள் கட்டித்தருதல் போன்ற திட்டங்கள் பழங்குடியினர் நல இயக்ககம் மூலம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஜம்போதி கிராம இருளர் பழங்குடியினர் தேவை



குறித்த விவரங்கள்/கருத்துருக்களுடன் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் தாட்கோ மாவட்ட மேலாளர், விழுப்புரம் அவர்களை அணுகலாம்.

46—

### பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

**வினா எண் 31076—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் சோழங்குளம், சண்டிகாட்சிமதூர் தோட்டி குட்டை பகுதியில் வாழும் பழங்குடியினர்களுக்கு ஆடுகள், கறவை மாடுகள் மற்றும் வீடுகள் இலவசமாக வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

பழங்குடியினருக்கு ஆடுகள், கறவை மாடுகள் வழங்குதல், இலவச வீடுகள் கட்டித் தருதல் போன்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் இது தொடர்பாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் தாட்கோ மாவட்ட மேலாளர், விழுப்புரம் அவர்களை உரிய விவரங்கள்/ கருத்துருக்களுடன் அணுகலாம்.

47—

### மயானக் கொட்டகை புதுப்பித்தல்

**வினா எண் 34716—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, மேலச்சாலை, ஆதிதிராவிடர் காலனி மக்கள் பயன்படுத்தும் சுடுகாட்டுக் கொட்டகை இடிந்துள்ளதைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 6

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது 2003-2004 ஆம் ஆண்டிற்கான வேலைகள் தேர்வு முடிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதால் 2004-2005-ல் MPLADP திட்டத்தில் பெறப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப காரைமேடு ஊராட்சி மேலச்சாலை ஆதிதிராவிடர் மக்களுக்கு மயான கொட்டகையினைச் சீர் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

48—

### ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி கட்டடம்

**வினா எண் 34896—திரு. டி. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செவ்வாய்பேட்டை ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளி எந்த வருடம் கட்டப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், செவ்வாய்பேட்டை ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கட்டடம் 1978 ஆம் ஆண்டு 12 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டது. பின்பு 24 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் 1989 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

49—

### மயானச் சாலையை தார்ச் சாலையாக்குதல்

**வினா எண் 34960—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புத்தூர் ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புத்தூர் ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற ஊராட்சி நிதி நிலைமைக்கு ஏற்ப வருங்காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

50—

### மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா எண் 34961—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, 65 நீ.எடக்குடி வடபாதி ஊராட்சி, கீழவெளி ஆதிதிராவிடர் கிராம மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடக்குடி வடபாதி ஊராட்சி கீழவெளி ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்திட வரும் ஆண்டில் MPLADP திட்டத்தின் கீழ் பரிசீலிக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

[2004 பிப்ரவரி 6

51—

### பட்டா வழங்குதல்

**வினா எண் 34979—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி, விளக்கு மூக்குத்தெரு, தெற்கு வென் தெரு, ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உடனடியாக பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வைத்தீஸ்வரன் கோவில் கிராமத்தில் பெரும்பான்மையான நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் அறநிலையத் துறைக்குச் சொந்தமானவை. எனவே ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா உடனடியாக வழங்கிட தளங்கள் கிராமத்தில் இல்லை. இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதிக்கு ஏற்பவும் நிதிநிலைமைக்கு ஏற்பவும் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

### மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 35428—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சியில் உள்ள காடாக்குடி கீழத்தெரு ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானம் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



2004 பிப்ரவரி 6]

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சி, காடாக்குடி மயானத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டில் MPL ADP திட்டத்தில் ரூ.30,000/- மதிப்பீட்டில் மயானக் கொட்டகை அமைத்திட தேர்வு செய்யப்பட்டுள்ளது. சீர்காழி ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலம் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

53—

### மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 38682—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். ரூ31.50 இலட்சத்தில் அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட 5-9-2003 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 195-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

54—

### இலவச மிதிவண்டிகள் வழங்குதல்

**வினா எண் 43208—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவச சைக்கிள்கள் ஒவ்வொரு தொகுதியிலும் கூடுதலாக வழங்கிட அரசு முன் வருமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் +1 வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரில், விடுதிகளில் தங்கி கல்வி பயில்கின்ற மற்றும் இலவச பேருந்து பயணச் சலுகையைப் பெற்ற மாணவியரைத் தவிர்த்து ஏனைய +1 மாணவியர் அனைவருக்கும் வருமான வரம்பு ஏதும் இன்றி இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருவதால், ஒவ்வொரு தொகுதிக்கும் கூடுதலாக மிதிவண்டிகள் வழங்கும் தேவை ஏற்படவில்லை.*

**55—**

**சிற்றுந்து வசதி**

**வினா எண் 15715—திரு. கோ. இரவிராஜ்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்தணி தொகுதி, வாசனாம்பட்டு கிராமத்தில் நகர்ப்புறங்களுக்குச் சென்று வர மினி பஸ் வசதி செய்து தர அரசு ஆவன புரியுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*திருத்தணி தொகுதி, வாசனாம்பட்டு கிராமத்திலிருந்து நகர்புறங்களுக்குச் சென்றுவர சிற்றுந்து பர்மிட் கோரி விண்ணப்பம் ஏதும் இதுவரையில் வரப்பெறவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டதும் சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.*





**56—**

**ஒட்டுநர் பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 22546—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகம் மூலம் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி இயங்குகிறதா?*

*(ஆ) ஆம் எனில், ஆண்டிற்கு எவ்வளவு நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சாலைப் போக்குவரத்து நிறுவனம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலத்துடன் இணைந்து சேலத்தில் ஒரு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையத்தை நடத்தி வருகிறது.*

*(ஆ) ஆண்டிற்கு 300 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.*

**57—**

**பேருந்து நிறுத்தம்**

**வினா எண் 30891—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மேட்டுக்குப்பம் அம்மன் கோயில் அருகில் அரசுப் பேருந்து நிறுத்தம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 பிப்ரவரி 6

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேல்மேட்டுக்குப்பம் அம்மன் கோயில் அருகில் அரசுப் பேருந்து நிறுத்தம் 16-1-2003 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிறுத்தத்தின் வழியாக இயங்கும் டி.5. டி.14 மற்றும் டி.26 நகரப் பேருந்துகள் இந்நிறுத்தத்தில் நின்று செல்கின்றன.

58—

## பயணிகள் நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 33636—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் சிவா திருமண மண்டபம் அருகே ஒரு பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி நகரில் ஒரு பயணிகள் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-I)-ன் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

59—

## வேலைவாய்ப்பு

**வினா எண் 33852—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பள்ளி இறுதித் தேர்வுத் தகுதியுடன், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக வேலை



2004 பிப்ரவரி 6]

வாய்ப்பு ஏதும் கிடைக்கப்பெறாத தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை நபர்கள் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பள்ளி இறுதித் தேர்வுத் தகுதியுடன் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து இருபது ஆண்டுகளுக்கும் மேலாக வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்கப்பெறாத தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தவர்களின் எண்ணிக்கை விவரங்கள் 1-4-2003 நிலவரப்படி மாவட்ட வாரியாக பின்வருமாறு:-

| வ. எண் | மாவட்டம் | ஆதிதிராவிடர் | | | பழங்குடி இனத்தவர் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. | சென்னை | 25 | 22 | 47 | 1 | .. | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 151 | 189 | 340 | .. | .. | .. |
| 3. | கடலூர் | 462 | 104 | 566 | 2 | .. | 2 |
| 4. | திண்டுக்கல் | 55 | 23 | 78 | .. | .. | .. |
| 5. | ஈரோடு | 108 | 37 | 145 | .. | .. | .. |
| 6. | காஞ்சிபுரம் | 159 | 49 | 208 | .. | .. | .. |
| 7. | கரூர் | 32 | 18 | 50 | .. | .. | .. |
| 8. | கிருஷ்ணகிரி | 127 | 27 | 154 | .. | .. | .. |
| 9. | மதுரை | 158 | 63 | 221 | 1 | .. | 1 |
| 10. | நாகப்பட்டினம் | 162 | 56 | 218 | .. | .. | .. |
| 11. | கன்னியாகுமரி | 22 | 58 | 80 | .. | 1 | 1 |
| 12. | நாமக்கல் | 102 | 57 | 159 | .. | .. | .. |
| 13. | பெரம்பலூர் | 103 | 56 | 159 | .. | .. | .. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14. | புதுக்கோட்டை | 128 | 48 | 176 | 3 | 1 | 4 |
| 15. | இராமநாதபுரம் | 96 | 40 | 136 | - | - | - |
| 16. | சேலம் | 137 | 52 | 189 | 2 | - | 2 |
| 17. | சிவகங்கை | 49 | 17 | 66 | - | - | |
| 18. | தஞ்சாவூர் | 103 | 56 | 159 | - | - | - |
| 19. | தேனி | 112 | 31 | 143 | - | - | - |
| 20. | திருவண்ணாமலை | 52 | 110 | 162 | 1 | 1 | 2 |
| 21. | திருவாரூர் | 927 | 19 | 946 | - | 1 | 1 |
| 22. | தூத்துக்குடி | 92 | 26 | 118 | 1 | - | 1 |
| 23. | திருநெல்வேலி | 251 | 46 | 297 | - | - | - |
| 24. | திருவள்ளூர் | 152 | 47 | 199 | - | - | - |
| 25. | திருச்சிராப்பள்ளி | 166 | 49 | 215 | - | - | |
| 26. | உதகமண்டலம் | 46 | 28 | 74 | - | 2 | 2 |
| 27. | வேலூர் | 78 | 43 | 121 | - | - | - |
| 28. | விழுப்புரம் | 583 | 195 | 778 | 21 | 6 | 27 |
| 29. | விருதுநகர் | 41 | 25 | 66 | - | - | - |
| | **மொத்தம்** | **4679** | **1491** | **6170** | **32** | **12** | **44** |

60—

**கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா**

**வினா எண் 16136—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் நிலுவையில் உள்ள பணம் பட்டுவாடா செய்வது எப்போது?

(ஆ) விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய அனைத்து கரும்பு விவசாயிகளுக்கும் (கந்தர்வக்கோட்டை பகுதி விவசாயிகள் உட்பட) 2001-2002 ஆம் அரவைப் பருவத்திற்கு நிலுவை ஏதுமின்றி பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது.

(ஆ) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் கரும்பு பயிர் விளை நிலங்களின் எல்லைக்குட்பட்ட பகுதியிலிருந்து ஆலைக்கு 2001-2002 ஆம் ஆண்டில் கரும்பு அளித்த விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.686.20 வீதம் மைய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையாக மொத்தம் ரூ.2,606.30 இலட்சம் அளிக்க வேண்டியிருந்தது. ஆலையின் நிதிநிலைமையில் மிகுந்த பற்றாக்குறை இருப்பினும், இவ்வாலை வங்கிகளிடமிருந்து சரக்கு இருப்புகளின் மீதான காசுக் கடன் தொகையையும் அதற்கும் மேலாக ஈட்டற்ற கடனாக ரூ.200 இலட்சம் வரை பெற்றும், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் அனைத்து கரும்பு விவசாயிகளுக்கும் (கந்தர்வக்கோட்டைப் பகுதி விவசாயிகள் உட்பட) மத்திய அரசின் சட்டரீதியான குறைந்தபட்ச கரும்பு விலையான ரூ.2,606.30 இலட்சம் அளிக்கப்பட்டு விட்டது. ஆகவே 2001-2002 அரவைப் பருவத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு கரும்பு அளித்த விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை.

61—

**கரும்பின் பிழிதிறன்**

**வினா எண் 34483—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அமைக்கப்படும் கரும்பின் பிழிதிறன் 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நாளொன்றுக்கு 2500 மெ. டன் கரும்பு அரவை செய்யும் திறனுடையது. இவ்வாலை 2000-2001 மற்றும் 2001-2002 அரவைப் பருவங்களில் அரவை செய்த கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி, சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் அரவைத் திறன் பயன்பாடு ஆகியவை பின்வருமாறு:*

| வரிசை எண் | அரவைப் பருவம் | கரும்பு அரவை செய்தது (லமெடன்) | சர்க்கரை உற்பத்தி (லமெடன்) | சர்க்கரை கட்டுமானம் சதவிகிதத்தில் | அரவைத் திறன் பயன்பாடு சதவிகிதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 2000-2001 | 4.56 | 0.43 | 9.52 | 106 |
| 2 | 2001-2002 | 4.44 | 0.43 | 9.77 | 103 |

**62—**

### கடன் அனுமதி

**வினா எண் 34674—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு தொகுதியிலிருந்து எத்தனை பேர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்?*

*(ஆ) எத்தனை பேருக்குக் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு தொகுதியிலிருந்து 8 பேர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்.*

*(ஆ) விண்ணப்பித்திருந்த 8 பேரில் 7 பேருக்குக் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு தொழில் நிறுவனத்தின் விண்ணப்பம், துணை பிணையத்தைப் பற்றிய விபரங்களை அளிக்காத காரணத்தால்,*





*2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும் அந்நிறுவனம் துணை பிணையத்தைப் பற்றிய விபரங்களோடு மீண்டும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் விண்ணப்பித்தால் கடன் அனுமதி வழங்க மறுபரிசீலனை செய்யப்படும்.*

**63—**

### பங்கு மூலதனத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

**வினா எண் 38394—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில், ஓரளவு நவீனக் கடைகள் அமைப்பதற்காகக் கல்லூரி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**64—**

### நிலவள வங்கிக்குக் கட்டடம்

**வினா எண் 40730—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் செயல்பட்டு வரும் நிலவள வங்கிக்கு (லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க்) சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல் தொடர்பாக திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லாத நிலையில், சீர்காழி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு (நிலவள வங்கி) சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்புகள் இல்லை.

65—

### நியாய விலைக் கடை தொடங்குதல்

**வினா எண் 21210—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் கிராமம், மசையன் தெரு பகுதிக்கு தனியாக ஒரு நியாய விலைக் கடை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்களை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மசையன் தெரு பகுதியில் 200 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக, 104 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், மசையன் தெரு கிராமத்திற்கும் நியாய விலைக் கடைக்கும் இடையே 1 கி.மீ. தூரமே உள்ளதாலும் மசையன் தெரு பகுதியில் புதியதாக நியாய விலைக் கடை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.



66—

### நியாய விலைக் கடைகளுக்கு தராசு வழங்குதல்

**வினா எண் 41528—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கெல்லாம் நிறுக்கும் அதிக அளவு எடை தாங்கும் தராசு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் 112 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் அனைத்தும் மிகவும் நலிந்த மற்றும் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதால் அவற்றால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் நிறுக்கும் அதிக அளவு எடை தாங்கும் தராசு வழங்க இயலாது.

67—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 10437—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் கிழக்குத் தெருவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம் இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் கிழக்குத் தெருவிற்கு 1,00,000 லிட்டர்

[2004 பிப்ரவரி 6

கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 11780—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தாளார்குளம், இலந்தைக் குளம் ஆகிய கிராமங்களுக்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், தாளார்குளம், இலந்தைக்குளம் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் பாப்பாக்குடி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெறுகிறது.

69—

**விசைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 11822—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், புதுக்குடி ஊராட்சி, இந்திரா காலனி, புதுக்காலனி, ராஜீவ் காலனி ஆகிய பகுதிகளில் விசைப்பம்பு அமைக்கும் பணி இவ்வாண்டு குடிநீர்த் திட்டத்தில் துரிதப்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி, புதுக்குடி ஊராட்சி, இந்திரா காலனி மற்றும் புதுக்காலனிக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் போதிய நீராதாரம் தோற்றுவித்து குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். ராஜீவ் காலனிக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

70—

**குடிதண்ணீர் வசதி**

**வினா எண் 26985—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கல்லுப்பட்டியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து விராலிப்பட்டிக்கு குழல் குழாய் மூலம் குடிதண்ணீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், விராலிப்பட்டி குடியிருப்புக்கு 4 கையிறைப்பான்கள் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் அத்தியாவசியத் தேவைக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கல்லுப்பட்டியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து விராலிப்பட்டிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2004 பிப்ரவரி 6

71—

### புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 26993—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், மெய்குடிப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதால், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த மெய்குடிப்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சிறிது பழுதடைந்த நிலையில் உள்ளது. எனினும், தற்பொழுது இக்குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் பழுது நீக்கம், உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

72—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி விவரம்

**வினா எண் 26996—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை தொகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை?*



2004 பிப்ரவரி 6]

*(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை தொகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட இருக்கின்ற திட்டத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் குடிநீர் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை 16.*

*(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை தொகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்படவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை 26.*

73—

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 27020—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, மடத்தூர் ஊராட்சியில் சங்கரலிங்கபுரம் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சொக்கநாதன்பட்டி, கட்டளையூர் சங்கரலிங்கபுரம், முத்தம்மாள்புரம் ஆகிய 4 குடியிருப்புகளுக்கும் சேர்த்து சொக்கநாதன்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.*

[2004 பிப்ரவரி 6

74—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 27023—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, காருகுறிச்சி ஊராட்சிக்குக் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, காருகுறிச்சி ஊராட்சிக்குக் கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

75—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 27024—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவித்தான்புள்ளி ஊராட்சி, காணியாளன் குடியிருப்பு, அந்தோணியார் நகரில் மேல்நிலை குடிநீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி ஒன்றியம், திருவித்தான்புள்ளி ஊராட்சி, காணியாளன் குடியிருப்பிற்கு புதுக்கிராமம் கூட்டுக் குடிநீர்த்



2004 பிப்ரவரி 6]

திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்பிற்கு போதுமானதாகும்.

அந்தோணி நகர் குடியிருப்பிற்கு பட்டன்காடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்பிற்கு போதுமானதாகும்.

76—

**மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 27025—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கரிசல்பட்டி ஊராட்சி, பூதத்தான் குடியிருப்பு, புதுக்குடி ஊராட்சி, நாடார் குடியிருப்பு மூலச்சி ஊராட்சி ஆகிய இடங்களில் மேல்நிலை குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கரிசல்பட்டி ஊராட்சியில் பூதத்தான் குடியிருப்பு என்ற கிராமம் இல்லை. உலகன்குளம் ஊராட்சியில் பூதத்தான் குடியிருப்பு என்ற கிராமம் உள்ளது. இந்த பூதத்தான் குடியிருப்பிற்கும், புலவன் குடியிருப்பிற்கும் சேர்த்து 1988ஆம் ஆண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்புடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ளது. கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி தற்போதுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி இக்குடியிருப்பிற்கு போதுமானதாகும். புதுக்குடி நாடார் குடியிருப்பு என்பது, மேலப்புதுக்குடி என வாரிய ஆய்வில் உள்ளது. இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைப்புடன் கூடிய

[2004 பிப்ரவரி 6

திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மூலச்சி ஊராட்சியிலுள்ள 10 குடியிருப்புகளில் மூலச்சி பொன்மாநகர் தெ. கரம்பை ஆகிய குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைப்புடன் கூடிய திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயலுக்கு வரும்பொழுது பொன்மாநகர் புதுகாலனியும் பயன்பெறும். பொன்மாநகர் பொத்தை குடியிருப்பிற்கு சிறு மின்விசைத்திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. உலுப்படிப்பாறை, செம்பருத்திமேடு, செரிமேடு, நெசவாளர் காலனி மற்றும் நெசவாளர் அரிசன காலனி ஆகிய குடியிருப்புகளில் தற்போது செயலில் உள்ள திட்டங்கள் போதுமானதாக உள்ளன.

**77—**

**ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்**

**வினா எண் 27033—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி புதுப்பட்டி ஊராட்சியில் திரிபுரசுந்தரி அம்மன் கோவில் அருகே மற்றும் செக்கடிக் கோவில் அருகே ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சி, திரிபுரசுந்தரி அம்மன் கோவில் மற்றும் செக்கடிக் கோவில் என்பவை புதுப்பட்டி குடியிருப்பில் உள்ளன. புதுப்பட்டி குடியிருப்பிற்கு 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய திட்டம் மூலமும், 4 கையிறைப்பான்கள் மூலமும் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே வேறு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.



2004 பிப்ரவரி 6]

**78—**

**ஆழ்துளைக் கிணறு மற்றும் நீரேற்றும் விசைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 27035—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, புதுப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் காலனியில் ஆழ்துளைக் கிணறும், நீரேற்றும் விசை பம்பும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, புதுப்பட்டி ஆதிதிராவிடர் காலனியில் நடப்பு நிதியாண்டில் (2002-03) ஏற்கனவேயுள்ள ஆழ்துளைக் கிணற்று நீராதாரத்தைப் பயன்படுத்தி, குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**79—**

**ஆழ்துளைக் கிணறு அமைத்தல்**

**வினா எண் 27037—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுப்பட்டி ஊராட்சியில் நாரைகுளம் ஓடை, காசிநாதபுரம், காமராஜ் நகர், அருந்ததியர் காலனி ஆகிய இடங்களில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், புதுப்பட்டி ஊராட்சி, நாரைகுளம் ஓடை, காசிநாதபுரம், காமராஜ் நகர் என்பது காசிநாதபுரம் என்ற குடியிருப்பைக் குறிக்கிறது.

காசிநாதபுரம், புதுப்பட்டி அருந்ததியர் காலனி ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் தனித்தனியே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு ஆற்று நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, வேறு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

80—

**கழிவறை வசதி மற்றும் குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 27042—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கூனியூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கழிவறை வசதியும் மற்றும் குடிநீர் தொட்டி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி கூனியூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதி ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டு தற்போது பயனில் உள்ளது.

81—

**ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

**வினா எண் 27046—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, புதுக்குடி ஊராட்சியில் நாடார் தெரு, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு, ஐந்தாங்கட்டளை, நாலாங்கட்டளையில் வடக்கு ஊர் ஆகிய இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, புதுக்குடி ஊராட்சியில் நாடார் தெரு, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு என்பது, மேலபுதுக்குடி குடியிருப்பைக் குறிக்கிறது. மேலபுதுக்குடி குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இத்திட்டம் முடிவுற்றவுடன் இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும், எனவே வேறு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. நாலாங் கட்டளை வடக்கு குடியிருப்புக்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஆற்று நீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும். எனவே வேறு ஆழ்துளைக்கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

82—

**ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்**

**வினா எண் 27049—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சொக்கநாதன்பட்டி யூனியன் பள்ளியின் அருகில் மற்றும் கடையம், தெற்கு மடத்தூர் கோதாண்டராமபுரம், ஊரணி ஆகிய இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஒன்றியம், சொக்கநாதன்பட்டி மற்றும் கோதண்டராமபுரம் ஆகிய இரு குடியிருப்புகளுக்கும் ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. சொக்கநாதன்பட்டி யூனியன் பள்ளியின் அருகில் மற்றும் கடையம், தெற்கு மடத்தூர் கோதண்டராமபுரம் ஊரணி ஆகிய இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

83—

**மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 27066—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மைலப்பபுரம் ஊராட்சிக்கு கூடுதல் மேல்நிலை குடிநீர்த் தேக்கத்தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மைலப்பபுரம் ஊராட்சிக்கு 2002 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

84—

**தாமிரபரணி குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 28361—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வடக்கு அரியநாயகிபுரம், இலந்தைகுளம் கிராமத்திற்கு தாமிரபரணி நீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சி, இலந்தைகுளம் குடியிருப்பிற்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீர் வழங்க அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் செய்யப்பட்டு வருகிறது.

85—

**தாமிரபரணி குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 28363—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஓடைமறிச்சான் ஊராட்சியில் தாமிரபரணி குடிநீர் வசதி செய்து தா அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சியிலுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும், பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி குடிநீர் வழங்க அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

86—

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 28438—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 6

(அ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியம், கபாலி பாறை டெஸ்டுலிடம் தென் பகுதியில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்ட தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், கபாலி பாறை டெஸ்டுலிடம் தென் பகுதியில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**87—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி விவரம்**

**வினா எண் 30163—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002-ல் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் விவரம் என்ன?

(ஆ) புதுக்கோட்டை தொகுதியில் பயன்பெற்ற கிராமங்கள் எவையெவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் 170. அவற்றின் விவரம் பின்வருமாறு:



2004 பிப்ரவரி 6]

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியங்கள் | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குன்னாண்டார் கோவில் | 9 |
| 2 | கந்தர்வக் கோட்டை | 12 |
| 3 | புதுக்கோட்டை | 16 |
| 4 | அன்னவாசல் | 11 |
| 5 | விராலிமலை | 9 |
| 6 | திருவரங்குளம் | 21 |
| 7 | கறம்பக்குடி | 18 |
| 8 | திருமயம் | 11 |
| 9 | பொன்னமராவதி | 12 |
| 10 | அரிமளம் | 8 |
| 11 | அறந்தாங்கி | 27 |
| 12 | மணமேல்குடி | 11 |
| 13 | ஆவுடையார் கோவில் | 5 |
| | **மொத்தம்** | **170** |

புதுக்கோட்டை தொகுதியில் கீழ்க்காணும் 37 கிராமங்கள் பயன் பெறுகின்றன:

| வரிசை எண் | ஒன்றியம் | குடியிருப்புகள் |
|---|---|---|
| 1 | குன்னாண்டார் கோவில் | 1. ஒடுக்கூர் ஆதிதிராவிடர் காலனி |
| | | 2. பாசிப்பட்டி |
| | | 3. பள்ளத்துப்பட்டி |
| | | 4. இலுப்பைக்குடிப்பட்டி |

[2004 பிப்ரவரி 6

5. ராஜாப்பட்டி
6. சீமானூர்
7. வத்தனாக்கோட்டை
8. பிரகதாம்பாள்புரம்
9. ஆல்வம்பட்டி

2. கந்தர்வக்கோட்டை

10. நத்தமாடிப்பட்டி
11. அக்கச்சிப்பட்டி
12. கண்டம்பட்டி
13. திரானிப்பட்டி
14. எல்லைப்பட்டி
15. கோரம்பட்டி
16. ஆண்டனூர்
17. முதுக்குளம் காலனி
18. எடையன் கொல்லைப்பட்டி
19. ஆனைவிழுந்தான்கேணி
20. கரையாம்பட்டி
21. குளவாய்பட்டி

3. புதுக்கோட்டை

22. சோலகம்பட்டி
23. கூலையன் விடுதி
24. ஏ. மாத்தூர்
25. ராம் நகர்
26. முருகன் காலனி
27. குமரன் காலனி
28. இபி. நகர்



2004 பிப்ரவரி 6]

29. வெள்ளவெட்டியான் விடுதி
30. எல்லைப்பட்டி
31. கீழப்பட்டி
32. நெருஞ்சிப்பட்டி
33. கணபதிபுரம்
34. குறிச்சிப்பட்டி
35. அசோக் நகர்
36. பாலாஜி நகர்
37. நரங்கியான்பட்டி.

88—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 30873—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், மின்னாத்தூர் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், மின்னாத்தூர் ஊராட்சியில் மொத்தம் 8 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் 4 குடியிருப்புகளுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கு தேவை மற்றும் தகுதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

**89—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 31179—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான், உடையாம்புலி வடக்கு பகுதியில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்ட தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சி, உடையாம்புலி வடக்கு பகுதியில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**90—**

**சிறு மின்விசைத் திட்டம்**

**வினா எண் 31180—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருதம்புத்தூர், மருதம்புத்தூர் கல்யாண மண்டபம் அருகில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்ட தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் ஊராட்சி, மருதம்புத்தூர் கல்யாண மண்டபம் அருகில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.





**91—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 33154—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், தென்னங்குடி பஞ்சாயத்து சீரங்கம்பட்டிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், தென்னங்குடி பஞ்சாயத்தைச் சார்ந்த ஸ்ரீரங்கம்பட்டி குடியிருப்பிற்கு 4 கையிறைப்பான்கள் மற்றும் 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலம் தேவையான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிதாக திட்டம் ஏதும் மேற்கொள்வதற்கான கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை.

**92—**

**குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்தல்**

**வினா எண் 33156—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், வைத்தூரில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், வைத்தூர் ஊராட்சியைச் சார்ந்த வைத்தூரில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத்திட்டம், இரு சிறு மின் விசைத்திட்டங்கள் மற்றும் இரு கையிறைப்பான்கள் மூலம் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை கூடுதல் நேரம் மின்விசை இறைப்பான் இயக்குவதன் மூலம் நிவர்த்தி செய்ய வைத்தூர் ஊராட்சிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

93—

### நகராட்சிப் பணியாளர்கள் பணி நிரந்தரம்

**வினா எண் 34828—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகராட்சியில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து நிரந்தரம் செய்யாமல் உள்ள பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களை நிரந்தரம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரிந்து நிரந்தரம் செய்யாமல் 9 பணியாளர்கள் உள்ளனர்.

(ஆ) குறிப்பிட்ட 9 நபர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணி வாய்ப்பு பெறாமல் பணியமர்த்தப்பட்டவர்கள். அரசு 1-10-1996-க்கு முன்னர் நகராட்சிகளில் உள்ள தினக்கூலிப் பணியாளர்களை பணி வரன்முறைப்படுத்தும் வகையில் அவ்வப்போது காலிப் பணியிடங்களில் பணி வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அந்நகராட்சியில் தினக்கூலிப் பணியாளர்களாக இருந்த 29 பணியாளர்களில் 20 பேர்கள்



நிரந்தர பணியிடத்தில் வாய்ப்பளிக்கப்பட்டு மிகுதியுள்ள 9 நபர்களும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணியில் சேராததால் அவர்களை பணி நிரந்தரம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

94—

### கறவை மாடுகள் வாங்க கடனுதவி

**வினா எண் 37535—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் ஒன்றியம், எ. வாசுதேவனார் கிராமத்திற்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சின்னசேலம் ஒன்றியம், எ. வாசுதேவனார் கிராமத்திற்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

95—

### கறவை மாடுகள் வாங்க கடனுதவி

**வினா எண் 37536—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம், கல்வராயன் மலைப்பகுதி மலைவாழ் மக்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மலைவாழ் மக்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**96—**

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வீடுகளைப் பராமரித்தல்**

**வினா எண் 13809—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்களுக்கு அரசு ஏற்கெனவே கட்டிக் கொடுத்துள்ள வீடுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு நேரடியாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

இலவச வீட்டுமனை அளிக்கும் திட்டத்திற்காக நிலமெடுப்பு செய்யும் திட்டம் ஒன்று இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் வாழும் வீடற்ற வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் முற்பட்ட வகுப்பு இன மக்களுக்கு குடும்பத்திற்கு 3 சென்ட் வீதம் இதுவரை சுமார் 1,50,000 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவைகளில் இதுகாறும் 4,100 வீடுகள் மட்டுமே பயனாளிகளால் கட்டப்பட்டுள்ளன. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட ஏழை மக்களிடம் வீடுகள் கட்டிக் கொள்ள போதிய பணவசதி இல்லாமை, வழங்கப்பட்ட வீட்டுமனைப் பகுதிகள் ஊரை விட்டு வெகு தூரத்தில் அமைந்திருப்பது, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளான சாலை/தெரு விளக்கு/குடிநீர்/கழிவு நீர் போக்கிடம் ஆகியவைகளும் இல்லாமை முதலிய காரணங்களினால் அவர்களால் வீடுகள் கட்டிக் கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை வசதிகளை அமைக்கும் திட்டம் மாவட்ட வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கென 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் ரூ.7.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இந்த நிதி ஆண்டிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**97—**

**இலவச வீட்டுமனை**

**வினா எண் 15732—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், நல்லாட்டூர் கிராம முத்திரையர்கள் வீட்டுமனை கேட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இலவச வீட்டுமனை வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

[2004 பிப்ரவரி 6

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், நல்லாட்டூர் கிராம முத்திரையர்களிடமிருந்து வீட்டுமனை கேட்டு விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

**98—**

**வீட்டுமனை**

**வினா எண் 15733—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு காலனியில் மிகவும் பின்தங்கிய மக்களுக்காக வீட்டுமனை கேட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு காலனியில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு வீட்டுமனை வழங்கக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

**99—**

**இலவச சலவைப் பெட்டி வழங்குதல்**

**வினா எண் 26592—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2004 பிப்ரவரி 6]

(ஆ) ஆம் எனில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வட்ட வாரியாக வழங்கப்பட்ட பட்டியலை அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் வட்ட வாரியாக இலவச சலவைப் பெட்டிகள் 100 வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வட்ட வாரியாக வழங்கப்பட்ட இலவச சலவைப் பெட்டிகளின் விவரம்:

| வ. எண் | வட்டத்தின் பெயர் | வழங்கப்பட்ட சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 27 |
| 2 | உத்திரமேரூர் | 2 |
| 3 | திருப்பெரும்புதூர் | 5 |
| 4 | செங்கல்பட்டு | 19 |
| 5 | தாம்பரம் | 6 |
| 6 | திருக்கழுக்குன்றம் | 18 |
| 7 | மதுராந்தகம் | 17 |
| 8 | செய்யூர் | 6 |
| | **மொத்தம்** | **100** |

**100—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 37892—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள 5-வது வார்டு, மேலமாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையால் ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் தற்போது இரண்டு ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் செய்து தரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள 5—வது வார்டு, மேலமாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் பிறபடுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.*

## இரண்டாம் பட்டியல்

**1—**

### நிலத்தின் விலை நிர்ணயம்

**வினா எண் 11598—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி, 25-வது வார்டில் நெடுஞ்சாலை அலுவலகத்திற்கு அருகில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க நிலத்தின் விலையை நிர்ணயிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நிலமதிப்பு நிர்ணயம் செய்வதற்காக திருத்தப்பட்ட செயற்குறிப்பு அனுப்பும்படி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரிடம் 11-10-2002-ல் கோரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து திருத்தப்பட்ட செயற்குறிப்பு பெறப்பட்ட பின்னர் அரசு இதுகுறித்து முடிவெடுக்கும்.*

**2—**

### கட்டுமானப் பணிகள் விவரம்

**வினா எண் 16153—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுப் பணித் துறை மூலமாக செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?*

*(ஆ) அவற்றின் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுப் பணித் துறை மூலம் மொத்தம் 22 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*(ஆ) விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன:*

### பிற்சேர்க்கை

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுப் பணித் துறை மூலம் நடைபெற்று வரும் கட்டடப் பணிகளின் விவரம்:

[2004 பிப்ரவரி 6

| வரிசை எண் (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | பொன்னமராவதி-தியணைப்பு நிலையம் | 16.50 |
| 2. | புதுக்கோட்டை பொதுப் பணித் துறை நிலநீர் மற்றும் புவியியல் உபகோட்டம் | 17.00 |
| | **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்திப் பணிகள்** | |
| 3. | கந்தர்வக்கோட்டை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒரு வகுப்பறை | 1.75 |
| 4. | காரையூர் அரசு உயர்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 4.00 |
| 5. | மூவலூர் கிறிஸ்துவப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 5.00 |
| 6. | ஏம்பல் அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 3.00 |
| 7. | திருப்புனவாசல் ஸ்ரீராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளி இரண்டு வகுப்பறைகள் | 5.00 |
| 8. | கந்தர்வக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |
| 9. | கறம்பக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |
| 10. | மழையூர் அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |
| 11. | அறந்தாங்கி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 10.00 |
| 12. | கூலியரான்விடுதி அரசு உயர்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 5.00 |
| 13. | புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனை 15 படுக்கைகள் பிரிவு | 6.00 |
| 14. | செம்பாட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |



2004 பிப்ரவரி 6]

| | | |
|---|---|---|
| 15. | புத்தாம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |
| 16. | மலைக்குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |
| 17. | சத்தியமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 2.00 |
| 18. | வல்லாதிராக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை | 6.00 |
| 19. | வல்லாதிராக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி இரண்டு வகுப்பறைகள் | 3.00 |
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்** | |
| 20. | பெருங்களூர் அரசு உயர்நிலைப் பள்ளி இரண்டு வகுப்பறைகள் | 5.00 |
| 21. | கோட்டைப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளி கணினி அறை | 4.00 |
| | **மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்** | |
| 22. | முதுகுளம் ஆரம்பப் பள்ளி இரண்டு வகுப்பறைகள் | 4.45 |
| | மொத்தம் | 109.70 |
| | மொத்தம் | 22 பணிகள் |
| | மொத்த மதிப்பீடு | ரூ.109.70 இலட்சம் |

3—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 17769—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, காராமணிக்குப்பம் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் வட்டம், காராமணிக்குப்பம் கிராமத்தில் 1985 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு 77 ஆதிதிராவிடர்களுக்கும், 1991ஆம் வருடம் 50 ஆதிதிராவிடர்களுக்கும், 1993ஆம் ஆண்டு 66 ஆதிதிராவிடர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1993ஆம் ஆண்டு நிலம் கிரயம் பெற்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 35 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகள் ஆக்கிரமிப்பில் இருந்த நபர்களுக்கு இதன் மூலம் 8 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் நத்தம் மறு நில அளவையின்போது குடியிருப்பில் இருந்த அனைத்து நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுவிட்டதால், தற்போது மேற்படி கிராமத்தில் பட்டா வழங்க காலி நத்தம் ஏதும் இல்லை. எனவே, தற்போது காராமணிக்குப்பம் கிராமத்தில் மனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என்று கடலூர் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4—

### இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 17770—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதி, பச்சையாங்குப்பம் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் வட்டம், பச்சையாங்குப்பம் கிராமத்தில் புல எண் 92, 93 மற்றும் 95/7 ஆகியவற்றில் உள்ள 0.38.5 எக்டேர் நிலத்தில்



2004 பிப்ரவரி 6]

உள்ள ஊராட்சி சாலைப் புறம்போக்கில் கல் வீடு, கூரை வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி ஊராட்சி சாலைப் புறம்போக்கு நத்தமாக வகைமாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி புலங்கள் தணிக்கை செய்யப்பட்டதில், ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் கல்வீடு கட்டிக் கொண்டு வசித்து வருவதாலும், மேற்படி நபர்கள் வசதி படைத்தவர்கள் என்பதாலும், அவர்களிடம் இருந்து மனைக்கிரயம் வசூல் செய்து பட்டா வழங்க கடலூர் மாவட்டாட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார். ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மனைக் கிரயம் வசூல் செய்த பின்னர், வட்டாட்சியரால் பட்டா வழங்கப்படும்.

5—

### கிராமச் சாவடி கட்டுதல்

**வினா எண் 19227—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்துக்கு கிராமச் சாவடி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

6—

### கிராமச் சாவடி கட்டுதல்

**வினா எண் 19695—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், நச்சிலப்பட்டி பஞ்சாயத்து, சடையாண்டிபட்டிக்கு கிராமச் சாவடி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

7—

**கிராமச் சாவடி கட்டுதல்**

**வினா எண் 19708—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், வடுகபட்டி ஊராட்சி கொங்கபட்டிக்கு கிராமச் சாவடி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

8—

**கிராமச் சாவடி கட்டுதல்**

**வினா எண் 19711—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, நக்கலப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு கிராமச் சாவடி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



2004 பிப்ரவரி 6]

9—

**கிராமச் சாவடி கட்டுதல்**

**வினா எண் 21828—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், மேக்கிழார்பட்டி பஞ்சாயத்து ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதி மக்களுக்கு கிராமச் சாவடி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

D 42/13/2004 20.4.55.2

10—

**வீட்டு மனைகள்**

**வினா எண் 24305—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்சி-புதுக்கோட்டை நகரங்களுக்கு இடையே உள்ள தொழிற்சாலையிலும் மற்றும் கல்விச்சாலையிலும் பணியாற்றுவோர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளும் வகையில் கீரனூர் அருகே வீட்டுமனைகள் உருவாக்கித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, கீரனூர் நீர்ப்பழனி மற்றும் நார்த்தாமலை ஆகிய சரகத்திற்[illegible] திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை சாலையில் சுமார[illegible] தொழிற்சாலைகள் மற்றும் கல்விச்சாலைகள் உள்[illegible]*

18-2-88 சென்னை-600 009

| வ. எண் | நிறுவனம் | நார்த்தாமலை சரகம் | நீர்ப்பழனி சரகம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | தொழிற்சாலைகள் | 7 | 76 | 83 |
| 2. | கல்விச்சாலைகள் | 1 | 4 | 5 |

மேற்கண்ட தொழிற்சாலை மற்றும் கல்விச்சாலைகளில் பணிபுரிபவர்கள் பெரும்பாலும் புதுக்கோட்டை மற்றும் திருச்சியிலிருந்து சென்று வருகின்றனர். இவர்களுக்கு அந்த அந்த ஊர்களில் சொந்த வீடுகள் உள்ளதாக விசாரணையிலிருந்து அறிய முடிகிறது. மேற்கண்ட நிறுவனங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களில் வசிப்பவர்களும் மேற்கண்ட நிறுவனங்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கும் கிராமங்களில் சொந்தமாக வீடுகள் உள்ளன. மேலும் தொழிற்சாலைகள் மற்றும் கல்விச்சாலைகளில் பணி புரியும் எவரும் கீரனூர் மற்றும் அதற்கு அருகில் உள்ள கிராமங்களில் வீட்டுமனை ஒப்படை கோரி விண்ணப்பங்கள் ஏதும் கொடுக்கவில்லை. எனவே கீரனூர் அருகே வீட்டுமனைகள் உருவாக்கித்தரும் வினா எழவில்லை.

11—

### மகுடஞ்சாவடியை தலைமையகமாக மாற்றும் திட்டம்

**வினா எண் 24827—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியை தலைமையகமாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.





12—

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 25283—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை ஊராட்சியிலுள்ள கருங்காலிமேடு கிராமத்தில் நீண்டகாலமாக வீடு கட்டி வாழ்ந்து வரும் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரைகருங்காலிமேடு பகுதியில் வசிக்கும் நபர்களுக்கு கிராம புல எண் 1264-ஐ கிராம கணக்குகளின்படி உட்பிரிவு செய்து, 1410ஆம் பசலியில் வீட்டுமனைப் பட்டா எண் 1609 முதல் 1665 வரை 57 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

13—

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 27413—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, காவனியாத்தூர் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வந்தவாசி வட்டம் மற்றும் தொகுதி, காவனியாத்தூர் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க கோரியுள்ள மேற்படி கிராம புல எண் 80/2ஏ மற்றும் 46/2 என்பது கிராமக் கணக்குகளில் முறையே மேய்க்கால் மற்றும் குளம், பாட்டை புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தடையாணை உள்ளதால், காவனியாத்தூர் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**14—**

**விட்டுமனைப் பட்டா வழங்கிய விவரம்**

**வினா எண் 27582—திரு. கே. ஆறுமுகம்**: *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டத்தில் இந்த ஆண்டு எத்தனை பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என அரசு அறிவிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், கிராமம் வாரியாக வெளியிடப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டத்தில் இந்த ஆண்டு (2002-2003) 69 நபர்களுக்கு கீழ்க்கண்டவாறு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.*



2004 பிப்ரவரி 6]

| வ.எண் | கிராமத்தின் பெயர் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கீழவேடு | 24 |
| 2 | முள்ளிகொளத்தூர் | 32 |
| 3 | மேலேரிகுப்பம் | 13 |
| | மொத்தம் | 69 |

**15—**

**விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 28153—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதியில் உள்ள சோரபுத்தூர் ஊராட்சியில் 45 வருடத்திற்கு மேலாக வசித்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா இந்நாள் வரை வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வந்தவாசி வட்டம், சோரபுத்தூர் ஊராட்சியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க கோரியுள்ள மேற்படி கிராம புல எண். 169/82 மற்றும் 33 என்பது கிராமக் கணக்குகளில் 'குளம்' மற்றும் 'மந்தைவெளி' புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தடையாணை விதித்து உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**16—**

**வாய்க்கால் தூர்வாருதல்**

**வினா எண் 28189—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரம், ஊழியக்காரன் தோப்பில் உள்ள பிரப்படி வாய்க்காலை தூர்வாரி சுத்தப்படுத்த அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) காவிரி டெல்டா பகுதியிலுள்ள கால்வாய்கள் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு தூர்வாருவதற்காக அரசு அனுமதித்துள்ள ரூ.30.00 கோடியில் ஏற்படும் சேமிப்பு நிதியிலிருந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.*

**17—**

### பாசன வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 28194—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம். கீழ் சட்டனாதபுரம் ஊராட்சி, நாராயணபுரம் பாசன வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தி விவசாயத்திற்கு பயன் பெறுகின்ற திட்டம் அரசிடம் உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி ஒன்றியம் கீழ் சட்டனாதபுரம் ஊராட்சி நாராயணபுரம் பாசன வாய்க்கால் ஆழப்படுத்தி தூர்வாரும் திட்டம் எதும் தற்சமயம் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*





**18—**

### வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 28410—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரிய கொப்பியம், ஓடக்கண்ணி வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, பெரிய கொப்பியம், ஓடக்கண்ணி வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.*

**19—**

### வாய்க்காலை தூர் எடுத்து ஆழப்படுத்துதல்

**வினா எண் 28413—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, ஓதவந்தான்குடி ஊராட்சியில் உள்ள கோளை வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) காவிரி டெல்டா பகுதியிலுள்ள கால்வாய்கள் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு தூர்வாருவதற்காக அரசு அனுமதித்துள்ள ரூ.30.00 கோடியில் ஏற்படும் சேமிப்பு நிதியிலிருந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.*

**20—**

**வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 28416—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரிய கொப்பியம், முனியாக்கண்ணி வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, பெரிய கொப்பியம், முனியாக்கண்ணி வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.*



2004 பிப்ரவரி 6]

**21—**

**வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 28420—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் ஊராட்சி, கொல்லைகாப்பிடு வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி கதிராமங்கலம் ஊராட்சி, கொல்லைகாப்பிடு வாய்க்காலும் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.*

**22—**

**வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 28422—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, பச்சை பெருமாள் நல்லூர் ஊராட்சி, பாப்பான் வாய்க்கால் தூர்வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பச்சை பெருமாள் நல்லூர் ஊராட்சி, பாப்பான் வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் பணி கடந்த ஆண்டு ஆகஸ்டு 2002—ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.43,000/- செலவில் தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

**23—**

### வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 28424—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, நாஞ்சி கட்ட வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண்.34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, நாஞ்சிக்கட்ட வாய்க்காலும், பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.





**24—**

### வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 28425—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, ஆலமரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண்.34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, ஆலமரத்து வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

**25—**

### வாய்க்காலை ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 28426—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, செக்கடி வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித்தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி செக்கடி வாய்க்காலையும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

**26—**

### வாய்க்காலை ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 28427—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, வேளார் சுடுகாடு போகும் வாய்க்காலை தூர்வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, வேளார் சுடுகாடுபோகும் வாய்க்காலையும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.



2004 பிப்ரவரி 6]

**27—**

### வாய்க்காலை தூர்வாரும் திட்டம்

**வினா எண் 29048—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:-

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை ஊராட்சியில் உள்ள ஆழவாய்க்கால் மற்றும் நரிமுடுக்கு வாய்க்காலை தூர்வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, புளியந்துறை ஊராட்சியிலுள்ள ஆழவாய்க்கால் மற்றும் நரிமுடுக்கு வாய்க்காலும் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு முடிக்கப்பட உள்ளது.

**28—**

### வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 29071—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, வடகால் ஊராட்சி, தெற்கு வாய்க்கால் தூர்வாரி, ஆழப்படுத்துகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, வடகால் ஊராட்சி தெற்கு வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.*

**29—**

**வாய்க்காலைத் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 29074—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, வேம்படிசிவன் திடல் வாய்க்கால் தூர்வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3-2-2003—ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் நியமன அடிப்படையில் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, வேம்படிசிவன் திடல் வாய்க்காலும் பி.சி.டி. வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.*





**30—**

**அணையின் வாய்க்காலைச் சீர்செய்யும் திட்டம்**

**வினா எண் 29972—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகாவதி அணையின் வாய்க்கால்களை செப்பனிட்டு சீர்செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகாவதி அணையின் வாய்க்கால்களை செப்பனிட்டு சீர்செய்யும் பணி சம்பூரண கிராமின் ரோஜ்கார் யோசன் திட்டத்தின்கீழ் சிறப்பு வறட்சி நிவாரணப் பணியாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2.79 இலட்சமாகும். விரைவில் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.*

**31—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 30011—திரு கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட லட்டூர் கிராமத்தில் அரசு நிலத்தில் குடியிருந்து வருகின்றார்கள் என்பது அரசு அறியுமா?*

[2004 பிப்ரவரி 6

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நெ. 78 லட்டூர் கிராமத்தில் அரசு நிலத்தில் குடியிருப்பவர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது:

| புல எண் | விஸ்தீரணம் | வகைபாடு | ஆக்கிரமணதாரர்கள் விபரங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1.1.5 | | இருளர் | தாழ்த்தப்பட்டோர் | மொத்தம் |
| 242/1 | 1.40.5 | குட்டை | 12 | - | 12 |
| 346/3 | 0.77.0 | தாக்கானாங் குட்டை | - | 8 | 8 |
| | | மொத்தம் | 12 | 8 | 20 |

ஆனால் மேற்படி நிலங்கள் நீர்நிலைப் புறம்போக்கு என்பதாலும், கல்பாக்கம் அனல் மின் நிலைய எல்லைக்குள் இருப்பதாலும், வீட்டுமனை ஒப்படை வழங்க அரசின் தடையாணை உள்ளதாலும் மேற்படி புலங்களில் ஆக்கிரமிப்பு செய்து உள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

**32—**

**வாய்க்கால் பழுதுபார்த்தல்**

**வினா எண் 30263—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

கோயம்புத்தூர் மாவட்டம், காண்டூர் வாய்க்கால் பழுதுபார்ப்பு பணியில் வெளிப்படுத்தப்பட்ட முறைகேடுகள் மீது அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

உலக வங்கியின் நிதியுதவியுடன் காண்டூர் வாய்க்காலில் செய்யப்பட்ட பணிகள் பொதுவாக நல்லமுறையில் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் கால்வாயின் இரு பக்கங்களிலுள்ள பெரிய மரங்களின் வேர்கள் ஊடுருவுவதன் காரணமாக கான்கிரீட் லைனிங் பகுதிகளில் வெடிப்புகள், சிறிய அளவிலான துவாரங்கள் ஏற்பட்டுள்ளன. இக்குறைபாடுகள் ஏற்பட்ட பகுதிகளை ஏற்கெனவே அந்தப்பகுதிகளை செய்திருந்த மூல ஒப்பந்தக்காரர் வாயிலாகவே சரிசெய்யப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் மேற்படி வேலைகள் குறித்த பல்வேறு தரப்பிலும் செய்யப்பட்ட புகார்களின் அடிப்படையில் இந்த வேலைகளின் தரத்தை ஆய்வு செய்தற்பொருட்டு சமீபத்தில் அரசால் ஒரு குழுவானது அமைக்கப்பட்டுள்ளது. கால்வாயில் காணப்படும் சிற்சில குறைபாடுகளைக் களையவும் அத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் நிகழாவண்ணம் தடுக்கவும் இக்குழு சில பரிந்துரைகளைச் செய்தது. அரசாணை (நிலை) எண் 180, பொதுப் பணித் துறை, நாள் 14-5-2003-ல் அக்குழுவின் பரிந்துரைகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பொள்ளாச்சி மண்டல தலைமைப்பொறியாளர் அவர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**33—**

**பாதுகாப்புச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 30268—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பாதுகாப்பு கருதி பாதுகாப்புச் சுவர் (Compound Wall) கட்டித்தரும் எண்ணம் அரசுக்கு உண்டா?

[2004 பிப்ரவரி 6

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சமயநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.4.85 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. அத்தொகையில் அலுவலகக் கட்டடம் மட்டுமே கட்டி முடிக்கப்படும். பாதுகாப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

**34—**

**ஏரியைப் ஆழப்படுத்துதல்**

**வினா எண் 31427—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி, ஆவுடையார்கோவில் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவில் தாலுகாவில், ஆவுடையார்கோவில் ஏரி 2000-2001 ஆம் ஆண்டில் ரூ3.77 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டது.



2004 பிப்ரவரி 6]

**35—**

**பக்கிங்காம் கால்வாயை ஆழப்படுத்துதல்**

**வினா எண் 31698—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள எண்ணூர் கத்திவாக்கம் பகுதியிலுள்ள பக்கிங்காம் கால்வாய், வட சென்னை அனல் மின் நிலையத்தினால் சாம்பல் கலந்த நீர் கலந்ததால் மணல் மேடாக காட்சியளிக்கிறது. அது ஆழப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பக்கிங்காம் கால்வாய் நெடுக்கை (L.S.) 14500 மீ. முதல் 17300 மீ. வரை ஆழப்படுத்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியவைகள் பரிசீலனையில் உள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்த பின்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**36—**

**ஏரியைப் புதுப்பிக்கும் திட்டம்**

**வினா எண் 34505—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் தாலுகா, தீயத்தூர் பஞ்சாயத்து, குளத்தூர் கிராமத்தில் உள்ள ஏரி மராமத்து செய்து தூர் வாரி மடைகளைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகா, தீயத்தூர் ஊராட்சி, குளத்தூர் ஏரி ரூ3.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரி புனரமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் கரையை மண்வேலை செய்து பலப்படுத்தவும், இக்கண்மாயில் மொத்தமுள்ள நான்கு மதகுகளில் மதகு எண் 2 மறு கட்டுமானப்பணி செய்வதற்கும், மதகு எண் 3 மற்றும் 4 மராமத்து செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து பணி மேற்கொள்ளப்படும்.*

**37—**

**கிளைச் சிறைக்கு புதிய கட்டடம்**

**வினா எண் 34531—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி கிளைச் சிறைக்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி கிளைச் சிறைக்கு தேவையான கூடுதல் வசதிகளும், பராமரிப்புப் பணிகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நேர்வு தற்போது எழவில்லை.*



2004 பிப்ரவரி 6]

**38—**

**மின்வாரிய மருந்தகங்கள்**

**வினா எண் 21582—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மின்சார வாரியப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் சிகிச்சைக்காக மின் வாரிய மருந்தகங்களின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?*

*(ஆ) அதேபோல் பிற வைத்திய வசதிக்காக வேறு மருத்துவமனைகளுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மின்சார வாரியப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் மருத்துவ சிகிச்சைக்காக மின்சார வாரியத்தில் இயங்கிவரும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ. 224 லட்சங்கள் 2001-2002 ஆம் ஆண்டுக்கு செலவிடப்பட்டுள்ளது.*

*(ஆ) பிற வைத்திய வசதிக்காக வேறு மருத்துவமனைகளுக்கு செலவிடப்பட்ட தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:*

*(1) மின்வாரியப் பணியாளர்கள் தங்களுக்கும் தங்களைச் சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்களுக்கும் அவர்கள் செய்து கொண்ட மருத்துவ நலநிதி திட்டத்தின்கீழ் வரும் சிறப்பு அறுவை சிகிச்சைகளான இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் மற்றும் கண் அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கு, ரூபாய் 83,24,177/-, 2001-2002 ஆம் ஆண்டு செலவிடப்பட்டுள்ளது. மேற்கூறிய தொகை, மின் வாரியப் பணியாளர்களிடமிருந்து, ஆண்டுக்கு ஒருமுறை சம்பளத்தில் பிடிக்கப்பட்ட தொகையில் இருந்தும், மின் வாரியம் கொடுக்கும் தொகையில் இருந்தும் செலவிடப்பட்டுள்ளது.*

[2004 பிப்ரவரி 6

(2) மருத்துவ நடைமுறைச் சட்டத்தின்கீழ், மின்வாரிய ஊழியர்கள் தனியார் மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெறும் மருத்துவச் செலவினங்களுக்காக 2001-2002 ஆம் ஆண்டு ரூபாய் 9,81,407/- செலவிடப்பட்டுள்ளது.

39—

**மின்வாரிய மருந்தகங்கள், பணியாளர்கள் விவரம்**

**வினா எண் 21583—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களின் பயனுக்கென எத்தனை மருந்தகங்கள் இயங்குகின்றன? அவற்றில் எத்தனை மருத்துவப் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| மொத்த மருத்துவமனைகள் | 32 |
| மொத்த பணியாளர்கள் | 132 |

| வரிசை எண் | வகிக்கும் பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தலைமை மருத்துவ அலுவலர் | 1 நபர் |
| 2. | மருத்துவ அலுவலர் | 27 நபர்கள் |
| 3. | கண்காணிப்பாளர் மருத்துவக் கிடங்கு | 1 நபர் |
| 4. | மருந்தாளுநர் | 35 நபர்கள் |
| 5. | செவிலியர் | 17 நபர்கள் |
| 6. | மகப்பேறு உதவியாளர்/துணை மகப்பேறு உதவியாளர் | 27 நபர்கள் |
| 7. | ஆண்/பெண் செவிலியர் உதவியாளர் | 13 நபர்கள் |
| 8. | ஆய்வுக்கூட நுட்புனர் | 4 நபர்கள் |
| 9. | விழி ஒளியாளர் (முதுநிலை) | 1 நபர் |
| 10. | இருதயத் துடிப்பு மின் இயக்கக் கருவி நுட்புனர் (ECG) | 1 நபர் |
| 11. | கதிர்வீச்சாளர் | 1 நபர் |
| 12. | மருத்துவப் பணியாளர் | 2 நபர்கள் |
| 13. | செவிலியர் உதவியாளர் | 2 நபர்கள் |
| | மொத்தம் | 132 நபர்கள் |





40—

**மின்சார வாரிய பண்டகசாலை தொடங்குதல்**

**வினா எண் 22785—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் மின்சார வாரிய பண்டகசாலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகர் மேட்டூர் கோட்டத்திற்கு உட்பட்டதாகும். மின்வாரிய விதிமுறைகளின்படி மேட்டூர் கோட்ட மின்வாரிய துணை பண்டகசாலை மேட்டூரில் இயங்கி வருகின்றது. ஆகவே எடப்பாடியில் பண்டகசாலை அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

[2004 பிப்ரவரி 6

41—

## மின்சார வாரியக் கட்டண வசூல் மையம்

**வினா எண் 36527—திரு. சு. சிவராஜ்**: மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சூனாங்குறிச்சி கிராமத்தை மையமாக வைத்து மின்சார வாரிய கட்டண வசூல் மையம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மின்சார வாரியக் கட்டண வசூல் மையம் சூனாங்குறிச்சி கிராமத்தை மையமாக வைத்து தொடங்கப்படும். நவம்பர் 2003 முதல் வசூல் பணி தொடங்கும்.

42—

## தொடக்கப் பள்ளியை தரம் உயர்த்துதல்

**வினா எண் 24247—திரு. ப. பொன்னம்பலம்**: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஆணையூர் ஜெ.ஜெ. நகரிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மதுரை, ஆணையூர், ஜெ.ஜெ. நகரிலிருந்து 0.3 கி.மீ. தூரத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உள்ளது. எனவே, ஜெ.ஜெ. நகரிலுள்ள



2004 பிப்ரவரி 6]

அகதிகள் முகாம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

43—

## பயிற்சி மையம்

**வினா எண் 26710—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் உயர்கல்வி பயின்றவர்கள் இந்திய ஆட்சிப் பணி போன்ற தேர்வுக்கு பயிற்சி பெற ஒரு பயிற்சி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை**—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு சென்னையில் ஒரு அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம் நடத்தி வருகின்றது. இதில் சுமார் 15 ஆண்டுகளாக உயர் கல்வி பயின்றவர்களுக்கு அகில இந்திய குடிமைப் பணிகளில் தேர்வு பெறுவதற்கு ஏதுவாக பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இதில் 200 மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் தாழ்த்தப்பட்டோர்-98 பேர், பழங்குடியினர்-2 பேர். ஆக. 100 மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்ற பிரிவினர்கள் 100 பேர். ஆக மொத்தம் 200 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அரசினால் எல்லா தரப்பு மாணவ, மாணவியர்களுக்கும் அகில இந்திய குடிமைப் பணி தேர்வுகளில் கலந்துகொள்ள பயிற்சி அளிக்கும் அரசு மையம் இது ஒன்றாகும். தவிர, தமிழ்நாட்டிலுள்ள மகளிர் மேம்பாட்டிற்கு என சிறப்பாக இலவச பயிற்சி மையங்கள், சென்னை-4, இராணி மேரிக் கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையங்களில் அகில இந்தியப் பணி மற்றும் மத்திய அரசு மகளிர் பணிகளுக்கான (All India Services and Central Services Examinations) தேர்வில்

மகளிர் கலந்து கொள்ளும்பொருட்டு இலவச பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கும் மேற்காண் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட வாரியாக பயிற்சி மையங்கள் தொடங்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. ஆகவே, தருமபுரி மாவட்டத்தில் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**44—**

### மழலையர் பள்ளி

**வினா எண் 28432—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, இராசிபுரம் ஒன்றியம், காக்காவேரி ஊராட்சி உட்பட்ட பூசாரிபாளையம் கிராமத்திற்கு மழலையர் பள்ளி தேவை என்பது அரசின் கவனத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசே மழலையர் பள்ளி தொடங்கி நடத்திட திட்டம் ஏதும் இல்லை. எனவே, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, இராசிபுரம் ஒன்றியம், காக்காவேரி ஊராட்சி உட்பட்ட பூசாரிபாளையம் கிராமத்தில் மழலையர் பள்ளி ஏற்படுத்தக்கோரும் கருத்துருக்கள் தனியார் பள்ளி நடத்த முன்வருவோரிடமிருந்து பெறப்பட்டால் அக்கருத்துருக்கள் அரசின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்கும் நிலையில் பரிசீலிக்கப்படும்.

**45—**

### நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்டம்

**வினா எண் 33113—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





புதுக்கோட்டை மாவட்டத்தில் நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்டம் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயன்பெற்ற மொத்தப் பயனாளிகள் 87 பேர் ஆகும்.

**46—**

### மூலிகைச் செடிகள்

**வினா எண் 28846—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூலிகைச் செடிகளை அதிக அளவில் பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மூலிகைச் செடிகள் சாகுபடி பெரும்பாலான மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சமீப காலங்களில் மூலிகை மற்றும் நறுமணச் செடிகள் சாகுபடியும் அதன் பயனும் பற்றி தமிழக மக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சென்னா, அஸ்வகந்தா கூர்க்கன் கிழங்கு, கீழாநெல்லி, போன்ற மூலிகைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலும் சென்னா எனும் மருத்துவப் பயிர் சுமார் 3,000 எக்டரில் சாகுபடி மேற்கொள்ளப்படுகின்றன. மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் சாகுபடி பற்றிய விழிப்புணர்வு தோட்டக்கலைத் துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மூலிகைப் பயிர்கள் மேம்பாட்டிற்காக தோட்டக் கலைத் துறை மூலம் 2002-2003ஆம் ஆண்டில் ரூ.25.50 இலட்சத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கீழ்வரும் திட்டப்பணிகள் சென்னையைத் தவிர இதர 28 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன.

| வரிசை எண் | திட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | மானிய விவரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பரப்பு விரிவாக்கம் | 8.250 | 25 சதவீத சாகுபடி செலவு (அல்லது) ரூ. 12,500/- எக்டருக்கு மிகாமல். |
| 2. | செயல் விளக்கம் | 13.50 | ரூ.1,500/- பாத்திக்கு |
| 3. | டிஸ்டிலேஷன் யூனிட் | 8.75 | 75 சதவீத நிதி உதவி (அல்லது) ரூ.75,000/- யூனிட்டிற்கு மிகாமல். |

47—

## உலர் களம் அமைத்தல்

**வினா எண் 32884—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், மீனாட்சிபுரம் ஊராட்சி, குழரெட்டயபுரம் கிராமத்தில் உலர் களம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2003-2004 ஆம் நிதியாண்டில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், மீனாட்சிபுரம் ஊராட்சி, குழரெட்டயபுரம் கிராமத்தில் வேளாண்மை



விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் உலர் களம் அமைக்க பரிசீலனை செய்யப்படும்.

48—

## நிலக்கடலை வித்து உற்பத்தி

**வினா எண் 33904—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிலக்கடலை வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 38,848 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு 93,803 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

49—

## தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் தொடங்குதல்

**வினா எண் 34096—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியில் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் தொடங்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது தோட்டக்கலைத் திட்டங்களைச் செயல்படுத்திட புதுக்கோட்டை தலைமையிடத்தில், தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இதன் கட்டுப்பாட்டில் உள்ள கீரனூர் புதுக்கோட்டை, அறந்தாங்கி

[2004 பிப்ரவரி 6

தோட்டக்கலை அலுவலர் அலுவலகங்கள் மூலம் தோட்டக்கலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் புதிதாக சாகுபடிக்கு கொண்டு வரப்படுகிறது. மேலும் விவசாயிகளுக்கு பயிற்சிகள், செயல் விளக்கங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள், களப்பணியாளர்கள் மூலம் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. எனவே தற்போது அறந்தாங்கியில் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் தொடங்கும் திட்டம் ஏதுமில்லை.

**50—**

### பழ நாற்றுகள் வழங்குதல்

**வினா எண் 34187—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் பழ நாற்றுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழ அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும் பழச்செடிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் மானிய விலையில் 414 எக்டரில் 88,075 எண்கள் பழச்செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடர்ந்து நடப்பு ஆண்டிலும் (2003-2004) செயல்படுத்தப்படும்.

**51—**

### வேளாண் பயிற்சி மையம்

**வினா எண் 34274—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 6]

(அ) வேளாண் விற்பனைத் துறையில் சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில் விடுதியுடன் கூடிய பயிற்சி மையம் கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பயிற்சி மையம் கட்டி முடிக்கப்பட்டு 21-1-2003 அன்று தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்தால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது.

**52—**

### இலவச பயணச் சலுகை

**வினா எண் 14710—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உடல் ஊனமுற்றோர் அனைவரும் இலவசமாகப் பேருந்து பயணம் செல்ல பேருந்து பயண இலவச அனுமதி சீட்டு வழங்க அரசு திட்டம் கொண்டு வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் ஊனமுற்றோர் இலவசமாக பேருந்து பயணம் செய்ய கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

12 ஆம் வகுப்பு வரை சிறப்புப் பள்ளி மற்றும் இதர பள்ளிகளில் பயிலும் அனைத்து ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கும் அவர்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளிக்குச் சென்றுவர எவ்வித நிபந்தனைகளுமின்றி இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

(2) பார்வையற்றோருக்கான இலவசப் பயணச் சலுகை:

பார்வையற்றோர் 100 கி.மீ. வரை இலவசமாகச் சென்றுவர எவ்வித நிபந்தனைகளுமின்றி (பயணங்களின் எண்ணிக்கை, பயணம் செல்லுமிடம், பயணம் செய்வதற்கான காரணம்) இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

3) கை, கால் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு 100 கி.மீ. தொலைவிற்கு மிகைப்படாமல் சென்றுவர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

மருத்துவமனை, கல்லூரி, பயிற்சிக்கூடம், பணிபுரியுமிடம் மற்றும் சுயதொழில் புரியும் இடம், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். மனவளர்ச்சி குன்றியோர் தங்களுக்கு உதவியாக ஒருவரை அழைத்துச் செல்ல இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மனவளர்ச்சி குன்றியோருக்கு 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து வருமான வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

4) விரைவுப் பேருந்துகளில் ஊனமுற்றோருக்கு இலவசப் பயணச் சலுகை:

கால் முடமானோர் மற்றும் பார்வையற்றோர் அரசின் விரைவுப் பேருந்துகளில் ஆண்டிற்கொருமுறை தத்தமது சொந்த ஊர்களுக்குச் சென்றுவர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

**53—**

**மறுவாழ்வுத் துறை உதவி பெற்ற பயனாளிகள் விவரம்**

**வினா எண் 32680—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002-ல் மாவட்ட மறுவாழ்வுத் துறையின் மூலம் முதுகுத் தண்டுவடம் உதவித் தொகை மற்றும் பேருந்து பயணச் சலுகை, சுயதொழில் மானியம், கல்வி உதவித் தொகை, மிதிவண்டி, காது கேளாதோர் திருமணம், காதொலிக்கருவி, காது அச்சு தயாரித்தல் ஆகிய உதவிகளைப் பெற்ற பயனாளிகள் தனித்தனியே எத்தனை பேர்?

(ஆ) அதன் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002-ல் மாவட்ட மறுவாழ்வுத் துறையின் மூலம் முதுகுத் தண்டுவடம் உதவித் தொகை மற்றும் பேருந்து பயணச் சலுகை, சுயதொழில் மானியம், கல்வி உதவித் தொகை, மிதிவண்டி, காது கோளாதோர் திருமணம், காதொலிக்கருவி, காது அச்சு தயாரித்தல் ஆகிய உதவிகளைப் பெற்ற பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| | பயனாளிகள் | செலவினத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர் பெற்ற உதவித் தொகை | 6 | 7,200 |
| பேருந்து பயணச் சலுகை | 333 | 4,31,683 |
| சுயதொழில் மானியம் | 15 | 30,000 |
| கல்வி உதவித் தொகை | 429 | 2,89,100 |
| மிதிவண்டி | 38 | 1,42,500 |
| காது கேளாதோர் திருமணம் | 3 | 21,000 |
| காதொலிக்கருவி | 42 | 34,320 |
| காது அச்சு தயாரித்தல் | 42 | 3,150 |

**54—**

**வேலைவாய்ப்பில் ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு**

**வினா எண் 32830—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பில் உடல் ஊனமுற்றோருக்குள்ள 2 சதவிகித இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்பில் ஊனமுற்றோருக்கு ஏற்கெனவே 3 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பெற்று அவை கீழ்க்காணுமாறு வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| பார்வையற்றோருக்கு | - | 1 % |
| காது கேளாதோருக்கு | - | 1 % |
| கை, கால் ஊனமுற்றோருக்கு | - | 1 % |

**55—**

**வீடு கட்ட கடன்**

**வினா எண் 24255—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், செங்குளம் பகுதியில் அரசு கூட்டுறவு வங்கி மூலம் வீடு கட்ட கடன் கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் எத்தனை பேருக்கு கடன் தொகை வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், செங்குளம் பகுதியில் அரசு கூட்டுறவு வங்கி மூலம் வீடு கட்ட கடன் கேட்டு 1998 முதல் 2000 ஆண்டு வரையில் மூன்று நபர்கள் மட்டுமே விண்ணப்பித்தார்கள்.

(ஆ) அம்மூன்று நபர்களுக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 6]

**56—**

**மகளிர் தொழில் முனைவோருக்கு கடன்**

**வினா எண் 28337—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் வாங்கியவர்கள் எண்ணிக்கை எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 77 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

(இ) செங்கற்பட்டு வட்டத்தில் 10 நபர்களுக்கும் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் 1 நபருக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**57—**

**கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர் விவரம்**

**வினா எண் 35751—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மத்திய கூட்டுறவு வங்கி புதியதாக எவ்வளவு வாடிக்கையாளர்களை சேர்த்துள்ளது?

(ஆ) அவர்களிடமிருந்து எவ்வளவு ரூபாய் வைப்பீட்டு தொகையா பெற்றுள்ளது?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி புதியதாக 54,533 நபர்களை வாடிக்கையாளர்களாகச் சேர்த்துள்ளது.*

*(ஆ) அவர்களிடமிருந்து ரூ. 6,766.59 இலட்சம் வைப்பீட்டு தொகையாக பெற்றுள்ளது.*

**58—**

**வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன்**

**வினா எண் 37316—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—*

*(அ) சேலம் மாவட்டம், கொண்டப்ப நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன் 1996-2001 வரை வழங்கப்பட்ட நபர்கள் மற்றும் தொகை எவ்வளவு?*

*(ஆ) அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு நுகர்வோர் கடன் வழங்கப்பட்டுள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இவ்வங்கியில் 1995-1996 முதல் 2000-2001 வரை 854 பேர்களுக்கு, அரசு விதிமுறைகளுக்குட்பட்டு ரூ.111.59 இலட்சம் நுகர்வுக் கடன்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு உள்ளது:*



2004 பிப்ரவரி 6]

| வருடம் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1995-1996 | 67 | 6.34 |
| 1995-1997 | 296 | 29.16 |
| 1997-1998 | 316 | 42.52 |
| 1998-1999 | 170 | 32.37 |
| 1999-2000 | 5 | 1.20 |
| 2000-2001 | - | - |
| மொத்தம் | 854 | 111.59 |

**59—**

**வேளாண்மை கூட்டுறவு வங்கி இருப்பு தொகை**

**வினா எண் 37317—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், கொண்டப்ப நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கேஷ் பேலன்ஸ் (வங்கி இருப்பு) தொகையை முறைகேடாகப் பயன்படுத்தியதை திரும்ப செலுத்தப்பட்டதா?*

*(ஆ) முறைகேடாகப் பயன்படுத்தியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், கொண்டப்ப நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் ரொக்க இருப்பு மற்றும் நீர்ம ஆதாரங்கள் 1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 80-ன்படி முறையாகப் பராமரிக்கப்படுகிறது. மேலும் வங்கி இருப்பு கையாடல் மற்றும் முறைகேடுகள் எதுவும் நடைபெற்றதாக இத்துறையின் கவனத்திற்கு வரவில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2004 பிப்ரவரி 6

60—

குடிமைப் பொருள் விநியோகம்

**வினா எண் 37326—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், சூரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் வழங்குவதில் மற்றும் குடிமைப் பொருள் விநியோகத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) சூரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் வழங்குவதில் மற்றும் குடிமைப் பொருள் விநியோகத்தில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

61—

சுய தொழில் திட்டம்

**வினா எண் 37882—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த மகனூர்பட்டி ஊராட்சியில் மகளிர் சங்கத்திற்கு கடன் வழங்கி சுய தொழில் தொடங்க வைக்கும் திட்டம் அரசிடம் உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 பிப்ரவரி 6]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) (மகளிர் திட்டத்தின்கீழ்) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் மூலமாக ஏற்கெனவே அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சார்ந்த மகனூர்பட்டி ஊராட்சியில் உள்ள மகளிர் குழுக்களுக்குக் கடன் வழங்குதல் தொடர்பாக அக்குழுவினை மதிப்பீட்டுக் குழுவினரால் மதிப்பீடு செய்து அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில், தகுதியிருப்பின், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை/நகர கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

*(ஆ) எழவில்லை.*

62—

கடன் உதவித் தொகை

**வினா எண் 38384—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்ட தொடக்க வேளாண்மை வங்கிகளைச் சார்ந்த பெண் உறுப்பினர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க பங்கு மூலதனத்திற்கு வட்டியில்லாக் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், 2002-2003 ஆம் ஆண்டில் எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி ஏதும் அரசால் வழங்கப்படவில்லை.*

[2004 பிப்ரவரி 6

இருப்பினும் 2003-2004 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் அரசு ரூ.10 இலட்சம் நிதியுதவி 2,000 மகளிர் உறுப்பினர்களுக்கு அரசாணை எண் 187, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 27-5-2003-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் சேலம் மாவட்டத்திற்கு 80 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ. 40,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

63—

## உழவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

**வினா எண் 38391—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டு வட்டி, அபராத வட்டித் திட்டத்தின்கீழ் உழவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 30398 விவசாயிகளுக்கு ரூ.975.16 இலட்சம் அளவிற்கு வட்டி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

64—

## நிதி உதவி

**வினா எண் 38392—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள், கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் முதலியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2004 பிப்ரவரி 6]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடந்த 5 ஆண்டுகளில் அரசு பங்கு மூலதனம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பெற்று வழங்கிய விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | சங்கங்களின் வகைகள் | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் | தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1997-98 | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 5 | .. | 361.00 |
| | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 919 | .. | 349.66 |
| | உழவர் பணியாளர்கள் கூட்டுறவு சங்கம் | 3 | .. | 2.52 |
| 1998-99 | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 | .. | 790.58 |
| | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 969 | .. | 422.59 |
| | உழவர் பணியாளர்கள் கூட்டுறவு சங்கம் | 4 | .. | 4.90 |

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | சங்கங்களின் வகைகள் | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் | தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1999-2000 | — | இல்லை | | |
| 2000-2001 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 42 | .. | 18.61 |
| 2001-2002 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 106 | .. | 45.12 |
| 2002-2003 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 197 | . | 57.74 |

65—

## ஊழியர்கள் நியமனம்

**வினா எண் 41123—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் பணியிடங்களை நிரப்பும்போது ஏற்கெனவே பணிபுரிந்த பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின்கீழ் அடங்கிய இளநிலை உதவியாளர்/தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படுகிறது.

2. மேலும், தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணியின்கீழ் அடங்கியுள்ள இளநிலை ஆய்வாளர் மற்றும் முதுநிலை ஆய்வாளர் ஆகிய



பணியிடங்களும் தமிழ்நாடு கூட்டுறவு பணியின்கீழ் அடங்கிய கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் பணியிடங்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. பொதுவாக மேற்கண்ட பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது தேர்வாணையத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகளுக்குட்பட்டு பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அவ்வாறு தேர்வு செய்யும்போது ஏற்கெனவே பணிபுரிந்து பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கென எவ்வித முன்னுரிமையும் அளிக்கப்படுவதில்லை. தற்காலிகமாக பணிபுரிந்துவரும் அரசுப் பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்துவதற்காக சிறப்புத் தகுதி தேர்வு நடத்த அரசினால் ஆணை வழங்கப்படுகின்ற நேர்வுகளில் ஏற்கெனவே பணிபுரிந்து பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கும் சிறப்புத் தகுதி தேர்வு நடத்த அரசினால் ஆணை வழங்கப்பட்டு வருகிறது.

3. கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த நிறுவனங்களிலுள்ள காலியிடங்களுக்குப் பொதுவாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பட்டியல் பெறப்பட்டு அப்பட்டியலிலிருந்து பணியாளர்கள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு தேர்வு செய்யப்படுகிறார்கள். ஏற்கெனவே கூட்டுறவு நிறுவனங்களிலோ அல்லது அரசுத் துறைகளிலோ தற்காலிகமாகப் பணிபுரிந்து பணியிடம் காலியின்மை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள், அவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்ட ஆணையின் அடிப்படையில் மீண்டும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் அத்தகைய பணியாளர்களின் பெயரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் கூட்டுறவு நிறுவனங்களில் நியமனம் செய்வதற்காகப் பட்டியலில் பரிந்துரைக்கப்படுகிறது.

66—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 4248—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே வடபூதனம் கிராமத்தில் குடிதண்ணீர் விநியோகம் முறையாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறையைக் களைய அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வடபூதனம் குடியிருப்புக்கு பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பழைய மின் மோட்டார்கள் திறன் குறைந்து உள்ளதால் புதிய மின் மோட்டார் பொருத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் குடிதண்ணீர் விநியோகம் மேலும் சீராகும். மேலும் இக்குடியிருப்புக்கு தற்போது செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் பயன்பெற உள்ளது.

**67—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 10653—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், சாந்தப்பாடி துவக்கப்பள்ளியில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், சாந்தப்பாடி துவக்கப் பள்ளிக்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2004 பிப்ரவரி 6]

**68—**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 10778—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், செல்லான் கொட்டாய் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பேடர அள்ளி ஊராட்சி, செல்லான் கொட்டாய் குடியிருப்பிற்கு ஜனவரி 2003-ல் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு பொதுமக்கள் பயனில் உள்ளது.

**69—**

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 12192—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தாரமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட பொட்டனேரி ஊராட்சியில் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீரேற்ற 1 லட்சம் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 6

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி மற்றும் 3 ஒன்றியங்களுக்கான புளோரைடால் பாதிக்கப்பட்ட 136 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பொட்டனேரி ஊராட்சிக்குட்பட்ட 3 குடியிருப்புகள் பயன்பெற உள்ளன. இவற்றில் செவாலானூர் மற்றும் ஆரியகவுண்டன் வளவு குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே முறையே 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தொட்டிகள் உள்ளதால் துணை நீரேற்றுக் குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு உள்ளன. முனியப்பன் கோயிலூர் குடியிருப்புக்கு 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டிக்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட குடியிருப்புகளுக்கான குடிநீர் வழங்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதுதவிர 136 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 179 வழியோரக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பொட்டனேரி ஊராட்சியிலுள்ள 11 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 5/2003-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

**70—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13199—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், இலக்கமநாயக்கன்பட்டி ஊராட்சி, சின்னம்மன் கோவில் பாளையம் புதுக்காலனி, இலக்கமநாயக்கன்பட்டி, காவிலிபாளையம், ஊஞ்சவலசு போன்ற கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம், இலக்கமநாயக்கன்பட்டி குடிநீர்த் திட்டம் சோதனை ஓட்டம் முடிவுற்று ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 6]

சின்னம்மன் கோயில் பாளையம் புதுக்காலனி குடியிருப்புக்கு இலக்கமநாயக்கன்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டமும், காவிரிபாளையம் மற்றும் ஊஞ்சவலசு குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்களும் வரும் நிதியாண்டில் தேவை, தகுதி மற்றும் நிதியாதார வசதி அடிப்படையில் செயலுக்கு எடுத்துக்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**71—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13200—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், நாகமநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள உத்தமபாளையம், நாகமநாயக்கன்பட்டி, தாசநாயக்கன்பட்டி போன்ற கிராமங்களில் குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோயில் ஒன்றியம், நாகமநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள உத்தமபாளையம், நாகமநாய்க்கன்பட்டி, தாசநாயக்கன்பட்டி ஆகிய குடியிருப்புகளுக்கு வரும் நிதியாண்டில் தேவை, தகுதி மற்றும் நிதியாதார வசதி அடிப்படையில் குடிநீர்த் திட்டம் செயலாக்கப் பரிசீலிக்கப்படும்.

**72—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 13445—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 6

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சோம்பட்டி ஊராட்சி, குப்புசெட்டிப்பட்டி கிராமத்திற்குப் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பதால் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சோம்பட்டி ஊராட்சியிலுள்ள, குப்புசெட்டிப்பட்டி குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசை பம்பு திட்டம் 7/2002-ல் முடிக்கப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

**73—**

**கூடுதல் ஆழ்துளைக் கிணறு**

**வினா எண் 13446—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பங்குநத்தம் கொட்டாய் கிராமத்திற்குப் போதுமான குடிநீர் வசதி இல்லாமலிருப்பதால் இங்கு கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பங்குநத்தம் கொட்டாய் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 300



2004 பிப்ரவரி 6]

ஆகும். இக்குடியிருப்பில் ஓர் ஆழ்துளைக் கிணறு மற்றும் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் செயலில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் தற்பொழுது வழங்கப்படுவதால் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்த கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**74—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13462—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி அடுத்த பூதிப்பட்டி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி அடுத்த பூதிப்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 272 ஆகும். இக்குடியிருப்பில் நான்கு கைவிறைப்பான் திட்டங்கள் செயலில் உள்ளன. இக்குடியிருப்பில் தற்போதைய மக்கட் தொகைக்கு ஏற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் வாரிய நிதி நிலைமைக்கேற்ப தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

**75—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 14859—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 6

*(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் ஊராட்சி, ஜீவா நகர், கீரனூர், எட்டியம்புதூர், சுள்ளிவலசு சென்னிமலைப்பாளையம், காமாட்சிபுரம் ஆகிய ஊர்களுக்கு பூமண்டனவலசு அருகிலுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் ஊராட்சியைச் சேர்ந்த வீரான் குட்டை வலசு என்ற குடியிருப்பிற்கு குடிநீர் திட்டம் செயல்படுத்த பூமண்டனவலசு ஊருக்கு அருகில் ஆழ்குழாய் கிணறு 1999-2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆனால் பூமண்டனவலசு மக்கள் அந்த ஆழ்குழாய்க் கிணற்றை தங்கள் ஊர் குடியிருப்புக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று ஆட்சேபம் தெரிவித்ததால் அந்த ஆழ்குழாய்க் கிணறு கீரனூர் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. எனவே ஜீவா நகர், கீரனூர், எட்டியம்புதூர், சுள்ளிவலசு, சென்னிமலைப்பாளையம், காமாட்சிபுரம் ஆகிய குடியிருப்புகளுக்கு பூமண்டனவலசு அருகிலுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எதுவுமில்லை.*

**76—**

## கொசுக்களை ஒழிக்கும் திட்டம்

**வினா எண் 16284—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் கொசுத் தொல்லையால் மக்களுக்கு நோய்கள் வரும் அபாயம் உள்ளதால் கொசுக்களை ஒழிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 பிப்ரவரி 6]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியில் யானைக்கால் நோய் ஒழிப்பு திட்டம் 22-5-1960 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருத்தியமைக்கப்பட்ட யானைக்கால் நோய் ஒழிப்பு திட்டம் 16-7-1968 முதல் இந்நகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரின் மொத்த பகுதியை 6 பகுதியாக பிரித்து ஒவ்வொரு வாரம் கொசுப்புழு மருந்து தெளிப்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் நகரில் உள் கழிவு நீர்க் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்படா வண்ணம் உடனுக்குடன் பணியாளர்களைக் கொண்டு அகற்றப்பட்டு வருகிறது. நச்சுத் தடைத் தொட்டி காற்று போக்கி குழாய்களில் வலை கட்டப்பட்டு கொசு உற்பத்தியாவதைத் தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொசுப்புழு ஒழிப்பிற்கு டேடக்ஸ் 1000 என்ற மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. முதிர்ந்த கொசுக்களை ஒழிக்க பிளைடேக்ஸ் என்ற மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகரின் முக்கியப் பகுதிகளில் அமைந்துள்ள கழிவு நீர்க் கால்வாய்கள் தினந்தோறும் சுத்தம் செய்யப்பட்டு கொசு உற்பத்தி ஆகாமல் இருக்க சீர்காழி நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**77—**

## புதிய மேல்நிலைத் தொட்டிகள்

**வினா எண் 17869—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள மகுடஞ்சாவடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், எடப்பாடி ஒன்றியத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் புதிதாக எத்தனை மேல்நிலைத் தொட்டிகள் கட்ட அரசு உத்தரவு வழங்கியது?*

*(ஆ) எத்தனை மேல்நிலைத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில், எடப்பாடி தொகுதியில் உள்ள மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 18 மேல்நிலைத் தொட்டிகளும், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 49*

[2004 பிப்ரவரி 6

மேல்நிலைத் தொட்டிகளும், எடப்பாடி ஒன்றியத்தில் 62 மேல்நிலைத் தொட்டிகளும் மொத்தம் 129 மேல்நிலைத் தொட்டிகள் கட்ட அரசு உத்தரவு வழங்கியது.

மேற்குறிப்பிட்ட 129 மேல்நிலைத் தொட்டிகளில் 127 மேல்நிலைத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ள இரண்டும், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் உள்ளவை. பொதுமக்கள் ஆட்சேபணை காரணமாக பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**78—**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 21012—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன அள்ளி ஊராட்சி தின்னூர் ஏரி அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மஞ்சநாயக்கன அள்ளி ஊராட்சி, தின்னூர் ஏரி புதிய குடியிருப்பாகும். மக்கட்தொகை மிகக் குறைவாக உள்ளதால் ஊரக குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

**79—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 25775—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஆச்சார அள்ளி ஊராட்சி, ஆச்சார அள்ளியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2004 பிப்ரவரி 6]

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஆச்சார அள்ளி ஊராட்சி, ஆச்சார அள்ளி குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 217 ஆகும். இக்குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் திட்டம், மற்றும் 2001-2002 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சிறு மின் விசைப்பம்பு திட்டம் செயலில் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்ற ஆவன செய்யப்படும்.

**80—**

**கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 25784—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கே. அக்ரகாரம் கிராமத்தில் குடிநீர் கஷ்டத்தைப் போக்க கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கே. அக்ரகாரம் கிராமத்தின் தற்போதைய மக்கட்தொகை 1,196 ஆகும். இக்குடியிருப்பில் ஐந்து (5) கையிறைப்பான் திட்டங்களும் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டமும் தற்போது செயலில் உள்ளன. தற்போதைய மக்கட் தொகைக்கு ஏற்ப கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரும் நிதியாண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற ஆவன செய்யப்படும்.

**81—**

### நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 25791—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கலப்பம்பாடியில் குடிநீர் கஷ்டம் அதிகமிருப்பதால், இங்கு 2 தரை மேல் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கலப்பம்பாடி குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 919 ஆகும். இக்குடியிருப்பில் 5 கையிறைப்பான் திட்டங்கள் செயலில் உள்ளன. நடப்பு நிதியாண்டில் (2002-2003) இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்ற நீராதாரம் தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. போதிய நீராதாரம் கிடைக்கப் பெற்றவுடன் திட்டம் தொடங்கப்பட்டு விரைவில் முடித்து பொதுமக்களின் பயனுக்கு கொண்டுவர தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**82—**

### குடிநீர்க் கட்டணம்

**வினா எண் 31706—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி வியாபார இடங்களுக்கு குடிநீர்க் கட்டணம் எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

(ஆ) மொத்த இணைப்புகள் எத்தனை? ஆண்டு வருமானம் எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 10,000 லிட்டருக்கு மேலே 15,000 லிட்டர் வரை பயன்படுத்தும் ஒவ்வொரு 1,000 லிட்டர் அல்லது அதன் பகுதிக்கு கட்டணம் ரூ.20 வீதமும் குறைந்தபட்ச கட்டணம் ரூ.500-ம் ஆகும். 15,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தும் ஒவ்வொரு 1,000 லிட்டர் அல்லது அதன் பகுதிக்கு ரூ.30 வீதமும் குறைந்தபட்ச கட்டணம் ரூ.2000/-ம் ஆகும்.

(ஆ) மொத்த இணைப்புகள் 970. ஆண்டு வருமானம் ரூ. 73,86,000/-

**83—**

### மரபு பாதுகாப்புப் பிரிவு குறித்த ஆராய்ச்சிக்கு நிதி

**வினா எண் 34635—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மரபியல் துறையில் வெளிநிலை காங்கேய மாடுகளின் மரபு பாதுகாப்புப் பிரிவு பற்றிய ஆராய்ச்சிக்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மரபியல் துறையில் வெளிநிலை காங்கேய மாடுகளின் மரபு பாதுகாப்புப் பிரிவு பற்றி ஆராய்ச்சி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் அளிக்கப்பட்ட ரூ.10.94 இலட்சம் நிதியுதவியுடன் 1-2-2002 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அரசு நிதி ஒதுக்கீடு இல்லை.

84—

**கறவை மாடு வளர்ப்பு பற்றிய பயிற்சி**

**வினா எண் 34636—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எத்தனை பேருக்கு பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் "கறவைமாடு வளர்ப்பு மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு" பற்றிய பயிற்சி இராஜபாளையம் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இராஜபாளையம் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் 326 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கறவை மாடு வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

85—

**விவசாயிகளுக்கு கால்நடை வழங்கும் திட்டம்**

**வினா எண் 37939—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மூலம் ஆடுகள் மற்றும் கோழிகள் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மூலம் ஆடுகள் மற்றும் கோழிகள் வழங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

86—

**ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்**

**வினா எண் 41921—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் செங்கற்பட்டு தொகுதி மையங்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 80 (எண்பது) ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு செங்கல்பட்டு தொகுதி மையங்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் ஏதும் மானியங்கள் வழங்கப்படவில்லை.

87—

**வீட்டு வசதி வாரிய வீடுகள்**

**வினா எண் 3399—திரு. மு. கார்த்தி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 6

*(அ)* சேலம் 2-வது தொகுதி, அய்யம்பெருமாள்பட்டி கிராமத்தில் 1995 முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்ட பல வீடுகள் விற்பனை ஆகாமல் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம், அய்யம்பெருமாள்பட்டி கிராமத்தில் 1995 முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 268 வீடுகள் கட்டப்பட்டன. அவ்வீடுகளில் பெரும்பாலானவை அப்போதைக்கப்போதே விற்கப்பட்டன. மொத்தம் உருவாக்கப்பட்ட 268 வீடுகளில் 21 வீடுகள் மட்டுமே இன்றைய தேதியில் விற்கப்படாமல் உள்ளன. எஞ்சியுள்ள இவ்வீடுகளையும் விற்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விற்பனைக் குழு நியமனம் செய்யப்பட்டு விற்பனைக்கான முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டும் வருகின்றன.

**88—**

### வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டித் தரும் திட்டம்

**வினா எண் 13188—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதிக்குட்பட்ட வேட்டைக்காரன் புதூர் பஞ்சாயத்திலுள்ள அண்ணா நகர், ஜெ.ஜெ. நகரில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழவில்லை.



2004 பிப்ரவரி 6]

**89—**

### சுயநிதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுதல்

**வினா எண் 31720—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்தில் சுயநிதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இத்திட்டம் எப்போது துவங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சேலம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் சுயநிதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் திட்டம் தற்போது வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கான நிலம் முழுமையாக வாரியத்தின்வசம் கிடைக்கப் பெற்றபின் சேலம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் சுயநிதி திட்டத்தில் வீடுகள் கட்டும் திட்டம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**90—**

### வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டுதல்

**வினா எண் 36517—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பரமக்குடியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

91—

**வீடுகள் கட்டும் திட்டம்**

**வினா எண் 38581—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்தில், தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

92—

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைத்தல்**

**வினா எண் 10155—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், சுந்தரராசபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

*(அ)* இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், சுந்தரராஜபுரம் கிராமத்தில் ஏற்கெனவே இருந்த (வி.ஆர்.டி.1146) சுந்தரராஜபுரம் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்து விட்டதாலும், மேற்படி சங்கத்தினை செயல்படுத்துவதற்கு உறுப்பினர்கள் எவரும் முன்வரவில்லை என்பதாலும் மேற்படி சங்கம் 10-06-1996 அன்று கலைக்கப்பட்டுள்ளது.

*(ஆ)* இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

93—

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 21760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் எத்தனை சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 19 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்பட்டுள்ளன.

94—

**காணாமல் போன மீனவர்கள் விவரம்**

**வினா எண் 16873—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டில் மீன் பிடிக்கச் சென்று தமிழக கடல் பகுதிகளில் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் காணாமல் போன மீனவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களின் குடும்பங்களுக்கு அரசு அளித்து வரும் உதவிகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இயற்கை சீற்றத்தால் காணாமல் போன மீனவர்கள் மொத்தம் பத்து பேர்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டத்தில் வீரபாண்டிபட்டினம் கடற்கரையிலிருந்து 27-06-2000 அன்று மீன் பிடிக்கச் சென்று இயற்கை சீற்றத்தால் கீழ்க்கண்ட ஆறு மீனவர்கள் காணாமல் போய்விட்டனர்:—

(1) திரு. பாஸ்கர், த/பெ. மோட்சையா

(2) திரு. ஜான்சன், த/பெ. மோட்சையா

(3) திரு. அந்தோணிசாமி, த/பெ. மோட்சம்

(4) திரு. அந்தோணிசாமி, த/பெ. ஆன்ட்ரூஸ்

(5) திரு. ஆல்பர்ட், த/பெ. மரியான்

(6) திரு. மான்ராஜ், த/பெ. ஆறுமுகம்

(2) மேற்கண்ட ஆறு மீனவர்களும் கடலில் மீன் பிடிக்கச் சென்று கரை திரும்பாததால் அவர்கள் அனைவரும் இறந்ததாக;யீ கருதி அவர்களின் உறவினர்கள் மதசடங்குகள் நடத்திவிட்டனர். இவர்களில் பாஸ்கர், ஜான்சன், த/பெ. மோட்சையா, அந்தோணிசாமி, த/பெ. மோட்சம், அந்தோணிசாமி, த/பெ. ஆன்ட்ரூஸ் ஆகியோர் மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்தனர். ஆல்பர்ட் மற்றும் மான்ராஜ் மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லை. இந்த ஆறு மீனவர்களும் 1999-2000 ஆம் ஆண்டில் தனிநபர் மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் சந்தாத் தொகை செலுத்தவில்லை.

(3) 6 மீனவர்களும் தனி நபர் விபத்துக் காப்புறுதி திட்டத்தின்கீழ் சந்தாத் தொகை செலுத்தாததினால், காப்புறுதி திட்டத்தின் கீழ் ரூ.1,00,000 வீதம் வழங்குவதற்கான கருத்துரு அனுப்பப்படவில்லை. எனினும் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களான ஒன்று முதல் நான்கு வரை உள்ள மீனவர்களின் குடும்பத்திற்கு மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தில் மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் நாகர்கோவில் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனியிலிருந்து 3-1-2003 அன்று ரூ.15,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய/மாநில அரசால் மீனவர்களுக்காக சந்தாத் தொகை செலுத்தும் விபத்து குழு காப்புறுதி திட்டத்தின்கீழ் தலா ரூ.35,000 வீதம் மேற்குறிப்பிட்ட நான்கு மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிடக் கோரி தேசிய மீனவர் கூட்டுறவுக் காப்புறுதி இணையத்திற்கு தனித்தனியான கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. காப்புறுதி நிவாரணம் இதுவரையில் பெறப்படவில்லை. தொடர்ந்து நினைவூட்டப்பட்டு வருகின்றது.





(4) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கத்தார் நாட்டில் 8-02-2001 அன்று மீன் பிடிக்கச் சென்று இதுநாள் வரையிலும் கரை திரும்பாத காரணத்தால் அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000 வீதம் வழங்க ஆணையிட்டதன் பேரில் 15-12-2001 அன்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களால் மேற்குறிப்பிட்ட நான்கு மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.50,000 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**95—**

### சில்லறை மீன் விற்பனை அங்காடி அமைத்தல்

**வினா எண் 37550—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் சேராப்பட்டு, மூங்கில் துறைப்பட்டு நகர், கள்ளக்குறிச்சி, கச்சிராயபாளையம் ஆகிய இடங்களில் சில்லறை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதியில் சேராப்பட்டு, மூங்கில் துறைப்பட்டு

[2004 பிப்ரவரி 6

நகர், கள்ளக்குறிச்சி, கச்சிராயபாளையம் ஆகிய இடங்களில் சில்லறை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

96—

**அடுக்குமாடி குடியிருப்புகள் செப்பனிடுதல்**

**வினா எண் 40375—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் கிராமத்தில் பழுதடைந்துள்ள மீன்வளத் துறையின் அடுக்குமாடி குடியிருப்புகளை அரசு செப்பனிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மீனவர் வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே திருச்சினாங்குப்பம் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நிவர்த்திக்கும் பிரச்சினை தற்போது எழாது.

97—

**மாணவர் விடுதி கட்டும் திட்டம்**

**வினா எண் 32975—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சியில் உயர்நிலைப் பள்ளியில் அரசு மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?



2004 பிப்ரவரி 6]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

98—

**மாணவர் விடுதியில் தங்கிப் பயில்வோர் விவரம்**

**வினா எண் 34737—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் இயங்கும் மாணவர் விடுதிகளில் தங்கிப் பயில்வோரின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் விடுதி ஏதும் இயங்கவில்லை. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் செங்கல்பட்டில் இயங்கி வரும் அரசு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கிப் பயில்வோரின் எண்ணிக்கை 50 ஆகும்.

99—

**திரையரங்குகளைப் பார்வையிட குழு அமைத்தல்**

**வினா எண் 24797—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் திரையரங்கம் மற்றும் கழிவறைகள் சுகாதார முறையுடன் நடைபெறுகிறதா என பார்வையிட அரசு ஒரு குழு அமைக்குமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் திரையரங்கம் மற்றும் கழிவறைகள் சுகாதார முறையுடன் நடைபெறுகிறதா என பார்வையிடவும், திரையரங்குகளில் சுகாதாரம் தொடர்பாக புகார்கள் வருவதாகத் தெரிய வந்தாலும், அரசு கடித எண்.35964/ சினிமா-1/2002-ல் உள் துறை, நாள் 16-4-2002-ல் கீழ்க்கண்ட நபர்கள் கொண்ட குழு திரையரங்குகளில் கூட்டாகச் சென்று பார்வையிட ஆணையிடப்பட்டுள்ளது.

(1) வருவாய் கோட்டாட்சியர்

(2) மின் ஆய்வாளர்

(3) சுகாதார அதிகாரி

(4) நிலைய தீயணைப்பு அதிகாரி

(ஆ) இக்குழுவின் மூலம் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்ய திரையரங்க உரிமதாரர்களுக்கு உரிய அறிவுரை வழங்கவும், அறிவுரையை நிவர்த்தி செய்யாத நிலையில் உள்ள திரையரங்கு உரிமதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், விதி எண்8-ன்கீழ் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.



**100—**

**கேளிக்கை வரி ஏய்ப்பைத் தடுத்தல்**

**வினா எண் 33975—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள திரையரங்குகளில் சினிமா பார்க்க வருபவர்களிடம் டிக்கெட் வழங்காமல் அவுட்பாஸ் கொடுத்து கேளிக்கை வரியை ஏய்ப்பு செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இவற்றைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் வணிக வரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நுழைவுச் சீட்டுகள் கேளிக்கை வரி முத்திரைகள் இடப்பட்டு சினிமா பார்க்க வருபவர்களிடம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து திரையரங்குகளிலும் நுழைவுச் சீட்டுகளைத் தவிர அவுட்பாஸ் ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) வணிக வரித் துறை கேளிக்கை வரி அலுவலரும் வருவாய்த் துறை அலுவலரும் ஒருங்கிணைந்து மாதம் ஒருமுறை அனைத்து திரையரங்குகளிலும் தணிக்கை மேற்கொள்ளப்படுவதால் கேளிக்கை வரியினை வரி ஏய்ப்பு செய்யப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*





## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. சிவபுண்ணியம்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

**திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மற்றதெல்லாம் ஆய்வில் இருக்கிறது.*

**திரு. மு.பெ. சாமிநாதன்:** *அமராவதி ஆற்றில் மணல் எடுப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லாம் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) வேலு, ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.*

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. வை. சிவபுண்ணியம்.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே நேற்றையதினம் சில செய்திகள் குறிப்பிடப்பட்டு அவை முற்றுப் பெறாமலேயே இருக்கின்றன; திரும்பவும் ஒரு விவாதமாக மாற்ற வேண்டிய அவசியமில்லை; காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து நான் மிகவும் பணிவோடு திரும்பத் திரும்ப வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நாம் காவிரி நீர் பிரச்சினைப் பற்றிப் பேசுகிறபோது அது லாவணிக்கச்சேரியாக மாறிவிடுகிறது. அதுதான் வருத்தமாக இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து அவர்கள் அதை ஒரே குரலாக அங்கே குரல் கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே, நாம் லாவணிக்கச்சேரி நடத்துவதைப் போன்ற உணர்வுகள் வருகிறபோது கர்நாடகத்திலே பிடிவாத குணம்*

ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே, லாவணிக் கச்சேரி என்று கிராமப்புறத்திலே சொல்கிறபோது ரதி மன்மதன் கதையிலே சொல்லி, விடிய விடிய எரிந்தாரா இல்லையா மன்மதன் என்று விடிய விடிய கதை சொல்லி, விடிந்ததற்குப் பின்னால் முடிவு பெறாமலேயே அது முடிகிற நிகழ்ச்சியாக இருப்பதைப்போலவே 100 ஆண்டுகால பிரச்சினையாக காவிரி நீர்ப் பிரச்சினை இருக்கிறது; ஒரு நூற்றாண்டு முடிந்துவிட்டது. அடுத்த நூற்றாண்டில் அடி எடுத்து வைத்துவிட்டோம். ஆனாலும், தீர்வு காண முடியவில்லையே என்ற அந்த ஆதங்கம், வேதனை, வருத்தத்தின் அடிப்படையிலேதான் நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

குறிப்பாக 10 மாவட்டங்கள், தஞ்சை, நாகை, திருவாரூர், அதேபோல, பெரம்பலூர், கடலூர், பாண்டிச்சேரி மாநிலத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கின்ற காரைக்கால், புதுக்கோட்டை, திருச்சி, கரூர், ஈரோடு, சேலம், இந்த மாவட்டங்களுடைய பிரதான பாசனப் பகுதியாகவும், உற்பத்திக்குரிய அடித்தளமாகவும் விளங்கக்கூடிய காவிரி அது. கிட்டத்தட்ட 10 மாவட்ட மக்களுடைய, கிட்டத்தட்ட 2 கோடி மக்களுடைய உயிர்ப் பிரச்சினை அது. தமிழ்நாட்டினுடைய 6 கோடி மக்களிலே 2 கோடி மக்கள் அதை நம்பியிருக்கிறார்கள். ஆகவேதான் இந்தக் காவிரி நீர் பிரச்சினைக்குரிய விஷயத்தில் தீர்வு காணுவதற்கான முயற்சியை விரைவாக எடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்த ஆண்டு தண்ணீர் வருவதற்குரிய முயற்சி என்ன என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இப்போது முடிந்து போய்விட்டது. ஆகவே, மீண்டும் அதில் என்ன செய்வது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றுதான் சென்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கூடுகிறபோது அந்தப் பிரச்னையை நான் எழுப்பியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதிலே சில முரண்பட்ட கருத்துக்கள் இருந்தால்கூட, ஒரு ஒத்த கருத்துடைய தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலே மத்திய அரசாங்கத்தினை வலியுறுத்தி அதை நாம் கேட்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து. மத்திய அரசாங்கம் இதைப் பற்றிய ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றத்திலேயே கொண்டுவருவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்று நம்முடைய அரசமைப்புச் சட்டத்திலேயே





சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பாயும் நதிகளில் கட்டுப்பாடோ அல்லது மேம்பாடோ பொது நன்மைக்காகச் செய்யப்பட வேண்டுமென்று கருதினால் மத்திய அரசு நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றி அத்தகைய திட்டங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று நமது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு முயற்சி எடுக்கப்படுமானால், கர்நாடக அரசை அது வலியுறுத்தி நமது உரிமையை நிலைநாட்டுவதற்கான முயற்சியை எடுத்து காவிரியிலே தண்ணீர் நிரந்தரமாக வரச்செய்வதற்கான முயற்சிகளை எடுக்க முடியும். அதைச் செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

குறிப்பாக, நமது பாரதப் பிரதமர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் பங்குகொண்ட கன்னியாகுமரி விழாவிலே ஒரு திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. நதிகள் இணைப்புத் திட்டத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அது எந்த அளவிற்கு நடைபெறும், இல்லை என்ற பிரச்சினை வேறு. ஆனால், அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று நமது பாரதப் பிரதமர் இப்போதுதான் சொல்கிறார். நாடாளுமன்ற தேர்தல் வருகிற இந்தச் சூழ்நிலையில் சொல்கிறார். பரவாயில்லை, இப்பொழுதாவது சொன்னாரே என்று எனக்கு ஒரு மகிழ்ச்சி. ஆனாலும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியைப் பற்றிச் சொல்கிறபோது அதற்குரிய நிதியொதுக்கீடு அதற்கான தேவைகள், நில ஆர்ஜிதம், எல்லாவற்றையும் விரைவாகக் கணக்கில் கொண்டு செய்யப்படவில்லை என்று சொன்னால், நதிகள் இணைக்கப்படவில்லை என்று சொன்னால், நம்முடைய நாடு குடிநீருக்காகவே மிகப் பெரிய அல்லல்படுகிற நாடாக மாறப்போகிறது. அதிலே முதன்மையாக நம்முடைய மாநிலம் ஆட்பட்டு விடுமோ என்ற அபாயம் இருக்கிறது என்பதை நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த உணர்வுகளையாவது புரிந்து அதற்கான முயற்சியின் அடிப்படையில் நதிகள் இணைக்கப்பட வேண்டும் என்பதற்கான தீர்மானம் வேண்டும்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2004 பிப்ரவரி 6

உச்ச நீதிமன்றத்தாலே ஆணை ஆக்கப்பட்டு அதற்காக ஒரு குழு நியமனம் செய்யப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது என்ற கருத்து சொல்லப்பட்டு இருந்தாலும், அந்த ஆய்வு விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே நமது சட்டமன்றம், நதிகள் இணைக்கப்பட வேண்டுமென்று தனித் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் சொல்கிறபோது, இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை காரணத்தினாலே எங்களது மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிற பாதிப்புகள்; இதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தால் அது பழங்கதை போலத்தான் பலருக்குத் தோன்றுகிறது; வருத்தமாகவும் இருக்கிறது. எங்களுக்கேகூட அது சங்கடமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் எங்களுடைய பிரச்சினையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, வறட்சியின் கோரப்பிடிக்கு உள்ளாகி இருக்கிற அந்தக் காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சி என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் தேசிய இடர்ப்பாடு நிதியிலிருந்து நிதியைப் பெறுவதற்கான முயற்சியை மாநில அரசு எடுக்குமென்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிற அடிப்படையில் வெறும் ஏட்டளவில் இல்லாமல் உடனடியாக நிதியைப் பெற வேண்டும். அந்த நிவாரணம் உடனடியாக அந்த விவசாயிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சென்றடைய வேண்டும். அதற்குரிய முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, பாதிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் நிதியாகக் கொடுக்கப்பட வேண்டும். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டு இன்றைக்கு ஜீவ மரணப் போராட்டத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கிற விவசாயத் தொழிலாளக் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அல்லது குறைந்தபட்சமாக 750 ரூபாயாவது அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டும். மாதம் 30 கிலோ அரிசி வழங்க வேண்டும். இவற்றை எல்லாம் செய்யவில்லை என்று சொன்னால், இந்த மாதக் கடைசியிலிருந்து அடுத்த மாதத்திலே மிகப் பெரிய பட்டினிக்குரிய பிரச்சினைகள் தொடங்கி அதுவே ஒரு அவலமாக மாறிவிடுகிற அபாயம் இருக்கிறது என்பதை நான் இந்த



2004 பிப்ரவரி 6] [திரு. வை. சிவபுண்ணியம்]

அரசுக்கு எச்சரிக்கையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, கொள்முதல் பற்றி நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். திரும்பவும், இன்றைக்கு எல்லா பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மூலமாக இந்தச் செய்திகள் சொல்லப்படுகின்றன. காவிரிப் பாசனப் பகுதியிலே 291 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. திறக்கப்படவில்லை என்று நான் வாதம் செய்யவே இல்லை. அதைத்தான் எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, திறக்கப்பட்டிருக்கிற கொள்முதல் நிலையங்கள் மூலமாக நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்பதுதான் உண்மை. இந்த உண்மை குறித்து தயவுசெய்து அரசு திரும்பவும் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்முதல் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், அதற்குரிய காரணங்கள் சொல்லப்படுகிறபோது—இவ்வளவு பெரிய வறட்சி, தண்ணீருக்காக ஏங்கி, ஏங்கி, செத்து, செத்து பிழைத்த அந்த நெற்கதிர் இருக்கிறதே அதை—இவர்கள் கேட்கிற அந்தத் தரக் கட்டுப்பாட்டின் அடிப்படையிலே எந்தவொரு விவசாயியாலும் கொடுக்க முடியாது. ஆகவே, இந்தத் தரக் கட்டுப்பாட்டின் காரணமாகவே நெல் கொள்முதல் தடைபட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே, அந்தத் தரத்திற்கு இணையாகக் கொடுப்பதற்கான வாய்ப்புள்ள நெல் அந்த மாவட்டத்தில் அறவே கிடையாது. ஆகவே, தரக் கட்டுப்பாடு நீக்கப்பட்டு விவசாயிகளைப் பாதுகாக்கிற முறையிலே உடனடியாகக் கொள்முதல் தொடங்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் நேற்றே அவையிலே தெளிவாக விளக்கினேன். Food Corporation of India மைய அரசினுடைய சில விதிமுறைகளின் அடிப்படையில் இந்தத் தரக்கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்பது தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கு ஏற்ப மைய அரசுக்கு நாங்கள்

தற்போது எழுதி இருக்கிறோம். இந்தத் தரக்கட்டுப்பாட்டை ஓரளவுக்குத் தளர்த்தி (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். இந்தத் தரக்கட்டுப்பாட்டை ஓரளவுக்குத் தளர்த்தி விவசாயிகளிடமிருந்து இன்னும் அதிகமான நெல்லைக் கொள்முதல் பண்ணுவதற்கு மைய அரசின் அனுமதியைப் பெற வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையையொட்டி தற்போது மைய அரசுக்கு தமிழக அரசு எழுதி இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுங்கள்?

***திரு. கோ.சி. மணி:** தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்திலேயே முடிவெடுத்துத் தரக்கட்டுப்பாட்டையும், விலை உயர்வையும், அதற்கான நிவாரணத் தொகையையும் அளிக்க வேண்டுமென்று திட்டமிட்டு 40 ரூபாய் வரையில் உதவித் தொகையும் வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு கேட்டபோது கூட இது சணல் கிரயம், சாக்கு கிரயம், தையற் கூலி, வண்டிச் சத்தம் என்று பதில் அனுப்பப்பட்டது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர்* அவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அந்தக் காலமாக இருக்கலாம். அதே மைய அரசுதான் தற்போது இந்தத் தரக்கட்டுப்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்தி வருகிறது; வற்புறுத்தி வருகிறது; அதைத் தளர்த்த வேண்டும் என்று மாநில அரசு மைய அரசைத் தற்போது கேட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இரண்டு மணித்துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தரக்கட்டுப்பாட்டு நிபந்தனைகளையெல்லாம் தளர்த்த வேண்டும் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். அப்படித் தளர்த்துகின்ற நேரத்திலே எந்தெந்த வகையிலே, எதையெதைத் தளர்த்தச் சொல்கிறீர்கள்? கூடுதலாகத் தமிழக அரசு ஏதாவது ஊக்கத் தொகையைச் சேர்த்து வழங்க இருக்கிறதா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அந்த ஈரப் பசையைப் பொறுத்தவரைக்கும் அதனுடைய தரத்தை இன்னும் சற்றுத் தளர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகள் உழவர் பெருமக்களிடமிருந்து நிறைய வந்திருக்கின்றன. அந்தக் கருத்தை மைய அரசுக்கு நாம் வலியுறுத்தியிருக்கிறோம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே தரக்கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான அந்த ஆலோசனையை வழங்கி உதவி செய்யவேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள், வரவேற்கிறேன். ஆனால், அந்தக் கடிதம் எழுதி, உத்தரவு வருவதற்குள்ளாகவே நெல் கொள்முதலே முடிந்து போய்விடும். அதிலே நிர்வாக ரீதியாக, நடைமுறை ரீதியாக இருக்கிற சிக்கலை தயவுசெய்து உணர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படியல்ல. மைய அரசு இடவேண்டிய ஆணையை மாநில அரசே இடுவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை. இது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவேதான் நமது மாநில அரசே கொள்முதல் கொள்கையை அறிவித்திருந்தால் இவ்வளவு சிரமங்களே ஏற்பட்டிருக்காது. அதைச் செய்வதற்கு மாநில அரசு ஏன் தயக்கம் காட்டியது என்பதுதான் புரியவில்லை. இவ்வளவு பாதிப்பிலே இருக்கிற அந்த விவசாயிகளைப் பாதுகாக்க நமது மாநில அரசே கொள்முதல் செய்திருக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து; உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாகக் குடிநீர்ப் பிரச்சினை. சென்னைக் குடிநீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக வந்துகொண்டிருக்கிறது. இதற்கான முயற்சிகளைப்பற்றி இப்போது சொல்கிறபோது வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான முயற்சிகள் என்று சொல்கிறார்கள். எங்கிருந்தாவது தண்ணீர் சென்னைக்கு வரவேண்டும் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், வீராணத்தை நம்பியிருக்கிற அந்தப் பாசனப் பகுதிகளுக்கே போதுமான தண்ணீர் இல்லாதபோது சென்னைக்கும் சேர்ந்து குடிநீரை வழங்குவது என்பது சாத்தியமா என்பதுதான் பிரச்சினை. இது பல முறைகளிலே

கேள்வியாக எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், ஆய்வு ரீதியாகப் பார்த்தால் கிட்டத்தட்ட 64,000 ஏக்கர் பாசனப் பகுதியாக அந்த வீராணம் பகுதியிலே இருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 25,000 ஏக்கரில் இருபோக சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் சேர்த்து, இப்போது அது தூர் வாரப்பட்டிருக்கிற கொள்ளளவின் அடிப்படையில் பார்த்தால்கூட 10 முறை அந்த வீராணம் எரியை நிரப்பினால்தான் அந்த 64,000 ஏக்கருக்கே பாசனத்தைக் கொடுக்க முடியும். (குறுக்கீடு) இதைப் பெற்றதற்குப் பின்னாலேதான் திரும்ப சென்னைக்குக் குடிநீரைக் கொண்டு வந்து சேர்க்க முடியும். ஆனால், இப்படி ஒரு இக்கட்டான நிலையில் இப்போது என்ன நடக்கப்போகிறது என்று தெரியவில்லை. கிருஷ்ணா நதிநீர் என்னவாயிற்று என்பதே கேள்விக் குறியாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஆங்கு அந்த ஆயக்கட்டுக்கு உட்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துத் தண்ணீரையும் தந்துவிட்டு, அதற்கு மேல் வருகின்ற உபரி நீர்—கொள்ளளவை அதிகப்படுத்தி, அந்த உபரி நீர்—மட்டும் தான் சென்னைக்கு வரும் என்பதை நான் அரசின் சார்பில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் உரையை முடியுங்கள், அத்துடன் முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** உரையை முடித்துவிடுகிறேன். சென்னை குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கு அவசர வேகத்திலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இங்கே பேருந்துகள் பற்றி ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு முரண்பட்ட தகவல் இருக்கிறது. சென்ற முறை அறிவித்தபோது, குறிப்பாக 31-3-2003 நிலவரப்படி மாற்றப்படவேண்டிய பழைய பேருந்துகளினுடைய எண்ணிக்கை 6,376 என அரசு குறிப்பிட்டது. கிட்டத்தட்ட 38.2 சதவீதம். ஆனால், இப்போது சொல்கிறபோது 2,500 பழைய பேருந்துகள் மாற்றப்படும் என்று சொல்லிவிட்டு, 6,000 பேருந்துகளைச் சரி செய்வதற்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே 6,376 பேருந்துகள் உபயோகம் இல்லை என்று சொல்லிவிட்டு, அவற்றையே சரி செய்வது என்று



முயற்சி எடுத்தால் மன்னார்குடி-திருவாரூர் சாலையிலே நடந்த சம்பவங்கள் தொடருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே,...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே முரண்பட்ட கருத்து என்ன இருக்கிறது என்பதை எனக்கு உறுப்பினர் அவர்கள் தெளிவாக விளக்க வேண்டும். 6,000 பேருந்துகள் முழுமையாகப் பழுது நீக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30 கோடி ரூபாயை சிறப்பு நிதியொதுக்கீடாக இப்போது அனுமதித்திருக்கிறார்கள். ஆகவே, 6,300 பேருந்துகள் மாற்றப்பட வேண்டியது என்று சொல்லியிருக்கின்றபோது அதிலே பழுதுபார்த்து ஓடத் தகுதியுள்ள பேருந்துகள் 6,000. ஆகவே, 2,500 பேருந்துகள் பழுதுபார்த்தாலும் ஓடுவதற்குத் தகுதியற்ற பேருந்துகள் எனக் கணக்கெடுத்து அதிலே 2,500 பேருந்துகள் புதிய பேருந்துகளாக வாங்கியிருக்கிறோம். இதிலே முரண்பட்ட கருத்திற்கு இடமில்லை. மன்னார்குடி சம்பவங்கள் என்று சொன்னார்கள். ஆனால், அதே தி.மு.க. ஆட்சியிலும் இதேபோல் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. தி.மு.க. ஆட்சியிலேகூட விழுப்புரத்திலே (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

*முற்பகல் 10—15*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நியாயப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இந்த மாதிரி சம்பவம் தி.மு.க. ஆட்சியில் 1996-ல் நடந்திருக்கிறது. இதைப்போல பேருந்தில் இரண்டு பேர் கீழே விழுந்து இறந்திருக்கிறார்கள். நான் எதற்காக சொல்ல வருகிறேன் என்று சொன்னால், இது ஒரு விபத்துதான். அந்த ஆட்சி மீது நான் சொல்ல வருவது, அப்படிப்பட்ட சம்பவம் நடந்ததற்குப் பின்பும் அந்த ஆட்சியில் அந்த நிலையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனுக்குடன் அதற்கென்று நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட சம்பவங்கள் வருங்காலத்தில் நிகழக்கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு நடவடிக்கைகளை

எடுத்திருக்கிறார்கள். அதனுடைய ஒரு அம்சம்தான் 6,000 பேருந்துகளைப் பழுது நீக்குவதும், 2500 புதிய பேருந்துகளை வாங்குகின்ற நடவடிக்கையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்தைத்தான் நானும் சொல்லுகிறேன். ஆனால் இப்போது நடந்த விபத்து விபரீதம் ஆகிவிட்டது. அது படிக்கட்டில் இருந்து விழுந்து இறந்தார். இது பஸ் உள்ளே உள்ள பெரிய ஓட்டையில் இருந்து விழுந்துவிட்டார், இறந்து போய்விட்டார் என்பதுதான் இதிலே இருக்கிற செய்தி.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டில் இருந்து விழவில்லை. தி.மு.க. ஆட்சியின்போது விழுந்ததை நான் அப்படியே படித்துச் சொல்கிறேன். பின் பகுதியிலே 7-வது சீட்டில், பணிமனை திருக்கோயிலூர், தேதி 28—9—1996 அன்று காலை 8-40 மணி அளவில், பேருந்து எண் டி.என்.32-0051, தடம் எண் டி.17, நகரப் பேருந்து, திருக்கோயிலூர்-ஏமத்தூர், இந்த வழித்தடத்தில் அன்றைக்கு வலதுபுறம் பின் மட்காடுக்கு முன்னால் உள்ள 7-வது சீட்டுக்குக் கீழே உள்ள பிளாட்பார பலகை இல்லாத காரணத்தினால் திருமதி டி. இராஜாத்தி, பெண், வயது 25 மற்றும் திருமதி பெரிய பாப்பா, பெண், வயது 45 ஆகிய இருவரும் அந்தப் பலகை ஓட்டையின் வழியே விழுந்து இறந்து போனார்கள். முதலில் இராஜாத்தி என்பவர் ஓட்டையின் வழியே விழுந்ததைப் பார்த்து அவருக்கு உதவி செய்ய கையை நீட்டியதால் பெரியபாப்பாவும் அந்த ஓட்டை வழியே விழுந்து இறந்து போனார். இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த சம்பவம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்போது நடந்த சம்பவத்திற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் சம்பவத்தைப் பற்றி சொல்லவில்லை. அது நடந்தது தவிர்க்க முடியாதது. ஆனால் அதற்கு உடனடியாக அன்றைக்கு இருந்த ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. ஆனால் இப்போது நடந்த சம்பவத்தை அரசு நியாயப்படுத்த விரும்பவில்லை. அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தவறுக்கு உரிய அதிகாரியின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், மாண்புமிகு அம்மா அவர்கள்.



அதற்குப் பின்பாகவும் இப்படிப்பட்ட நடவடிக்கை தொடரக்கூடாது என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதனுடைய விளைவுதான் புதிய பேருந்துகள் வாங்குவதும், பழைய பேருந்துகளைப் பழுது நீக்குவதற்கான போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை வைத்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இப்படிப்பட்ட ஒரு விபத்து நடைபெற்றால் இப்போது நடைபெறக்கூடாதா என்று கேட்கிற கேள்வியாக அது ஆகிவிடும். ஆகவே, எந்த விபத்தாக இருந்தாலும் அது நடைபெற்ற நாளுக்குப் பின்னர் அப்படிப்பட்ட விபத்து மறுபடியும் நடைபெறாமல் இருப்பதிலே யாராக இருந்தாலும் பொறுப்பேற்று செயல்பட வேண்டும். அதற்கு அதிகாரிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அது போலவே முதல்வருடைய தலையீட்டால் மலேசியா, மாலத்தீவு போன்ற இடங்களில் சிறையில் வாடக்கூடிய தமிழர்களைப் பாதுகாப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்முடைய ஆளுநர் உரையில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அது நல்ல அக்கறை, அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் உங்களின் தலைமையின்கீழ் செயல்பட்ட அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை சிறையில் அடைப்பது, பணியில் இருந்து நீக்குவது போன்ற அந்தக் காரியத்தைச் செய்கிறபோது, அதன்மீது ஒரு அக்கறை செலுத்தியிருந்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய பணிவான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். திரு. பிச்சாண்டி.

[2004 பிப்ரவரி 6

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, ஒரே வரியில் உரையை முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிச்சாண்டி

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு வரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, பேசுங்கள். (குறுக்கீடு) வரியை நான் நிரப்பிக்கொள்கிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் அனுமதி கொடுங்கள், ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகளைப் பற்றிச் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்புப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 12 மணி வரை திறப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வர்த்தக ரீதியாகப் பார்த்தால் வேறு ஒரு குறை வருகிறது. மதுமானக் கடைக்கு ரொம்ப சம்பந்தப்பட்டது பெட்டிக்கடையில் இருக்கும் ஊறுகாய் மட்டை; ஊறுகாய் மட்டை வாங்குவது 10 மணியோடு முடிகிறது. மதுபானக் கடை 12 மணி வரை திறந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஊறுகாய் மட்டை வாங்குவதை சிபாரிசுக்காகச் சொல்லவில்லை. ஆனால் வர்த்தக ரீதியாகப் பார்த்தால் பெட்டிக் கடை, மளிகைக் கடை, சாப்பாட்டுக் கடைகளை எல்லாம் 9 மணி, 10 மணிக்கெல்லாம் காவல் துறை மூடச் சொல்கிறது. ஆனால் 12 வரை மதுபானக் கடைகளை திறந்து வைக்கச் சொல்கிறது. நாட்டு மக்களைத் தொடர்ந்து அந்த போதையிலேயே இருக்கச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டாம் என்பது என்னுடைய பணிவான கருத்து. எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய தமிழ்நாடு அரசிலே பதினைந்து முறைகள் (குறுக்கீடு) இல்லை, இல்லை.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிச்சாண்டி, பிச்சாண்டி (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



2004 பிப்ரவரி 6]

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்)-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நிறையப் பேர் பேச வேண்டும்.

**திரு. கு. பிச்சாண்டி:** மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரை என்பது ஓர் அலங்கார நிலையாக இருக்கிறதே தவிர நாட்டுமக்களுக்காக நல்ல பணிகளை ஆற்றக்கூடிய திட்டங்கள் அதிலே இருக்கிறதா என்றால் இல்லை. இன்றைக்கு இந்த ஆளுநர் உரை பச்சை நிறத்திலே இருக்கிறது. முதலமைச்சர் கலந்துகொள்கிற விழாக்கள் எல்லாம் பச்சை நிறத்திலே இருக்கின்றனவே தவிர, தமிழகம் இன்றைக்கு வறண்டுபோய் இருக்கிறது. விவசாயிகள் இன்றைக்கு பசுமை இழந்து, அவர்கள் எல்லாம் மிகவும் கவலை அடைந்து இருக்கக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு தமிழகத்தினுடைய நிலைமை. ஒரு வரலாறு காணாத வறட்சியால் இன்றைக்குத் தமிழகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கின்றனவா என்றால் இல்லை. இதிலே சாதனை என்று சொல்வது; ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே வழங்கிய பல்வேறு திட்டங்களை நிறுத்தி இருப்பதுதான், அதைத்தான், சாதனை என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, இன்றைக்கு நாட்டு மக்களுக்காக இந்த ஆட்சியிலே, கவர்னர் உரையிலே சிறப்பாக திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை.

குறிப்பாக, என்னுடைய தொகுதியான திருவண்ணாமலை தொகுதியிலே 'குரும்பங்களிங்கள் ஏரி' என்ற கிராமத்திலே சுமார் ஒன்பது ஆண்டு காலமாக ஓர் ஆரம்பப் பள்ளி இருந்தது. அதற்கு அழகான கட்டடங்கள் அரசுத் துறையின் மூலம் கட்டப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு மத்திய அரசாங்கம் 'சர்வ சிக்ஷா அபியான்' திட்டத்தின் மூலம் அனைவருக்கும் கல்வி வழங்கப்படவேண்டுமென்று பள்ளிக்கூடங்களையெல்லாம் திறந்ததாக இந்த கவர்னர் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பள்ளி கடந்த இரண்டு மாதகாலமாக மூடப்பட்டிருக்கிறது. அதை இந்தத் துறை அதிகாரிகளோ, அவர்களோ திறப்பதற்கான நடவடிக்கை இல்லை. இன்றைக்கு

[திரு. கு. பிச்சாண்டி] [2004 பிப்ரவரி 6

அனைவருக்கும் கல்வி தருகிறோம் என்று சொன்னவர்கள்; ஆறு கிலோ மீட்டர் அவர்கள் ஆற்றைக் கடந்து சென்று படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதால் அந்தப் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு, அதற்காக ஓர் அழகான கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் பத்திரிகையிலே இன்றைக்கு வந்திருக்கின்றன. ஆனால், அப்படிப்பட்ட நிலையிலே ஓர் ஆரம்பப் பள்ளியை மூடியிருப்பது என்றால் இந்த ஆட்சி கல்வியில் அக்கறை கொண்டிருக்கிறதா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர்கள். ஒரு பள்ளிக்குக் குறைந்தபட்சம் 25 மாணவர்கள் வருகை இருக்க வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அப்படிப் பள்ளிக்கு வருகை தருகிற மாணவர்களின் எண்ணிக்கை குறைகின்ற பட்சத்தில் அந்தப் பள்ளியை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அந்தக் காரணத்தினாலே அந்தப் பள்ளி மூடப்பட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற குழந்தைகளைப் பள்ளியில் அதிக அளவில் சேர்ப்பதற்கு முன்வருவார்களேயானால், நலமாக இருக்கும். நிச்சயமாக நடைபெற்றுவருகின்ற பள்ளியை யாரும் வேண்டுமென்று மூடமாட்டார்கள். எனவே, மாணவர்களுடைய அல்லது மாணவிகளுடைய வருகைக் குறைவின் காரணமாக அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை என்று சொன்னால் மாணவர்களுடைய, மாணவிகளுடைய எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு அங்கே நாம் முன்வரவேண்டும். அந்த முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் குறைபாட்டை அல்லது இந்த நிலைமையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுகுறித்து அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளி தொடர்ந்து நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் எண்ணிக்கை குறைந்து இருக்கிறது என்றால் இன்றைக்கு கிராமத்திலே இருப்பவர்கள் பலர் வேலை கிடைக்காமல், பெங்களூர், சென்னை போன்ற இடங்களுக்கு பிழைக்கச் சென்று விடுகிறார்கள். ஆகவே, இன்றைக்கு அங்கே மாணவர்கள் இல்லை. ஒன்பது ஆண்டு காலமாக நடந்துவந்த, கட்டடம் கட்டப்பட்டு அந்தக் கட்டடத்தை



2004 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் சொன்னதைப்போல மாணவ, மாணவிகளுடைய வருகைக் குறைவின் காரணமாகத்தான் அந்தப் பள்ளியை தொடர்ந்து நடத்த முடியவில்லை. இருக்கின்ற மாணவ, மாணவிகளுடைய எண்ணிக்கை மொத்தமே 16 தான். நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும், 16 குழந்தைகளை வைத்துக் கொண்டு, ஆசிரியர்களை நியமித்து எப்படி பள்ளியை தொடர்ந்து நடத்த முடியும்? அதுவும் மூன்று மாத காலம் நாங்கள் அவகாசம் கொடுத்தோம். ஊர் மக்களைக் கூட்டி, கல்விக் குழுவைக் கூட்டி, ஊர் பெரியவர்களைக் கூட்டி மாணவ, மாணவிகளுடைய வருகையை நீங்கள் கொஞ்சம் அதிகம் ஆக்குங்கள் என்று கேட்டோம். மூன்று மாதம் கால அவகாசம் கொடுத்தும் அங்கே மாணவர்களுடைய எண்ணிக்கை இன்னும் கூடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து அந்த எண்ணிக்கையைக் கூட்டினால், நிச்சயமாக அந்தப் பள்ளியை நாளையிலிருந்துகூட நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற்குக் கல்வித் துறை அதிகாரிகளும் முயற்சி எடுத்து வருகிறார்கள். ஊர் மக்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அதுதான் இருக்கின்ற நிலைமை.

முற்பகல் 10-25

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தங்களுடைய பிள்ளைகளையெல்லாம் அனுப்புகிறோம் என்று அங்கே அந்தத் துறை அதிகாரிகளிடம் கடிதம் கொடுத்தும்கூட பள்ளிக்கூடம் திறக்கப்படவில்லை என்பதுதான் உண்மை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஆகவே, இப்போது அனைவருக்கும் கல்வி என்கின்ற திட்டம் இருக்கும்போது இருக்கின்ற பள்ளிகள் மூடப்படுகின்றன. புதிய பள்ளிகளை இப்போது உருவாக்குவதிலேதான் இந்த அரசு கவனம் செலுத்திட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சாலைகளுக்குப் பல கோடி ரூபாய் ஒதுக்கியதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வாக்களித்த வாக்காளர்களெல்லாம் பஸ்ஸிலே வருவது என்பது இன்றைக்கு ஒரு மிகப்பெரிய நிலையிலேதான் இருக்கிறது. கிராமங்களிலே ஓடுகின்ற டவுன் பஸ்கள் எல்லாம் மிகவும் பழுதடைந்ததாக இருக்கின்றன.

இன்றைக்கு பிரசவம் ஆக வேண்டிய ஒரு அம்மையார் அந்த பஸ்ஸிலே வந்தால் ஆஸ்பத்திரிக்கு வருவதற்குள்ளாக பஸ்ஸிலேயே பிரசவம் ஆகக்கூடிய நிலையிலேதான் சாலைகளும் பேருந்துகளும் இந்த ஆட்சியிலே இருந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூடச் சொல்கிறார்கள் எதிர்க்கட்சிகள் பழைய பல்லவியைப் பாடிவிட்டுச் சென்று விடுகின்றன என்று. ஆண்டுக்காண்டு அவர்கள் புதிய பஸ்களைப் போடுகிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர அதே பழைய பல்லவிதான்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியின் காரணமாகத்தான் அந்தப் பேருந்துகள் இந்த அளவிற்குப் போனது. தேவையான அளவிற்கு அந்த நேரங்களிலே புதிய பேருந்துகளை வாங்காததனுடைய விளைவு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், ஒட்டுமொத்தச் சுமையும் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆட்சிக்கு வந்துவிட்டது. அது ஒரு மிகப் பெரும் சுமையாக இருப்பதன் காரணமாக, இப்போது படிப்படியாக, சென்ற முறை சொல்லியிருந்ததுபோல புதிய பேருந்துகள் வாங்கி முடித்தாகிவிட்டது. இப்போது அடுத்தபடியாக புதிய பேருந்துகளை வாங்குவதற்கு அரசு முன்வந்திருக்கிறது. ஆகவே, மிக அதிகமான அளவிலே பேருந்துகளை மாற்ற வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது தி.மு.க. ஆட்சி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகாலமாக இதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, மக்களுடைய பிரச்சினைகள், வாக்களித்த...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 ஆண்டுகாலத்தில் நாங்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 3 ஆண்டுகாலமாகச் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. 3 ஆண்டுகளாகவே அதற்கான நடவடிக்கையை நாங்கள் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். எடுத்தும்கூட, இன்னும் சுமை இருக்கிறது. மாற்ற வேண்டிய பஸ்களினுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்குக் காரணம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்கள் இன்றைக்குப் பேருந்துகளிலேயும், சாலைகளிலேயும் வந்தால் அவர்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்கின்ற நிலையிலேதான் பல விபத்துகள், பல மரணங்கள் இந்த ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அரசு ஊழியர்கள்; எஸ்மா, டெஸ்மா என்ற சட்டங்களைக் கொண்டு வந்து இன்றைக்கு 999 ஊழியர்களை ** இன்றைக்கு அரசு ஊழியர்கள் அப்படிப்பட்ட நிலைமையிலேதான் இந்த ஆட்சி எல்லாத் தரப்பு மக்களின் மீதும் அடக்கு முறையை ஏவி விட்டுக்கொண்டிருக்கிறதே தவிர, மக்களுக்கான நன்மையான திட்டங்களை வழங்குகிறதா என்றால் இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு அரசு எந்தப் பிரச்சினையையும் உருவாக்கவில்லை. நீதிமன்றத்திற்கு, உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கை அரசு எடுத்துச் செல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியும். ** என்ற தகவல் ஆதாரமற்ற தகவல். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அல்லது ஆதாரத்தைத் தர வேண்டும். (குறுக்கீடுகள்) நீக்க வேண்டும் அல்லது ஆதாரத்தைத் தர வேண்டும். (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்து, உரிமைகளைக் கேட்டுப் போராடுவது என்பது ஆண்டாண்டுக்களாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே இருந்து வருகிற ஒரு மரபு. அது அவர்களுடைய உரிமை. அந்தப் பிரச்சினையை அணுகுகிறபோது இந்த அரசு கடுமையாக அணுகிய காரணத்தால், சட்ட விதிகளைக் கடுமையாக்கி நடைமுறைப்படுத்திய காரணத்தால், அவர்களைத் தண்டிக்கிற நோக்கத்தோடு இந்த அரசு நடந்த

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

காரணத்தால்தான் இவ்வளவு பேர் பாதிக்கப்பட்டனர், என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இது அரசாங்கத்தின் கொள்கையினுடைய விளைவு என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் சுமுகமாக, பேச்சுவார்த்தை மூலமாக பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அந்தக் கொள்கையைத்தான் நாங்கள் நடைமுறைப்படுத்தினோம். ஆனால், அரசு ஊழியர்களுடைய பிரதிநிதிகள் துரதிருஷ்டவசமாக அரசியல் கட்சிகளுடைய தூண்டுதலுக்கு உள்ளான காரணத்தினால் பேச்சுவார்த்தைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வரவில்லை. (குறுக்கீடு) உண்மை நிலையை நான் சொல்கிறேன். முதலில் நிதிச் செயலாளர் அளவிலே (குறுக்கீடு) இருங்கள். நிதிச் செயலாளர் அளவிலே (குறுக்கீடு) சில விளக்கம், அமைதியாக இருங்கள். நிதிச் செயலாளர் அளவிலே மற்ற துறை அதிகாரிகள் அளவிலே பேச்சுவார்த்தை நடந்தது. அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையாக நிதியமைச்சர் என்ற முறையிலே பேச்சுவார்த்தைக்கு நான் அழைத்தும்கூட பேச்சுவார்த்தைக்கு என்னிடம் அவர்கள் வரவில்லை. போராட்டமே குறிக்கோள் என்று இருந்தார்கள். போராட்ட அறிவிப்புகளிலேயே இருந்தார்கள் அதற்குத் தூண்டுதலாக அரசியல் கட்சிகள் அறிக்கைகளை விட்டுக்கொண்டேயிருந்தன. அதற்கு அவர்கள் பலிக்கடா ஆகிவிட்டார்கள். நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் இருந்தோம். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10—30*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அலுவலர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசு அதிகாரிகளையெல்லாம் சந்தித்துப் பேசி, அதற்குப் பின்னர் அமைச்சரிடம் பேசுகிற கட்டத்திலே கோரிக்கை எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம், வந்து பேசுங்கள் என்ற அந்த நிலைதான் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள், எதையும் ஏற்றுக்கொள்ளாத அமைச்சர் இடத்தில் என்ன பேச முடியும் என்ற காரணத்தினால்தான் வரவில்லை. இன்னும் சொல்வதாக இருந்தால், எந்த அரசு ஊழியர்களும் எந்தக் காலத்திலும்





ஆளுங்கட்சியிடத்திலே வேண்டுகோள் வைக்கிறபோது எதிர்க்கட்சிகளுடைய ஆதரவை நாடுவது என்பது என்றைக்கும் வழக்கமாகும். ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவை அவர்கள் கோரி இருப்பார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் அந்தக் கட்சி சார்பாக வழங்கி இருப்பார்கள். ஆதரிப்பது என்பது நியாயம் கேட்பது என்ற பொருளுடையதே தவிர வேறு அல்ல. அது ஒரு குற்றமாகக் கருதப்படுமேயானால், அது ஜனநாயகமே அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் அதைச் சொல்லவில்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அரசு ஊழியர்களுக்குப் பாதிப்பு என்று பொதுவாகச் சொல்வதைப் பற்றி கவலையில்லை, ஆனால், ** என்று சொல்வது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று பொருள் அல்ல. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இறப்பு என்பதற்கு பல காரணங்கள் வரலாம். அது வேறு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதுதான் ஆதாரமற்ற குற்றச்சாட்டு. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அரசியல் கட்சிகள் அரசு ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவிப்பது தவறு கிடையாது. ஆனால், அரசு ஊழியர்களை, அரசாங்கத்தைப் போய் முட்டுங்கள் என்றெல்லாம் வன்முறையைத் தூண்டுவதுதான் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது என்பதை அவை உணர வேண்டும். (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் புதிதாக எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை. ஏற்கெனவே அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உரிமைகளும், சலுகைகளும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். பேச்சுவார்த்தைக்கு ஒரு நாள் வரவில்லை என்கிற காரணத்தினாலே இலட்சக்கணக்கான பேர் வேலை இழக்க வேண்டும்; அதுவும் கடைசியாக உச்ச நீதிமன்றம் தலையிட்டதற்குப் பின்பு இன்றும் நூற்றுக்கணக்கான பேர் வெளியே நிற்கிறார்கள்; ஆசிரியர்களும் வெளியே நிற்கிறார்கள். அரசாங்கம் இந்தக் கட்டத்திலாவது கனிவுடன் பரிசீலித்து அவர்கள் அத்தனை பேரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுடன் பேச்சுவார்த்தைகளுக்கு இடம் இல்லை என்று அரசு எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. அதைவிட மிக முக்கியமாக அரசு ஊழியர்களுக்கு நாங்கள் ஏதும் தரமாட்டோம் என்று எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. நிதிநிலைமை சீரான பிறகு அரசு ஊழியர்களுடைய பிரச்சினைகளைப் பரிவுடன் அரசு பரிசீலிக்கும் என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நாள் போராட்டத்திற்கு அவர்கள் வாழ்க்கை முழுவதுமாக இழக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய நிலையா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு அத்தகைய தண்டனையை அரசு வழங்கவில்லை. நீதிமன்றம் வழங்கி இருக்கிறது. நீதிமன்றத்திற்கு வழக்கை எடுத்துச் சென்றது அரசு ஊழியர்களின் சார்பில் அல்லது அரசு ஊழியர்களை பலிக்கடா ஆக்க வேண்டும் என்ற நோக்கோடு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தான் இந்தப் பிரச்சினையை (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்களே ஒழிய, அரசாங்கம் அவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கோ, உச்ச நீதிமன்றத்திற்கோ எந்தக் காலத்திலும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்லவில்லை. (குறுக்கீடுகள்)



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், முதலில் அரசு தான் அவர்களை வேலை நீக்கம் செய்தது என்பதை மறுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பிச்சாண்டி நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்திலே மே மாதம் தண்ணீர் சென்னைக்குத் தருவோம் என்று சொல்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு நம்முடைய குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர்... (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசியல் ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கே நான் பேச விரும்பவில்லை. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் என்பது எடுத்த எடுப்பிலே வரவில்லை. அவர்கள் முறையாக அறிவித்துவிட்டு பேச்சுவார்த்தை நடத்தி, பேச்சுவார்த்தையிலே ஒரு முடிவு ஏற்படாத காரணத்தினாலேதான் போராட்டம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி நீங்கள் பேசும்போது அந்தக் கருத்துகளையெல்லாம் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, ஒரே நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பேசலாம். பிச்சாண்டி அவர்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ளாதீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** 2 ஆம் தேதி வேலைநிறுத்தம் என்று சொல்கிறார்கள். 02-07-2003 அன்று வேலைநிறுத்தம். ஆனால், 30-06-2003 அன்றே கைது செய்யப்படுகிறார்கள். மீண்டும் 3 ஆம் தேதி அரசு ஊழியர்கள் எல்லாம் பயந்துகொண்டு வேலைக்குச் செல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் பேசும்போது அந்தக் கருத்துகளைப் பேசுங்கள். பிச்சாண்டி அவர்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர் மூன்று நிமிடத்தில் பேசி முடிக்கட்டும்.

[2004 பிப்ரவரி 6

முற்பகல் 10-35

**திரு. கு. பிச்சாண்டி:** மே மாதம் சென்னைக்கு தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நேற்றைக்கு நம்முடைய குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அங்கே வீராணம் ஏரியினுடைய போட்டோவைக் கொடுத்திருக்கிறார்கள்.

(போட்டோக்களைக் காண்பித்தார்.)

இதிலே எந்த இடத்திலாவது தண்ணீர் இருக்கிறதா என்று நீங்கள் இந்த போட்டோவைப் பாருங்கள். சென்னைக்கு மே மாதம் தண்ணீர் கொண்டு வர முடியும் என்பது இந்த அரசு மக்களை, சென்னை நகர மக்களை ஏமாற்றுவதற்காக சொல்கின்ற திட்டமாகத்தான் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னையிலே வாழ்கின்ற மக்களுடைய குடிநீர் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்பதற்காக, இனி வரும் காலங்களில் நிரந்தரமாகப் போக்க வேண்டுமென்பதற்கான சீரிய சிந்தனையிலே அனைத்துத் தரப்பு மக்களின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக, புதிய வீராணம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அந்தத் திட்டம் மே மாதம் முடிக்கப்பட்டு, எப்படியாவது மக்களுடைய தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர், ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, தண்ணீரைக் கொண்டு வருவதற்காக ஆய்வு செய்யப்பட்டது. அங்கே நீராதாரமானது மிக நல்ல முறையில் இருக்கின்றது. விவசாய மக்களைப் பாதிக்காத அளவில் நீராதாரம் இருக்கின்றது. அதன் அடிப்படையிலே, ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் தண்ணீரைக் கொண்டு வர வேண்டுமென்ற, சென்னை மக்களுடைய தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்களுக்கு சென்னையிலே இருக்கின்ற மக்களுடைய தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் என்றென்றைக்கும் அவர்களுடைய மனதில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய தண்ணீர் பிரச்சினையை



2004 பிப்ரவரி 6] [திரு. கே.பி. அன்பழகன்]

நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்தப் போட்டோக்கள் எல்லாம் அந்தக் காலத்தில் எடுத்ததாகக்கூட இருக்கும் என்று கருதப்படுகிறது. இன்றையதினம் நிலத்தடி நீரானது அங்கே மிகவும் நல்ல முறையில் இருக்கின்றது என்பதை ஆய்வு செய்ததன் அடிப்படையிலேதான் இந்தத் திட்டத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் என்பதை (குறுக்கீடுகள்) நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. பிச்சாண்டி, ஏதாவது புகைப்படத்தைக் காட்ட வேண்டுமென்றால் (குறுக்கீடுகள்) புகைப்படத்தைக் காட்டுவதாக இருந்தால் என்னிடத்திலே அனுமதி வாங்கிக்கொண்டு நீங்கள் காட்ட வேண்டும். போட்டோவிலே தண்ணீர் இருக்காது. தண்ணீர் போட்டாவிலே இருக்காது. திரு. எஸ்.ஆர்.பி. பேசுங்கள்... (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வீராணம் திட்டம் என்று சொன்னால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போட்டோவை என்னிடத்திலே முதலிலே காண்பிக்க வேண்டாமா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வீராணத்திலிருந்து—வீராணம் குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரப்படும் என்று நினைத்தோம். இப்போது அமைச்சர் சொல்கிறார்; அங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன; போதிய தண்ணீர் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் கிடைக்கும்; அதன் மூலம் அங்கேயிருந்து தண்ணீர் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்கிறார். அதற்கு இவ்வளவு பெரிய திட்டமே தேவையில்லை. வீராணம் திட்டம் என்பது, வீராணம் குளத்திலே தண்ணீர் நிறையும், நிறைந்தவுடன் தண்ணீர் கொடுப்போம் என்று சொன்னீர்கள். அதுதான் இயலாது, முடியாது என்று மீண்டும், மீண்டும் நாங்கள் இங்கே சொல்கிறோம். விவசாயத்திற்கே தண்ணீர் கிடைக்காத நேரத்தில் சென்னை நகரத்திற்குத் தண்ணீர் கொடுக்க

முடியாது. அதுவும் மே, ஜூன் மாதங்களில் முடியவே முடியாது என்று சொன்னோம். மீண்டும், மீண்டும் நீங்கள் அதை முடியும் என்று சொல்லிவிட்டு, இப்போது ஆழ்குழாய்க் கிணறு அமைக்கிறோம்; ஆழ்குழாய்க் கிணறு மூலமாகத் தண்ணீர் கொண்டு வருவோம் என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இதே அவையிலே புதிய வீராணம் திட்டத்தின் மூலமாக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** கண்டிப்பாக சென்னை மாநகருக்குக் குடிநீர் வருகிறது. அதை இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குடிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டமானது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீராணம் ஏரியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த ஆழ்துளைக் கிணறுகள் வீராணம் ஏரியில் அமைக்கப்படவில்லை. கொள்ளிடத்தில் அமைக்கப்பட்டு, அங்கிருந்து பம்ப் செய்து வீராணம் ஏரியில் விடுவதாகத்தான் திட்டம் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி.....

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம், வீராணம்.....

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இங்கே அமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஒவ்வொன்றிலும் எல்லா தலைவர்களும் விவாதிக்க வேண்டுமென்பது நல்லதல்ல, உறுப்பினர் அவர்களுடைய நேரம் முடிந்து போய்விடும்.





**திரு. கு. பிச்சாண்டி:** இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். வேண்டுமானால் அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை அங்கே அனுப்பிப் பார்த்தால் தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்பதை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அடுத்து நீங்கள் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) அடுத்துப் பேசலாம்.

**திரு. கு. பிச்சாண்டி:** நேரடியாகப் பார்ப்பதற்கு ஒரு குழுவைக்கூட அனுப்பலாம். அதிலே சபாநாயகர்கூட வரலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை அங்கே அனுப்பிப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. கூடியவிரைவில் அந்தத் தண்ணீர் இங்கே வருகிறது. வரும்போது அந்தத் தண்ணீரை இங்கேயே பார்த்துக்கொள்ளலாம்.

**திரு.கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்தான் மாறியிருக்கிறாரே தவிர வீராணத்திலிருந்து தண்ணீர் இன்னும் வரவில்லை; மூன்றாவது அமைச்சர்; அவர் இப்போது பதில் சொல்கிறார். அதுதான் இன்றைக்கு உள்ளாட்சித் துறையில் இருக்கிற நிலைமை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரே போய் அங்கே பார்த்தாரா; இல்லையா; என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அவர் இப்போதுதான் அமைச்சராக ஆகியிருக்கிறார்.

'எச்' கார்டு கொடுத்து, ஏழை எளிய மக்களுக்கு இன்றைக்கு ரேஷன் கடையிலே பொருட்கள்...

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணையின்படி, வீராணம் திட்டம் அனைத்தையும் ஆய்வு செய்த பின்னர் தெளிவாகத்தான் இன்றையதினம் பதில் அளிக்கின்றேன். அவர் சொல்வதைப்போல புரட்சித் தலைவி அம்மா என்ன நினைக்கிறார்களோ அதைச் செய்யலாம். அதைச் சுட்டிக்காட்டுவதற்கு இவருக்கு உரிமை இல்லை. ஆகவே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய திட்டங்கள்

[திரு. கே.பி. அன்பழகன்] [2004 பிப்ரவரி 6

ஈடேறுகின்ற வகையிலே, கண்டிப்பாக வீராணம் திட்டமானது நிறைவேற்றப்பட்டு, அவர்களுடைய காலத்தில் பொருளாதாரத்தை சீர்குலையச் செய்ததைப் போல கிடப்பில் போடாமல், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், கண்டிப்பாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, நல்ல முறையிலே பயன்படுகின்ற வகையிலே, சென்னைவாழ் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே, அந்தத் திட்டமானது அமையும் என்பதை இந்த நேரத்திலே அடித்துக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விதவைகளுக்கான பென்ஷன் தொகை..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** விதவைகளுக்கான பென்ஷன் தொகை வழங்கப்படுவதில்லை. அதை எல்லாம் sanction செய்கிறார்களே தவிர, யாருக்குமே, குடும்பத் தலைவர் இறந்தால், பணம் கிடையாது. விதவைகளுக்குப் பணம் கிடையாது, முதியோர்களுக்கும் பணம் கிடையாது. ஆக, இந்த 3 ஆண்டு காலமாக, sanction செய்கிறார்களே தவிர, யாருக்குமே பணம் அனுப்புவது இல்லை புதிதாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** இன்றைக்கு இந்த ஆட்சி எந்த ஒரு நன்மையையும் ஏழை எளிய மக்களுக்கு வழங்காமல்தான் இருக்கிறது. இந்த ஜனநாயக முறையிலே.....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல முதியவர்களுக்குப் பணம் நிறுத்தப்படவில்லை, தொடர்ந்து அனுப்பப்பட்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் எந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் புதிதாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ, அந்த நிலைதான் தொடர்ந்து நீடிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)



2004 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, பேசி முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட பணம் வருகிறது. ஆனால், இந்த மூன்று ஆண்டு காலமாக sanction செய்யப்பட்ட எவருக்குமே பணம் அனுப்பப்படவில்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம், ஜனநாயக முறையிலே நாட்டு மக்களுக்காகப் பல நன்மைகளை ஆற்ற வேண்டிய அரசாங்கம், இன்றைக்கு போலீஸ் ராஜ்யம் நடத்துகிற ஓர் அரசாங்கமாகத்தான் இருக்கிறது. இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பொடாவிலே கைது செய்யப்படக்கூடிய நிலைமை. (குறுக்கீடுகள்)

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு அரசு ஊழியர்கள் கைது செய்யப் படக்கூடிய நிலைமை. சட்டமன்ற உறுப்பினர்கள்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட என்னிடம் ஆதாரம் இருந்தது. ஆனால், காண்பிக்கவில்லை. இங்கே நேற்றையதினம் பேசிய உறுப்பினரும், இன்றையதினம் உறுப்பினர் அவர்களும் பொடா ஏதோ எதிர்க்கட்சியின்மீது பாய்வதாகக் கூறுகிறார்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் நான் பேசிவிடுகிறேன். அப்புறம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) கேளுங்கள். அப்புறம் பேசுங்கள். நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டியவர்கள் தங்களுடைய கடமைகளைத்தான் செய்ய வேண்டும். அரசியலில் எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், யார் மீதும் பொடாவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. நாடாளுமன்றத்திலே பேசிய பேச்சை மட்டும் — நிறைய பேச்சு இருக்கிறது. குறிப்பிட்ட பகுதியை மட்டும் -- நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதில் "SHRI SONTHOSH MOHAN DEV (CONGRESS M.P.): Mr. Deputy Speaker, Sir, The objection raised was that it has been said that he is a LTTE man (Vaiko)".... (Interruptions)

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2004 பிப்ரவரி 6

No, no, Permission வாங்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) No, no, Permission வாங்கியாகிவிட்டது, (குறுக்கீடுகள்) Permission வாங்கியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** No, no, Permission வாங்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) Permission வாங்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) Permission வாங்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அவர் அதற்குள்ளே போகவில்லை. துரைமுருகன், அவர் அதற்குள்ளே போகவில்லை. அவர் பொடா சம்பந்தமான அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்)

**HON. THIRU N. THALAVAI SUNDARAM:** I quote "....When Shri Rajiv Gandhi was the Prime Minister, I was the Minister of State for Defence...." (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொடா சம்பந்தமாக நீதிமன்ற வழக்கிற்குள்ளே போகவில்லை.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அந்த வழக்கிற்குள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு விவாதக் குறிப்பை அவர் சொல்கிறார். அதை என்னிடத்தில் காட்டி இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** Parliament speech, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, பார்லிமென்டிலே பேசியது. (குறுக்கீடுகள்) காங்கிரஸ் மெம்பர் பேசியது. (குறுக்கீடுகள்) No, no, வழக்கிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. (குறுக்கீடுகள்) பார்லிமென்டிலே பேசியது. (குறுக்கீடுகள்) பார்லிமென்டிலே பேசியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வழக்குப் பிரச்சினைக்கே போகவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



2004 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பார்லிமென்டிலே பேசியது. இது பார்லிமென்டிலே பேசியது. "....When Shri Rajiv Gandhi was the Prime Minister, I was the Minister of State for Defence. I rescued Shri Vaiko from the mid-sea. Let him deny it. Can he deny it?"....(Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பொடா வழக்கு சம்பந்தமாக பிரச்சினைக்குள்ளே போகவில்லை. நாடாளுமன்றத்திலே நடைபெற்ற ஒரு விவாதக் குறிப்பை அவர் காலையிலேகூட என்னிடத்திலே காட்டினார். அந்த விவாதக் குறிப்பிலே சொல்லப்பட்ட ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதிலே அவர் ஒன்றும் வழக்கு சம்பந்தமான பிரச்சினைக்குள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு கடல்நீர் சுத்திகரிப்புக் குறித்து இந்த ஆட்சியிலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அதில்...(குறுக்கீடுகள்)

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவும் இதுவும் பிரச்சினை இல்லை. அதற்கும் இதற்கும் பிரச்சினை இல்லை. நாடாளுமன்றத்திலே நடைபெற்ற ஒரு விவாதக் குறிப்பை இவர் சொல்கிறார். அதிலே ஏதாவது மாறுபட்ட கருத்து இருந்தால் நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடு) மாறுபட்ட கருத்து இருந்தால் நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வழக்கிற்குள்ளே போகவில்லை; வழக்கிற்குள்ளே போகவில்லை. நடைபெற்ற ஒரு விவாதத்தை அவர் சொல்கிறார். அதிலே உங்களுக்கு மாறுபட்ட கருத்து இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், சொல்லுங்கள். அவர் சொல்வதிலே மாறுபட்ட கருத்து இருந்தால் திரு. துரைமுருகன் எழுந்து அதை மறுக்கலாம்; அதற்கு வாய்ப்புத் தருகிறேன், இப்போது உட்காருங்கள்.

[2004 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இது பாராளுமன்றத்திலே பேசியது; இது பாராளுமன்றத்திலே பேசியது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்குத் தொடுக்கப்பட்டதைச் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசலாம்; நீங்கள் பேசுங்கள், சொல்லுங்கள்.

HON. THIRU N. THALAVAI SUNDARAM: "I rescued Shri Vaiko from the mid-sea. Let him deny it. can he deny it?...." (Interruptions)

"....We rescued from the cluches of LTTE from the mid-sea and I was Minister of State for Defence at that time. He went and stayed with the LTTE for 15 days. Let him deny that."(Interruptions)

The reply which was given by Vaiko:

"....Yes. I am a supporter of LTTE. I do not hide it. I am a supporter - yesterday, today and tomorrow." (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், நான் விளக்கம் சொல்லிவிட்டேன். வேண்டுமென்றே குழப்பம் விளைவிப்பது நல்லதல்ல. நான் உரிய விளக்கத்தைத் சொல்லிவிட்டேன். நாடாளுமன்றத்திலே நடைபெற்ற ஒரு விவாதத்தை அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் படித்து முடித்துவிடுகிறேன்; படித்து முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)



2004 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், பேராசிரியர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள்: பேராசிரியர் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள், உட்காருங்கள். பேராசிரியர் அவர்கள் சொல்லட்டும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட செய்தி எதுவாக இருந்தாலும், அதை இங்கே படிப்பது தவறல்ல. ஆனால், அந்தச் சட்ட அடிப்படையில் ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலேயும் நீங்கள் வைகோ. பெயரைக் குறிப்பிட்டீர்கள். (குறுக்கீடுகள்) தலைவர் அவர்களே, வைகோ. அவர்கள், (குறுக்கீடுகள்) சட்டம் எனக்கும் தெரியும். வைகோ. அவர்கள் எந்தச் சட்டத்தால் இன்றைய தினம் சிறையிலே வைக்கப்பட்டு இருக்கிறாரோ, எந்தச் சட்டத்தை எதிர்த்து அவர் நீதிமன்றத்திலே வாதாடிக் கொண்டிருக்கிறாரோ, எந்தச் சட்டத்தின் அடிப்படையிலே bail-ஜாமீன் கேட்கப்பட்டு உயர் நீதிமன்றம் வரையில் சென்று அவர் வெளியிலே வரக்கூடிய நிலைமையிருக்கிறதோ, அந்த அடிப்படைக்கு மாறான ஒரு கருத்தை, ஒருவேளை அது சரியாக இருக்குமானாலும், சரியல்ல என்பது என்னுடைய கருத்து. அமைச்சர் அவர்கள் சொல்வது சரியாக இருக்குமானாலும், இந்தச் சட்டமன்றத்தைப் பயன்படுத்தி அதைச் சொல்ல தாங்கள் அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதிப்பதாக இருந்தால், வழக்கு தொடர்ந்து நடைபெறுகின்ற நிலையில், அது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். தாங்கள் அதை அனுமதிப்பதாக இருந்தால், எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதை என்னிடத்திலே காட்டி, என்னுடைய அனுமதி பெற்றார்கள். அவர்கள் இப்போது வாசிப்பது இந்த பொடா வழக்கிற்கு முற்பட்ட ஒரு செய்தி. *(குறுக்கீடுகள்)* இந்த பொடா சம்பந்தமாக சட்டம் வருவதற்கு முன்னாலே நடைபெற்ற ஒரு விவாதக் குறிப்பை அவர் சொல்கிறார். நேற்றே பேசப்பட்டது. அரசியல் தலைவர்கள் பொடா வழக்கின் காரணமாக உள்ளே தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று வைகோ.-வின் பெயரைக் குறிப்பிட்டு இங்கே பேசப்பட்டது. அதற்கு நான் அனுமதி அளித்தேன். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. பொடா வழக்கு, சட்டம் வருவதற்கு முன்னால் நாடாளுமன்றத்திலே நடைபெற்ற ஒரு விவாதத்தை என்னிடத்திலே அனுமதியை வாங்கிக் கொண்டு அவர் வாசிக்கிறார். அதிலே ஒன்றும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. *(குறுக்கீடுகள்)*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட நுணுக்கங்களுக்குள் நான் போகவில்லை. ஆனால், வழக்கு இன்றைக்கு நீதிமன்றத்திலே தொடர்ந்து நடைபெறுகின்ற நிலையில், அரசாங்கம் அந்த வழக்கை அவர்மீது போட்டிருக்கிற நிலையில், இந்தச் சட்டமன்றத்திலே பேசும் இந்த வாதம் அந்த வழக்கை பாதிக்கக்கூடியதாக ஆகிவிடக் கூடாது. அதற்கு தாங்கள் அனுமதித்தது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதே தவறு என்கிறீர்களே?

**பேராசிரியர் க. அன்பழகன்:** தாங்கள் அனுமதித்த அந்தச் செய்திகூட...... *(குறுக்கீடுகள்)* நான் சொல்வது, தாங்கள் சொல்கிற விவரம் உண்மையாக இருக்கலாம். உண்மை என்பது வேறு; வழக்குக்கு மாறாகப் பேச இந்த அவையைப் பயன்படுத்திக் கொள்வது என்பது வேறு. *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வழக்கு சம்பந்தப்பட்ட அந்தப் பிரச்சினைக்குள்ளே போகவில்லை. பொதுவாக நேற்று உங்கள் தரப்பிலே பேசப்பட்டது, எதிர்க்கட்சித் தரப்பிலே நேற்றும் பேசப்பட்டது. *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ' துரைமுருகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசிக்கலாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவ்ர்களே, அரசாங்கத்திற்கு மாறாகக் குற்றச்சாட்டு வரப் போய்தான், அரசாங்கத்திற்கு மாறாக இவர்கள் பொடாவைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்று சொன்னதன் காரணமாக.... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் வாசிக்கிறார்கள். அவர் சொல்லக்கூடிய கருத்து நீதிமன்ற அவமதிப்பிற்கு உட்பட்டதாக இருக்குமானால் நானே அதை நீக்குவதற்குத் தயாராக இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டே வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதோ ஒரு காரணத்தைக் கற்பித்துக்கொண்டு வேண்டுமென்றே ஒரு குழப்பத்தை உருவாக்கிவிட்டுப் போவது என்பது முறையல்ல. அமைச்சர் அவர்கள் பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** அமைச்சர் பேச்சு, வழக்குக்கு பாதகமாக அமையும். *(குறுக்கீடுகள்)*. பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் சரி, இன்றும் சரி அவர்கள் திரும்பத் திரும்ப பொடாவைத் தவறான முறையிலே தமிழக அரசு பயன்படுத்துகிறது என்று கூறிய ஒரே காரணத்திற்காக...*(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொடாவைத் தவறான முறையில் தமிழக அரசு பயன்படுத்துகிறது என்று பல முறை குற்றச்சாட்டுகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். *(குறுக்கீடு)*

[2004 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை வாசிக்கலாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகள் தவறான முறையில் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பகுதியை வாசிக்கவும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அதற்காக விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் 30-4-2002 அன்று திரு. சந்தோஷ் மோகன் தேவ் அவர்கள் ஆற்றிய உரையினுடைய ஒரு பகுதியை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"...Mr. Deputy Speaker Sir, the objection raised was that it has been said that he is a LTTE man. When Shri Rajiv Gandhi was the Prime Minister, I was the Minister of State for Defence. I rescued Shri Vaiko from the mid-sea. Let him deny it. Can he deny it? We rescued from the clutches of LTTE from the mid-sea and I was the Minister of State for Defence at that time. He went and stayed with the LTTE for 15 days. Let him deny it."

The reply of Vaiko: "Yes, I am a supporter of LTTE. I do not hide it. I am a supporter-yesterday, today and tomorrow." இதுதான் நாடாளுமன்றத்திலே வை.கோ. பேசியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற வளாகத்திற்குள்ளே இருந்துகொண்டு கோஷமிடுவது முறையற்றது. அப்படி கோஷமிடக்கூடியவர்களைச் சட்டமன்ற வளாகத்தைவிட்டு அகற்ற வேண்டுமென்று காவலர்களுக்கு ஆணையிடுகிறேன். திரு. ஹக்கீம் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் பேசும்போது ** என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே, அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிச் சொல்லப்பட்டிருந்தால் அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஹக்கீம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2004 பிப்ரவரி 6]

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய சில கருத்துகளை எடுத்து வைப்பதற்கு இந்த அரிய வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மைக்கைப் போடுகிறேன். மைக்கை ஆப்பரேட் செய்கிறவர்கள் கொஞ்சம் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் தி.மு.க. கலாட்டா பண்ணும்போதெல்லாம் மைக் correct-ஆக work பண்ணுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு வருத்தம். நான் பேசுகிற நேரத்தில் ஒவ்வொரு தடவையும் தி.மு.க. வெளியே போய் விடுகிறது. அவர்கள் இருந்தால் சில திருவிழாக்களை முறையாக நடத்தலாம் என்ற ஆசை எனக்கும் உண்டு. அதைக் கேட்க வேண்டுமென்ற ஆசையும் இருக்கிறது.

சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதற்கு அம்மா அவர்கள் திட்டவட்டமான, தீர்க்கமான ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையை தமிழக அரசின் சார்பில், 700 கோடி ரூபாய் திட்டத்தையும் அறிவித்து, அதைச் செயல்படுத்தி, சென்னை நகர மக்களின் தாகத்தைத் தீர்ப்பது எங்கள் கடமை; அதை நிறைவேற்றித் தருவோம் என்று திரும்பத் திரும்ப புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்து விட்டார்கள். ஆனால், தி.மு.க. நண்பர்கள் திரும்பத் திரும்ப இங்கே பேசுவதைப் பார்த்தால், சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டுவந்து விடக்கூடாது என்பதில்தான் அவர்கள் ரொம்ப கவனமாக இருக்கிற மாதிரி தெரிகிறதே தவிர, மக்களின் தாகத்தைத் தீர்ப்பதில் நடவடிக்கை எடுக்கின்ற அரசுக்குத் துணையாக நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லத்தக்க இடத்திலே இன்றைக்கு அவர்கள் இல்லை என்பதை நினைத்து வேதனைப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.

*முற்பகல் 10-55*

கவர்னர் உரையை ஒவ்வொரு காலகட்டத்திலும் புறக்கணித்து விட்டு, தொடர்ந்து இந்த மன்றத்திலே வந்து, விவாதத்திலே பங்கெடுத்துக் கொள்வதிலும், ஏதாவது ஒரு தடையை, ஒரு

இடையூறைத் தொடர்ந்து அவர்கள் ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள் என்பதனை இந்த நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பத்திரிகைத் துறை, இந்தச் செய்திகளைத் தெரிவிக்கிறபோது; ஆட்சேபனைகளைத் தெரிவித்தார்கள், எதிர்த்தார்கள், தங்களுடைய வீரமுழக்கத்தை இட்டார்கள், வெளியே போய்விட்டார்கள் என்ற அடிப்படையில் தெரிவிக்கப்படுவது நியாயமில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசின் தரப்பிலே, ஒரு கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதற்கு அமைச்சர் அவர்கள், அனுமதியை வாங்கிவிட்டுப் பேசுகிறபோதுகூட, அதிலே ஒரு வம்பு வழக்கை வளர்த்துவைத்து, எப்படியாவது விவகாரம் பண்ணி, வெளியே போகவேண்டுமென்று முடிவெடுத்துவிட்டு வந்து, இந்த அவையினுடைய நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருப்பதை இந்த மன்றம் மாத்திரம் அல்ல; இந்த நடவடிக்கைகளைக் கவனிக்கின்றவர்கள் மாத்திரம் அல்ல; இந்த நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இன்றைக்கு ஓர் உயர்ந்த ஜனநாயகத் தன்மையை மதிக்கின்ற விதத்தில் இந்த ஆட்சி, அம்மா அவர்களுடைய தலைமையில் இருக்கிற ஆட்சி, மிகுந்த நிதானத்தோடு, தன்னடக்கத்தோடு, பொறுமையோடு, முழுக்க பேசுவதைக் கேட்டுவிட்டு, திரும்பத் திரும்ப பதிலை எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும், தூங்குகிற மாதிரிப் பாசாங்கு செய்துவிட்டு தூக்கத்தில் இருப்பவனை எழுப்பமுடியும்; ஆனால், உறங்குபவனைப் போல் நடிப்பவனை எழுப்ப முடியாது என்கிற கதையாக; தொடர்ந்து அதே தவறுகளைச் செய்துவிட்டு, நாட்டு மக்கள் மத்தியிலே போய் தங்களை நியாயப்படுத்திக் கொள்ளலாம் என்று முயற்சிக்கின்ற இந்த அரசியல் வித்தைகள் எடுபடாது என்பதை இங்கே இருக்கின்ற மன்றத்தினர் சார்பிலே, இங்கே இருக்கின்ற உறுப்பினர்களின் சார்பிலே இந்த நாட்டு மக்கள் மத்தியிலே நாமும் தெளிவுபடுத்தக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம்.

நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே நமது மரியாதைக்குரிய அமைச்சர் பெருமக்கள் இந்த விளக்கத்தைத் தெரிவிக்கிறபோது, சென்னைக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிய விளக்கத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், இங்கு இருக்கின்ற ஆளும் தரப்பிலும் அத்தனை விளக்கங்களையும்





தெரிவிக்கின்றபோதுகூட இங்கே திரும்பத் திரும்ப, தண்ணீர் வராது, வராது, வராது என்று சொல்லக்கூடிய அந்தத் தோழர்கள், அந்த மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுடைய சாபத்தை வெளிப்படுத்துகிற விதத்தில் தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்துகிற விதத்தில்; அல்லது இந்தத் தண்ணீர் வந்துவிடக் கூடாது; பிரச்சினை தீர்ந்துவிடக் கூடாது; அதன் வாயிலாக சென்னையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அம்மா அவர்களின் தலைமை மரியாதைப்பட்டுவிடக் கூடாது என்பதை மனதிலே வைத்துக்கொண்டு, சொல்கிறமாதிரி இருக்கிறதே தவிர, அவர்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கட்டுகிற விதத்தில் இருக்கிறதே தவிர, நியாயங்களுக்காக அவர்கள் ஒன்றும் வாதாடுவதாகத் தெரியவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே முதற்கட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் இன்றைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிற மிக முக்கியமான விஷயமாக, மதுரை உயர்நீதிமன்றத்திற்கு 55 கோடியே 59 இலட்சம் ரூபாய், அந்தக் கிளை திறக்கப்படுவதற்குண்டான வேலைகள், பணிகள் முடிவடைந்து, அது 13-4-2004-ல் திறக்கப்பட இருக்கிறது என்கின்ற ஓர் அற்புதமான, மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மன்றத்திற்கு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனங்கனிந்த பாராட்டுகளை, நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மதுரையைப் பொறுத்தமட்டில் அது அரசியலாகவே ஆக்கப்பட்டிருந்தது. வருமா? இன்னும் எத்தனை மாதங்கள்? எத்தனை ஆண்டுகள்? இப்படியே தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறார்கள். அதுவும் மதுரையில் நடந்த பார் கவுன்சில் தேர்தலில்கூட, இது ஒரு பிரச்சினையாக்கப்பட்டு, ஓட்டுகளுக்காக, இது தள்ளி வைக்கப்படுகிறது; வராது; நாங்கள் போய்த்தான் அதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று சொல்லத்தக்க அளவில், பார் அசோசியேஷன் நிகழ்ச்சிகளிலேயே இது ஒரு பிரச்சினையாக வந்தது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரியாக, Fast Track Courts. சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற அதேநேரத்தில், மதுரையைப் பொறுத்தமட்டில் ஒரு வழக்கறிஞர் பணியிலும் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினாலே இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கத்தை நீதித் துறையின் வாயிலாக,

எங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த அற்புதமான திட்டங்களை, உருவாக்கித் தரப்பட்டிருக்கிற திட்டங்களைப் பாராட்ட வேண்டுமென்ற இடத்தில் இருக்கக்கூடிய காரணத்தால், இதை நான் வழக்கறிஞர் சமுதாயத்தின் சார்பில் தெளிவுபடுத்துவதற்கு விருப்பப்பட்டவனாக இருக்கிறேன்.

*முற்பகல் 11-00*

இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிற கவர்னர் உரையில் ஏறத்தாழ 49 Fast Track Courts-ன் மூலம் 65 ஆயிரம் வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் பல இலட்சக்கணக்கான மக்களுடைய பிரச்சினைகள், மிக விரைவாகத் தீர்க்கப்படுவதற்கு இப்படி ஒரு புதிய அணுகுமுறையை, இதுவரை எந்த ஆட்சியிலுமே செய்யாத அணுகுமுறையைப் புரட்சித் தலைவியின் ஆட்சி செய்து (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அற்புதமான திருப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி. காரணம் கோர்ட் என்று சொன்னாலே, வாய்தா; வக்கீல் என்று சொன்னாலே, வாய்தா எப்பொழுது பார்த்தாலும் வாய்தா. 10 பேர், 20 பேர் சாட்சி; விசாரிக்க மாட்டார்கள். வக்கீல் வருவார் பணத்தை வாங்குகிறார்; நிற்பார், வாய்தா வாங்கப்படும்; வந்தவர்கள் அலைவார்கள். கஷ்டத்திற்கு மேல் கஷ்டம், இப்படியெல்லாம் இருந்த இடத்தில் இன்றைக்கு அதற்கு இடமேயில்லை. வாய்தா என்பதற்கு இடமில்லை. Fast Track Courts-ல் evidences உடனே அந்த இடத்திலேயே விவாதம்; அப்போதே arguments, final, அப்போதே முடிக்கப்படுகிறது. தீர்க்கப்படுகிறது. அதுவும் 65 ஆயிரம் வழக்குகள் என்றால், இந்த அற்புதமான சாதனை, அம்மாவின் ஆட்சியைத் தவிர வேறு எங்கேயுமே கண்டிராத, கேட்டிராத விஷயமாக இருக்கிற காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) வழக்குரைஞர்கள் சமுதாயம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

அதேபோலத்தான் என்ன இருக்கிறது, கவர்னர் உரையில் என்ன இருக்கிறது என்று, திரும்பத் திரும்ப இங்கே வந்து எதிர்க்கட்சித் தரப்பிலே கேட்டுக்கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கிறார்கள். கவர்னர் உரையைப் படித்தால் என்ன இருக்கிறது என்று தெரியும். பத்திரிகையை எடுத்து காலையில் இராசி பலனைப் பார்த்துவிட்டு சட்டசபைக்கு வந்தால் கவர்னர் உரையில் சொல்லப்பட்ட விஷயங்கள் தெரியாது. 5200 கோடி ரூபாய் போதாது; பத்தாது; பிரச்சினையைத்





தீர்க்க இயலாது; ஏற்கெனவே 30 ஆயிரம் கோடி ரூபாய் economy collapsed in the last D.M.K. regime. ஏறத்தாழ 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக தமிழகத்தினுடைய பொருளாதாரம் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு, கடனாக்கப்பட்டு, வட்டி கட்ட முடியாத நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு, மிகப்பெரிய நிதிநிலை நெருக்கடியை உருவாக்கி, நாசமாக்கிவிட்டு சென்றதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அது சரிசெய்யப்பட்டு வருகிறபோது, முதலாவது ஆண்டிலேயே, திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாது. Full deficit. 5200 கோடியிலிருந்து 7000 கோடி ரூபாய்க்குக் கொண்டு வந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும், இரண்டாவது ஆண்டிலேயே. அடுத்தக் கட்டம் 8001 கோடி. இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என ஒதுக்கப்பட்ட பணம் 40 ஆயிரம் கோடி. அது மாத்திரமல்ல, தொழில் முதலீட்டுக்குத் தொகை. எங்கே வருகிறது, தமிழகத்தில் தொழில்? கேட்டவர்களை, இன்றைக்குக் கேள்வி மூலமாக, அந்தக் கேள்வி கேட்கப்பட்ட நபர்களைக் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இல்லாத அதிசயத்தை உருவாக்கித் தந்த இந்த ஆட்சியினுடைய சிறப்பை வைத்துக் கேட்கிறோம், எங்கே முதலீடு என்று கேட்டார்கள், இந்த மூன்று ஆண்டு காலத்தில், 2003 அக்டோபருக்குள்ளாக ஒதுக்கப்பட்ட பணம் ஏறத்தாழ 46795 கோடி ரூபாய்க்குத் தொழில் முதலீட்டுக்குண்டான அச்சாரம் இன்றைக்கு தமிழகத்தில் புரட்சித் தலைவி ஆட்சியால் உருவாக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மறுக்க முடியுமா; இல்லையென்று சொல்ல இயலுமா; கவர்னர் உரையைப் பார்த்துவிட்டுச் சொல்வதற்காக மட்டுமல்ல, கூட்டணி சேர்ந்துவிட்டதற்காகக் கூத்தடிப்பதற்கு வேண்டுமானால், இந்த மாதிரி கொச்சையான விமர்சனங்களை எடுத்து வைத்துப் பேசிட முடியுமே தவிர, உண்மையை இன்றைக்கு மறைக்க இயலாது.

அடுத்து பால் வளம். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் பால் திட்டமும் பாழ். பாக்கி, பாக்கி என்று சொல்லி, பாலில் விஷத்தைக் கலந்த ஆட்சி தி.மு.க. ஆட்சி என்பதை நாங்கள் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. இன்றைக்கு அந்தப் பால் வளத்தை பாக்கி வைத்த இடத்தில் 34 கோடி ரூபாயை புரட்சித் தலைவியின் சர்க்கார், அந்தப் பாலைக் கொடுத்த விவசாயிகள் பாதிக்கப்பட்ட இடத்தில் அவர்களின் கடன்கள் தீர்க்கப்பட்டு இருக்கின்றன.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2004 பிப்ரவரி 6

கரும்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள், பல ஆலைகளை இழுத்து மூடுவதற்குக் காரணமாகி விட்டது, அன்றைக்கு தி.மு.க. ஆட்சியில். பணம் கட்டப்படவில்லை, கரும்பிற்கு உண்டான விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை, கடனாளியாக்கப்பட்டார்கள். விவசாயிகள், விவசாயிகள் என்று பேசுகின்றார்களே, விவசாயம், விவசாயம் என்று சொல்கிறார்களே, கூலித் தொழிலாளி, கூலித் தொழிலாளி, இல்லாதவர்கள், ஏழைகள், பாட்டாளிகள், துடிக்கிறவர்கள் ஏதோ பசியால் வாடுகிறவர்கள் என்று நாடகம் போட்டுப் பேசுகின்ற அந்த நாடாண்ட நாடகக்கட்சிக்காரர்கள் கடனை வைத்துவிட்டுச் சென்றார்கள், கரும்பு விவசாயிகளுக்கு புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்தக் கடன்பட்டு கடனாளியாகி, எங்கே வருகிறது பணம் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு, முழுக்க கடன் அனைத்தும் அடைக்கப்பட்டு, அந்த விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் என்பதை இன்றைக்கு இந்த கவர்னர் உரை தெளிவுபடுத்துகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11—05*

அதேபோலத்தான், இப்போது வடசென்னயில் ஆயிரம் மெகா வாட் மின்சார உற்பத்தி. தூத்துக்குடியில் ஆயிரம் மெகா வாட் மின்சார உற்பத்தி கூடுதல். கூடங்குளம், இரண்டாயிரம் மெகா வாட் மின்சார உற்பத்தி கூடுதல். அடுத்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட எட்டாயிரம் கோடியில், 5,914 கோடி ரூபாய் மின் பகிர்மான திட்ட கட்டமைப்பிற்கு மாத்திரம் என்ற ஓர் அற்புதமான வாசகத்தை, அற்புதமான திட்டத்தை இன்றைக்கு கவர்னர் உரையிலே அளித்த அம்மாவின் ஆட்சிக்கு இந்த நாட்டில் இருக்கிற அனைத்து மக்களும் தங்கள் பாராட்டை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். மின் தட்டுப்பாடு என்பது வராது. மின் தட்டுப்பாடு வரவில்லை என்று சொன்னால், தொழில் வளரும். தொழில் வளரும் என்று சொன்னால், மூலதனம் பெருகும். மூலதனம் பெருகும் என்று சொன்னால் வேலைவாய்ப்புக் கிடைக்கும். வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று சொன்னால் மக்கள் வாழ்க்கையிலே மறுமலர்ச்சி ஏற்படும். இந்த அடிப்படைத் திட்டத்திற்கு அற்புதமாக வழிவகுத்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசாங்கத்தை இந்த நாடு வாழ்த்துகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நாட்டின் மக்கள் பாராட்டிக் கொண்டு



2004 பிப்ரவரி 6] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

இருக்கிறார்கள். இவையெல்லாம் இன்றைக்கு புரட்சிகரமான சீர்திருத்தங்களாக வளர்ந்து வருகிற வேளையில், வேதனையான விஷயத்தை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. நல்ல வேளை; காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள். எதற்காகப் பாராட்டுகிறேன் என்று அவர்களுக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். நல்ல வேளை; ஆட்டம்போட்டு கூட்டம் கூட்டி கூத்தடிக்கும் கூட்டத்தோடு போகாமல் சபையில் உட்கார்ந்து இன்றைக்கு இந்தச் சபையின் கண்ணியத்தைப் பெருமைப்படுத்துகிற விதத்தில், தேவையில்லாமல் பொடா சம்பந்தப்பட்ட அவர்களுடைய இந்தப் பேச்சிற்கு ஒருபோதும் நாங்கள் வர மாட்டோம் என்று உட்கார்ந்தீர்கள் பாருங்கள்; மனம் உவந்து உங்களை பாராட்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதில்தான் சிக்கலே இருக்கிறது என்று திமுகவிற்கு....*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், உட்கார்ந்து இருப்பவர்களை கிளப்பி விட்டுவிடாதீர்கள். *(சிரிப்பு)*

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் போகமாட்டார்கள், என் அன்புக்குரிய சகோதரர்கள், இன்றைக்கு ஆசையோடு என் வாசகத்தைக் கேட்க வேண்டுமென்பதற்காகத்தான், இறைவன் அருள் பெற்று நாங்கள் எல்லோரும் அமர்ந்திருக்கிறோம், கேட்கிறோம் என்ற அளவில் இருக்கின்றார்கள். என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துகள். ஆயிரக்கணக்கான தமிழச்சிகளின் தாலிகளைப் பறிகொடுப்பதற்குக் காரணமாக இருந்த ராஜீவ் காந்தி என்ற ஒரு மனிதனை தீர்த்துக் கட்டியதில் தப்பு இல்லை என்று நினைக்கின்ற கூட்டத்தின், தமிழ் இனத்திற்கு நான்தான் தலைவன் என்று திருமங்கலத்தில் பேசிய ஒரு மிகப் பெரிய அரசியல் குற்றவாளியை, காலமெல்லாம் இந்த நாடு நினைவிலே வைத்துப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தோடு நான் இந்த மன்றத்தில் தெரிவிக்கிறேன் என்று அன்றைக்கும் சொன்னேன்: இன்றைக்கும் பேசுகிறேன். இன்றைக்கு நான் ஏற்று இருப்பது என் தாய்; புரட்சித் தலைவியினுடைய தலைமை. ஆனால் ராஜீவ் காந்தியை பறிகொடுத்த இடத்தில் அன்றைக்கு அந்த ரத்தச் சேற்றில் அந்த இமாலயத் தலைவன், இளைய சமுதாயத்தின் தலைவன் வீழ்த்தப்பட்டபோது, அந்தத் தலைவனுடைய உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, தேசத்து மக்கள் மத்தியில் புரட்சிகரமாகக் குரல் கொடுத்து வந்த இளைஞர் கூட்டத்தில் நானும் ஒரு பிரதிநிதி, மறந்து

*விடுவீர்களா? இந்த நாடு மறந்து விடுமா? என்னுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி,* "Yesterday I supported; I supported the L.T.T.E. Today, I am supporting the same L.T.T.E. and to-morrow, I will continue my support to the L.T.T.E. because that only is the symbol of the Tamil image and the Tamil principles and the Tamil rights."

*அன்றைக்குப் பேசியவர் யார்? நேற்று ஆதரித்தேன்: இன்றைக்கும் தொடருகிறேன்: நாளையும் ஆதரிப்பேன்: என்னை எவரும் தடுத்துவிட முடியாது. எந்தச் சட்டத்தையும் பார்க்கிறோம் என்று சொன்னார்களே; அவர்கள் பேசிய பேச்சுகள் என்பது கொஞ்சமா? இன்றைக்கு புரட்சித் தலைவியின் அரசாங்கம் எந்தச் சட்டத்தால் ஒரு மனிதனைப் பிடித்து உள்ளே வைத்து இருக்கிறது என்பதை இங்கே பெரிய விவாத மேடையாக்கி வைத்துக்கொண்டு பேசுகிறார்களே; என்னுடைய ஊரில் நான் பிறந்த திருமங்கலத்தில் சட்டப்பேரவைத் தலைவரை இந்த மன்றத்திற்கு எம்.எல்.ஏ.வாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அந்த ஊரில்தான் இந்தப் பேச்சு. நானே கேட்டேன். இந்த மன்றத்தில் பேசினேன். அன்றைக்குக் கோபத்திலே காங்கிரஸ் தோழர்கள், காங்கிரஸின் மாண்புமிக்க, உறுப்பினர்கள் கொஞ்ச நேரத்துக்கு முன்பாக அன்றைக்கு வெளியேறினார்கள். ஆனால் நான் அன்றைக்குப் பேசியதை அவர்கள் வெளியிலே இருந்து கேட்டார்கள். பத்திரிகையிலும் படித்தார்கள்.*

*இன்றைக்கும் சொல்கிறேன்: அன்றைக்கு அவர் பேசினார்: ஆயிரக்கணக்கான தமிழச்சிகளின் தாலியைப் பறிப்பதற்குக் காரணமானவர்; ஏன் நான் இதைக் கேட்கக்கூடாது என்று. (குறுக்கீடு)*

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஹக்கீம், உட்காருங்கள்.*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. திரு. சோ.பா. அவர்கள் பேசியது முழுமையாக அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*





**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எங்கள் அண்ணன் அன்பிற்குரிய அண்ணன் திரு. சோ. பா. அவர்கள்... (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. அவர் பேசியது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) வேறு பிரச்சினையைப் பேசுங்கள்.*

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு நான் பதில் கொடுப்பேன் என்று நினைக்க வேண்டாம். அதுவெல்லாம் கிடையாது. அதையெல்லாம் நான் எங்களுடைய அண்ணனுக்குச் செய்யவே மாட்டேன். அவர் ரொம்ப உயர்ந்த மரியாதைக்குரியவர். அவர் எப்போதுமே எதுகைக்கு மோனையாய், ஏட்டிக்குப் போட்டியாய்ச் சொல்லிவிட்டு, இப்படி ஏதாவது வம்பு தும்பிலே மாட்டிக்கொள்வார். இருந்தாலும் அவர் ரொம்ப அமைதியானவர். அவர் ஏன் இப்படிச் செய்கிறார் என்று கேட்டால், நான் சொல்வதெல்லாம் பிடித்து இருப்பதனால், கொஞ்சநேரத்திற்கு இடையிலே ரெஸ்ட் எடுத்துக்கொண்டு, திரும்ப எழுந்து கொள்ளட்டும் என்பதற்காக அவர் இடையிலே இப்படிக் கேட்டார் என்று நினைக்கிறேன்.*

*அதாவது நான் சொல்ல வந்தது, நேரடியாகவே இந்தப் பகிரங்கமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் அதிலே யாருக்கு ரோஷம் வந்திருக்க வேண்டுமோ, அவர்களுக்கு வரவில்லை. ராஜீவ் காந்தியைக் கொச்சைப்படுத்தி, அவருடைய சாவைக் கொச்சைப்படுத்தி, அதேமாதிரியாக, அவருக்கு இழைக்கப்பட்ட அநீதியை நியாயப்படுத்திக் கொண்டு பேசியவர்களை யார் அடித்து, அடக்கிக் கேட்க வேண்டுமோ அவர்கள் கேட்பதற்குக் கூச்சப்பட்ட நேரத்தில், எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி, அவர் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டித்துப் பேசுவதற்குப் பயப்பட்ட நேரத்தில், விடுதலைப் புலி என்ற வார்த்தையைத் தமிழகத்தில் பேசுவதற்கு, சொல்வதற்கு அச்சப்பட்ட நேரத்தில், கூச்சப்பட்ட நேரத்தில், அவர்கள் எவ்வளவு பெரிய குற்றவாளியாக இருந்தாலும் சரி, தடுக்கப்படுவார்கள்: அவர்களை ஆதரிப்பவர்கள் பிடிக்கப்படுவார்கள்: அவர்களோடு சேர்ந்து, இங்கே*

தமிழகத்தில், சட்டம்-ஒழுங்கைக் கெடுக்க நினைப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்: இதிலே எந்தவிதமான ஆட்சேபனைக்கும், எந்தவிதமான அச்சத்திற்கும், எந்தவிதமான பயமுறுத்தலுக்கும் நான் சளைத்தவள் அல்ல: சந்திக்கிறேன் பார் என்று சரித்திரம் படைத்துக் காட்டியவர் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) ரொம்ப பேர் விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசினால், துப்பாக்கி நம் பக்கம் திரும்பி நம் வீட்டை அடித்திடுமோ என்று பயந்து கொண்டு பேசாமல் இருந்தபோது, தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களை தட்டிக் கேட்க பயந்தபோது, தமிழகத்தின் வீதிகளுக்குள்ளே அதே விடுதலைப் புலிக் கூட்டம், பத்மநாபாவின் தலைமையிலே இருந்து அடியிலே கீழ்மட்டத்திலே செல்லும்வரை சுட்டுக் கொன்று, சென்னை நகரத்தை இரத்தக் களரியாக்கி ஆட்டம்போட்ட காலத்திலேயே அடக்க முடியாமல் தவித்தவர்கள்; அடக்க முடியாமல் அச்சப்பட்டு கோழைத்தனமாக நின்றவர்கள் இன்றைக்கு அரசியலிலே புது நியாயம் பேசிக் கொண்டு வருகிறார்கள். ஆனால், அந்தத் தடை செய்யப்பட்ட இயக்கத்தையும், அந்தத் தீவிரவாதக் கூட்டத்தையும், தமிழகத்திலே அடக்கி, ஒடுக்கி, அமைதிப் பூங்காவாகத் தமிழகத்தை ஆக்கிக் காட்டிய பெருமைக்குரியவர் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் மறந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

*முற்பகல் 11—15*

அதேநேரத்தில், காவிரி நீர்ப் பிரச்சினை என்று இங்கே திரும்பத் திரும்பப் பேசுகிறபோது சொன்னார்களே, அவர்களுக்கும் நினைவுபடுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'Integrity of the country has been challenged'. அவர்கள் எந்த ரூபத்திலே மறுக்க வந்தாலும் மறுக்கட்டும்: சொல்லட்டும். Cauvery River Authority; இத்தனை டி.எம்.சி தண்ணீர் தமிழகத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும்; சுப்ரீம் கோர்ட் தமிழகத்திற்குத் தண்ணீர் தரப்பட வேண்டும் என்று கூறியது. அது ஏன் காவிரிப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது எல்லாம் திரும்பத் திரும்பத் திரும்ப ஒரேமாதிரியாக ஒவ்வொருவரும் வேதாந்தம் சொல்கிறமாதிரியும் பெரிய விளக்கம் சொல்கிறமாதிரியும், வியாக்கியானம் சொல்கிறமாதிரியும் மாறி மாறிச் சொல்லி வருகிறீர்களே, பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்; பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்று. எப்படிப் பேச்சு வார்த்தை? எந்தக் கட்டத்தில்? துவக்கக் கட்டமாக இருந்தால் பரவாயில்லை. ஆரம்பத்திலேயிருந்து இதைப் பேச வேண்டியிருந்து, இன்றைக்குத்தான் தொடங்கியிருக்கிறோம்





என்று சொன்னால் பரவாயில்லை. ஆண்டுக்கணக்கிலே பேசி முடித்து, பேசியதற்குப் பிறகு, நீதிமன்றத்திற்குச் சென்றதற்குப் பிறகு, Prime Minister தலைமையில் CRA, அதாவது Cauvery River Authority-ஐ வைத்து எல்லாம் முடித்து, அவர்கள் உத்தரவிட்டதற்குப் பிறகு நாட்டில் இன்றைக்கு என்ன நிலவரம்? ஜவஹர்லால் நேரு சொன்ன வாசகத்தை கர்நாடகத்திலே இருக்கக் கூடிய காங்கிரஸ் சர்க்காருக்கு இங்கு இருக்கிற காங்கிரஸ் கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

Unity in diversity; வேற்றுமையில் ஒற்றுமை; சாதியால், மதத்தால், நிறத்தால், இனத்தால், மொழியால், இன வேறுபாட்டால், மாநில உரிமையால் மக்கள் பிரிக்கப்பட்டுவிடக் கூடாது. சொன்னார்களா, இல்லையா; ஜவஹர்லால் நேரு தெரிவித்தாரா, இல்லையா? அந்த Unity in diversity என்ற கொள்கை National integration, I am very proud to say that I am an Indian; the Indians are very proud to strengthen the integration; the Unity of the country. இதெல்லாம் யார்? எங்கள் அன்னை இந்திரா காந்தி என்று சொல்லி, பாராட்டிப் பெருமைப்படுத்துவது க சொல்கிறோமே அந்த National integration எங்கே இருக்கிறது? சுப்ரீ கோர்ட் தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று சொல் கர்நாடக அரசாங்கத்திற்கு உத்தரவிடுகிறது. அட்டல் பிகாரி வாஜ்பாய் Hon. Prime Minister of India தலைமையில் உள்ள Cauvery River Authority, அந்த ஆணையம் கட்டளையிடுகிறது; தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறது. இல்லை; முடியாது மறுக்கிறோம்; நேற்று எங்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 5 இலட்சம் ஏக்கராக்களுக்கான பூமிக்கு பயன்படுத்தப்பட வேண்டிய தண்ணீரை இன்றைக்கு 22 இலட்சம் ஏக்கராக்களுக்குப் பயன்படுத்துகிற உரிமை கிடைத்துவிட்டதாக அவர்களே எடுத்துக்கொள்கிறபோது, தமிழகத்திற்குத் தரப்பட வேண்டுமென்ற தண்ணீர் தரப்படவில்லை. அதற்கு யார் காரணம்? தர முடியாது. அதற்கு யார் காரணம்? அன்றைக்கும் சொன்னேன் கேட்டேன்; இன்றைக்கும் கேட்கிறேன். கேட்டுப்பெற வேண்டியவர்கள் யார்? திமுகவா? டில்லியில் இருந்த ஆட்சியா? இல்லை. கேட்கவில்லை பெறவில்லை; கேட்க வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் யார்? மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், தமிழகத்திலே ஓட்டு தேவை என்றால், தமிழக மக்களிடத்தில் நியாயத்தைப் பெற வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், அந்த நியாயத்தைப் பெற்றுத்

தருவதற்கு கர்நாடக அரசாங்கத்திடம் Supreme Court சொன்னபடி, Prime Minister சொன்னபடி, எங்கள் தமிழகத்திற்கு, டெல்டா பிரதேசத்திற்கு காவிரித் தண்ணீர் தேவை; தாருங்கள்; இது எங்கள் உரிமை; It is our right-- it is our right என்ற அடிப்படையில் கேட்டுப் பெற்று இருக்க வேண்டும். பெறவில்லை. அதற்கு மாறாக, விளக்கங்களை ஆளுக்கு ஆள் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய வேடிக்கைகளைத்தான் இன்றைக்கு தமிழ்நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நாடும் மன்றமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இறுதியாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

'இங்கு ஊமைகள் ஏங்கவும், உண்மைகள் தூங்கவும்
நானா பார்த்திருப்பேன்?
எதிர்காலம் வரும்; என் கடமை வரும்.
இந்த கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) புதுப் பாதையிலே, பொது நீதியிலே வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன்.'

என்று உரைத்தாரே, அந்த பாடல் வரிகளுக்கு, புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கு, ஒரு புரட்சிகரமான தாயாக, தலைவியாக நம்மிடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் அன்னை, ஆறு கோடி தமிழ் மக்களின் இதயத் துடிப்பாக இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமை (மேசையைத் தட்டும் ஒலி) அது மகா கூட்டணியோ, மெகா கூட்டணியோ, அடிக்கிற அடியில் புரட்சித் தலைவி நாளை பந்தாடிக் காட்டுகிற அரசியல் வேகத்தில் இந்த நாடே பிரளயப்பட்டு இருக்கிறது என்பதை எதிர்காலச் சரித்திரம் உரைக்கும், பார்க்கும், தெளிவு பெறும்; வெற்றி பெறுவோம்; வரலாறு படைப்போம். ஒன்றுக்கொன்று முரண்பட்ட, ஒன்றுக் கொண்று ஆகாத, ஒன்றுக்கொன்று சேராத, கொலை, கொள்ளை, கொல்லப்பட்டவன், இலட்சியத்தாலே பாதிக்கப்பட்டவன், கேரளத்திலே, வங்காளத்திலே சேர முடியாதவன்; தமிழகத்திலே சேருகிறோம், இணைகிறோம், பார்க்கிறோம் என்று காட்டுகிற வேடிக்கை, அடித்து நொறுக்கி தூள் தூளாக்கப்படும் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நாடு பார்க்கப் போகிறது என்பதை மீண்டும் தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேசுகிற ஒரு வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவாதத்திற்குள்ளே போவதற்கு முன்னாலே, சில கோரிக்கைளை வைத்துவிட்டு, விவாதத்திற்குள்ளே போகிறேன். வேலூரில் Medical College தொடங்குவதற்கு அரசாணை பிறப்பித்து 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. எங்களுக்கு பின்னாலே அரசாணை பெற்ற கன்னியாகுமரிக்கு M.C.I. இப்போது approval கொடுத்துவிட்டது. எங்களுக்கு இன்னும்.....(குறுக்கீடு)

*முற்பகல் 11—20*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரிக்கு ஏற்கெனவே first கொடுத்தது. (குறுக்கீடு) தவறான ஒன்று. ஏற்கெனவே இது சம்பந்தமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேலூர் மருத்துக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே — நீங்களே இந்த அவையிலே Dean-ஐ நியமிக்கவில்லை என்று கோரிக்கை வைத்தீர்கள். உடனடியாக ஒரு Dean-ஐ நியமித்திருக்கிறோம். அதேபோல இப்போது Medical Council of India அங்கே விஜயம் செய்தது. அதற்கும் இந்த ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்கள்—நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. M.C.I. approval கொடுக்க வேண்டுமென்று சொன்னால், 27 கோடி ரூபாய்; இன்னும் சில வகுப்பறைகள், auditorium, mens' hostel, womens' hostel எல்லாம் கட்ட வேண்டுமென்ற நியதியை வைத்திருக்கின்றார்கள். பணத்தை ஒதுக்கீடு செய்து, அதைக் கட்டி, அதாவது இந்த Academic year-ல் நீங்கள் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைத் தாங்கள் தந்து ஓராண்டு ஆகிவிட்டது. ஆனால் அதற்கு நிலம் பெறவில்லை. ஒரு தொடக்கப் பள்ளிக்கு இருக்கக்கூடிய கட்டடங்கள்கூட அங்கே கிடையாது. நீங்கள் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைந்ததற்கு இதே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இதே மன்றத்திலே நன்றி தெரிவித்தார்கள். அந்தப் பணி மிக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. இடங்களும் இப்போது தேர்வு செய்யப்பட்டு விட்டன. இரண்டு இடங்கள் பார்க்கப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். ஒன்று, அரசு புறம்போக்கு நிலம். இன்னொன்று தனியார் நிலம். ஆக, இந்த இரண்டு இடங்களில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எந்த இடம் உகந்ததோ அந்த இடத்தைத் தேர்வு செய்வதற்கு நாங்கள் முன்னுரிமை கொடுத்து ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். மிக விரைவில் அந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் மிக விரைவில் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு சி. ஞானசேகரன்:** நன்றி. அடுத்து, வேலூர் Bus stand. 6 ஆண்டுகளுக்கு முன்னாலே G.O. வழங்கப்பட்டு இன்னும் இடம் கையகப்படுத்தப்படாமல் இருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய இடம் நெருக்கடியாக இருக்கிற காரணத்தாலே நிறையப் பிரச்சினைகள். அவ்வப்போது பிரச்சினை, விபத்து, traffic jam ஏற்படுகின்றது. ஆகவே, உடனடியாக கையகப்படுத்தி bus stand அமைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல, 1999 ஆம் ஆண்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட மொத்தப் பண்டகசாலை மற்றும் தனியார்களுக்குச் சொந்தமான 19.27 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் அதிகப்படியான மதிப்பீட்டில் இருப்பதால், நிர்வாக ஆணையரால் வேலூர் நகராட்சிக்கு வழங்கப்பட்ட அந்த இடத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்ட குறுந்தோப்பில் 15.97 ஏக்கர் இடமானது தேர்வு செய்யப்பட்டது. அந்த இடம் பாதுகாப்பற்ற இடமாக நகரமன்ற உறுப்பினர்களால் கருதப்பட்டதால் அந்த இடமும் கைவிடப்பட்டது. மூன்றாவதாக



காகிதப்பட்டறைப் பகுதியிலே 12.56 ஏக்கர் பரப்பளவு இடமானது கண்டறியப்பட்டு இப்போது அந்த இடத்தை தனிப்பட்ட பேச்சு வார்த்தை மூலம் கிரயம் செய்வது ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நன்றி. அதேபோல வேலூர் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்து நெடுநாட்களாகியும் தொடங்கவில்லை. புகழ்பெற்ற M.M.C. தொடங்கி இப்போது 250 ஆண்டுகள் நிறைவு பெற இருக்கிறது. 250 ஆண்டுகள் முடிவுபெற்ற அந்த M.M.C. கல்லூரிக்கு அரசு ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்து ஒரு நல்ல விழாவை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விவாதத்திற்குள்ளே நுழைகிறேன்.

முதன்முதலிலே இந்த அரசு தேர்ந்து எடுக்கப்பட்டபோது, அரசு ஊழியர்களைப் பற்றி, அவர்கள்தான் இந்த ஆட்சிக்கு அடித்தளம் என்றெல்லாம் நீங்கள் ஆளுநர் உரையிலே மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டீர்கள். "எந்தவொரு நிர்வாக அமைப்புக்கும் அரசுப் பணியாளர்களே வலுவான அடிப்படையாக விளங்குகின்றனர். இவ்வரசு தன் பணியாளர்களின் உண்மையான குறைகளைப் பரிவுடன் பரிசீலித்து அவர்களுடைய நலன் மற்றும் பணிநிலை தொடர்பான பிரச்சினைகளைப் பரிசீலிக்க நடவடிக்கைகளை எடுக்கும். இதற்கு ஏதுவாக அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஏனைய பிரிவுகளில் உள்ள பணியாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் மாவட்டங்களிலும், மாநில அளவிலும் உள்ள துறைத் தலைவர்களைச் சந்தித்து, தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வகை செய்யப்படும்" என்று 2001 ஆளுநர் உரையிலே இந்த அவையிலே படிக்கப்பட்டது, சொல்லப்பட்டது. அப்படி அடித்தளமாக இருக்கக்கூடிய அரசு ஊழியர்களைப் பற்றி இவ்வளவு அக்கறையோடு, தாங்கள் ஆட்சிக்கு வந்தபோது சொன்னீர்கள்—இப்போது புதிதாக அரசு ஊழியர்கள் எதையுமே கோரவில்லை. வழங்கப்பட்டு வந்த, போராடிப்பெற்ற சில உரிமைகளை மீண்டும் வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது 999 பேர் பாவம், அவர்கள் பதவி நீக்கம்; முழுமையாக நீக்கப்பட்டு, அவர்களுடைய வீட்டில் பசியும் பட்டினியுமாக அவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிற நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் எப்படியாவது, நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்

[திரு. சி. ஞானசேகரன்] [2004 பிப்ரவரி 6

நடப்பவையாவது நல்லவையாக இருக்கட்டும். ஆகவே தயவுசெய்து அரசு ஊழியர்களைப் பற்றி இந்த ஆளுநர் உரையில் நிச்சயமாக வரும் என்று அனைவரும் பாவம் காத்துக் கிடந்தார்கள். நீதிமன்றத்திற்குக்கூட போய் அப்பீல் செய்யாமல் அவர்கள் ஓரளவுக்குத் தயங்கித் தயங்கி நின்று கொண்டு இருந்தார்கள். இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உணர்ந்து முதல்வருக்கும் இதை நிச்சயமாக எடுத்துச்சொல்லி, எப்படியாவது அவர்களுக்கு மீண்டும் ஒரு வேலை. ஏனென்று சொன்னால், நீங்கள் இந்த ஆளுநர் உரையிலே, யானைக்கு — எந்த அளவுக்கு 100 யானைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்போடு நடத்தினார்கள். பாசத்தோடு இருக்கிறார்கள். அதற்கு — ஓய்வு கொடுத்தார்கள் என்றெல்லாம் இப்போது நீங்கள் சிறப்பாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். யானைகளுக்கு இந்த அளவுக்கு நீங்கள் செய்கிறபோது இந்த ஆட்சியினருக்கு அடித்தளமாக அமைந்து இருக்கிற அந்த அரசுப் பணியாளர்களை ஏன் நீங்கள் பரிவோடு அன்போடு கொஞ்சம் பரிசீலித்து அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கக்கூடாது என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11—25

இரண்டாவது நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பொதுவாக நிதிச் சீர்திருத்தம் கொண்டு வந்து இருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நிதிச் சீர்திருத்தம் நிதிச் சீர்திருத்தம் என்று சொல்லி, யாராவது ஒருவர், குடும்பத் தலைவர், பொதுவாக பணியில் இருக்கிறபோது அவர்கள் இறந்துவிட்டால் அந்தக் குடும்பம் வாழ்வதற்கு வாரிசுக்கு வேலை கொடுப்பது என்பது இருக்கக்கூடிய அரசாணை; அதற்கும் தடை விதித்து இப்போது compassionate ground appointment-இல்லாமல் போய்விட்டது.

மற்றத் துறைகளில் எல்லாம் Additional Secretary, Joint Secretary, எல்லாம் போடுகிறீர்கள். நம்முடைய சட்டமன்றம் இது unique. ஏனென்றால் இதில் வேறு துறைகளில் இருக்கக்கூடிய ஆட்களைக் கொண்டு வந்து Joint Secretary-ஆகவோ, Additional Secretary-ஆகவோ போட முடியாது. போட்டாலும் அவர்களுக்கு வேலை தெரியாது.



2004 பிப்ரவரி 6] [திரு. சி. ஞானசேகரன்]

ஆகவே இந்தத் துறையில் Additional Secretary, Joint Secretary போன்ற post-கள் 4 post-கள் — 90 நாட்களுக்குள், கோப்பு முடிக்கும் வாரம் என்றெல்லாம் வைத்து நீங்கள் 2001 ஆளுநர் உரையில் சொன்னீர்கள். ஆனால் இங்கேகூட அந்தப் பதவிகள்—நிரப்பப்படாமல் promotion கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை; அதேமாதிரி எல்லாத் துறைகளிலும் இருக்கிறது.

கல்வித் துறை, காவல் துறை இதுபோன்ற சில துறைகளுக்கு மட்டும் நீங்கள் செய்து இருக்கிறீர்கள். ஆனால் மற்றத் துறைகளிலே recruitment-ஐ முழுவதுமாகத் தடுத்துவிட்ட காரணத்தினால் படித்துவிட்டு இருக்கக்கூடிய ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் இன்று வேலையில்லாமல் திண்டாடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே unemployment problem என்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி சீரடைந்துவிட்டது என்று சொல்லி, இப்போது சிலவற்றை எல்லாம் புதிதாக கொண்டு வந்திருக்கிறீர்கள். அதேபோல, இந்த நிதிச் சீர்திருத்தம் என்ற பெயரைச் சொல்லி recruitment-ஐத் தடுத்து தயவுசெய்து படித்தவர்களுடைய குரல்வளையை நெறிக்காதீர்கள் என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தமிழகத்தில் அரசுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை, சட்டமன்றப் பேரவையாக இருந்தாலும் கூட, இதையும் உள்ளிட்டு, அதிகமான பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் கணக்கெடுப்பிலே தற்போது தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இருக்கின்ற பணியாளர்களைக் குறைக்க வேண்டுமென்ற பரிந்துரைதான் சீர்திருத்தக் குழுக்கள் கூறி இருக்கின்றன. புதிய ஆட்களைச் சேர்க்க வேண்டாம் என்கிற பரிந்துரையையும் சீர்திருத்தக் குழுக்கள் கூறி இருக்கின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்திருத்தம் என்பது மற்றத் துறைகளுக்குப் பொருந்துமே ஒழிய நம்முடைய அதாவது இந்த சட்டமன்றத் துறை என்பது அதிலிருந்து விலக்கப்பட்ட, மிக உயர்வாகக் கருதப்படுகிற ஒரு துறை, unique துறை, என்றுதான் குறிப்பிட்டேன். ஆகவே, இந்தத் துறைக்கு அது பொருந்தாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏனென்றால் இவர்கள்தான் எல்லோரிடமும் வேலை வாங்கியாகவேண்டும். நீங்கள் இவர்களுக்கே

[திரு. சி. ஞானசேகரன்] [2004 பிப்ரவரி 6

இல்லையென்று சொல்லி விட்டால் சரியாக இருக்காது என்பதற்காக அதை fill-up செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Law and Order--2001 ஆளுநர் உரையிலே, ஆளுநர் படிக்கின்றபோது, மிகத் தெளிவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில், வீரப்பனையும் அவனுடைய கூட்டாளிகளையும் பிடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. மத்திய அரசு ஒத்துழைப்போடு, பயங்கர குற்றவாளியான வீரப்பனைப் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்று நீங்கள் 23-5-2001-லே சொன்னீர்கள். பதவி ஏற்று இப்போது கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகப்போகின்றன.

நாகப்பாவை வீரப்பன் கடத்திக் கொன்றபோது, நாகப்பா வீரப்பனால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அதை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. வீரப்பனின் கொடுமையான நடவடிக்கைகளுக்கு விரைவில் முடிவு கட்ட வேண்டும். வீரப்பனின் கொடுஞ்செயலுக்கு இறுதி முடிவு, ஒரு முற்றுப்புள்ளி வைக்க கடுமையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது என்று நீங்கள் 23-1-2003-லே கூட ஆளுநர் உரையிலே சொன்னீர்கள்.

ஆனால் வீரப்பனைப் பற்றி இப்போது நீங்கள் ஒரு பெரிய மயான அமைதியை உங்களுடைய ஆளுநர் உரையிலே கடைப்பிடித்து இருப்பது ஏன் என்று தெரியவில்லை. It is a thousand dollar question which is still un-answered. Why this Government became so ineffective? The Chief Minister as well as the other Ministers will have to reply to the House.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ, வீரப்பன் நம் கண் முன்னாலே இருப்பது போலவும், உடனே ஏன் அவரைக் கைது செய்யவில்லை என்பது போலவும் மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் கேட்கின்றார்கள். தகவலை நீங்கள் பத்திரிகையிலேகூடப் படித்திருப்பீர்கள். வீரப்பன் தற்போது இருக்கிற இடம் கர்நாடக மாநிலத்திற்குட்பட்ட பகுதி என்றுகூட நீங்கள் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் கடுமையான நடவடிக்கைகள், தொடர் நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையையொட்டி எடுக்கப்பட்டு வருகின்றன. எந்த நடவடிக்கையும் சோர்வடையவில்லை. நடவடிக்கை மிகக் கடுமையாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாடே அறியும். உங்களுக்குப் புரியவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.



2004 பிப்ர 6]

முற்பகல் 11—30

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு நன்றாகப் புரிகிறது. மாண்புமிகு அமைச்சருக்குத்தான் புரியவில்லை. பொதுவாக, 1991-லிருந்து 1996 வரை அப்போது இதே முதலமைச்சர் இருந்தார்கள். நான் பலமுறை இந்த அவையிலே கேட்டபோதுகூடச் சொன்னார்கள். வீரப்பன் தமிழக எல்லையில் இருந்தால் என்றோ பிடித்திருப்போம். கர்நாடக எல்லையில் இருந்தான் என்று சொன்னார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அதையே சொல்கிறார்கள். அப்படியென்றால் நீங்கள் வீரப்பனைப் பிடிக்கப் போவதில்லை என்று தயவுசெய்து இந்த அவையிலே அறிவித்தாவது விடுங்கள். நான் கேட்காமல் இருந்து விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள். கர்நாடக எல்லையில் வீரப்பன் இருக்கிறான் என்றால் கர்நாடக முதலமைச்சரிடம் சொல்லி, நான் பிடித்துத் தருகிறேன் என்று நீங்கள் சொல்வீர்களேயானால் அது தமிழ்நாட்டிற்குப் பெருமை; அது உங்கள் பேரியக்கத்திற்குப் பெருமையாக இருக்கும். அத்தகைய அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பன் கர்நாடகத்தில்தான் இருக்கிறான் என்று உறுதியாக அமைச்சருக்குத் தெரியுமேயானால், எந்த இடத்தில் கர்நாடகத்தில் இருக்கிறான் என்பதை அவர்களுக்குச் சொன்னால் கொஞ்சம் வசதியாக இருக்கும். ஏனென்றால், தமிழகத்தில் நடமாட்டம் இல்லை என்று சொல்வதைவிட உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தி இங்கே இருக்கமுடியாது. மூன்று காடுகளும் ஒரே இடத்தில் சந்திக்கின்றன. முதுமலைக் காடாக இருந்தாலும் சரி, பந்திப்பூர் ஆக இருந்தாலும் சரி, அதேபோல வயநாடாக இருந்தாலும் சரி, மூன்றும் ஒரே இடத்திலேதான் சந்திக்கின்றன. நாம் இருக்கின்ற இடம் தமிழ்நாடு என்பார்கள். யானை நிற்கின்ற இடம் கர்நாடகம் என்பார்கள். நாம் நிற்கின்ற இடம் தமிழ்நாடு, மான் நிற்கின்ற இடம் கேரளா என்பார்கள். ஆக, ஒரே இடத்தில் வீரப்பன் இருக்கின்றான் என்று சொல்வதைப்போல உண்மைக்குப் புறம்பான ஒன்று இருக்கமுடியாது. வீரப்பன் இருப்பது தெரிந்தால் அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். ஆனால் வீரப்பனைப் பிடித்தே தீரவேண்டுமென்கிற உறுதியோடு

நீங்கள் செயல்பட்டால் நிச்சயமாகப் பிடிக்கமுடியும். பலமுறை வீரப்பன் தமிழ்நாட்டிலே இருந்துதான் பலரையும் கடத்தியிருக்கின்றான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் மிக அக்கறையாக, மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். வீரப்பன் எங்கிருந்தாலும், அது கர்நாடக மாநிலத்தில் இருக்கிற எல்லைக்குள் இருந்தாலும்கூட, கர்நாடக அரசோடு நமது காவல் துறை தொடர்பு கொண்டு செயல்பட்டு வருகிறது. கட்டாயம் வீரப்பன் விரைவிலே பிடிப்பட்டு விடுவான். அதற்கான அத்தனை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக எடுத்து வருகிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு subject தான் நான் இன்னும் எதுவுமே பேசவரவில்லை.

அதேபோல, நீங்கள் வெளிப்படையான ஒரு நிர்வாகத்தைக் கொடுப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், இலஞ்ச இலாவண்யத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கடுமையான நடவடிக்கையை தயவுசெய்து தாங்கள் எடுங்கள். பொதுவாக சமுதாயத்தில் அது புழுத்து, புரையோடி இருக்கிறது. அது எல்லா அலுவலகங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது.

இரண்டாவது விஷச் சாராயம். நீங்கள் எங்கு பார்த்தாலும் நடவடிக்கை எடுக்கிறீர்கள். விஷச் சாராயச் சாவு; இப்போதுகூட மயிலாடுதுறையில் இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள்; ஆரோக்கியம் என்றும் வேளாங்கண்ணி என்றும், அதேபோல இன்றுகூட விஷச் சாராயம் விற்றதாகச் செய்தி.

அடுத்து கொள்ளை. திருவான்மியூர் கடற்கரையிலே நேற்றுகூட கொள்ளை என்று சில செய்திகள். இப்போது இப்படிப்பட்ட கொள்ளைகள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆளுநர் உரையிலே சொல்கிறபோது காவலர்களுக்கு நீங்கள் சலுகைகள் கொடுத்திருக்கிறீர்கள் அல்லது நீங்கள் ஏற்கெனவே காவல் துறையை



நவீன மயமாக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். எவ்வளவோ வீடுகள் கட்டிக் கொடுக்கிறீர்கள், இப்படித்தான் இருக்கிறதேயொழிய, குற்றங்களைக் களைய நீங்கள் என்ன கடுமையான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள்? அதனைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அதற்கான தெளிவான விளக்கம் இல்லை. அதை விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினைபற்றிப் பலமுறை பேசிக் கொண்டிருக்கிறோம். சென்னைக்கு குடிநீர் வருவதற்கு பொதுவாக ஸ்ரீசைலத்திலிருந்து சோமசிலா வரை இருக்கக்கூடிய 13 கி.மீ. தொலைவிற்கு இருக்கக்கூடிய கால்வாய் வெட்டப்படவில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே அவையிலே சொன்னார்கள். இப்போது அந்தக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறதா, இல்லையா? கிருஷ்ணா நதி நீர் வரும் என்று சொல்கிறீர்கள். எப்போது வரும்? கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை பொதுவாக இப்போது ஓரளவுக்கு ஓரம் தள்ளப்பட்டு விட்டு, இப்போது வீராணத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். வீராணத்தில் இப்போது தண்ணீரே இல்லை என்று பல கருத்துகள் இங்கே பரிமாறப்பட்டன. அதற்கு ஆழ்துளைக் கிணறுகள், கொள்ளிடத்திலே போட்டு, ஏரியில் விட்டு பிறகு கொண்டு வருவதாகச் சொல்கிறீர்கள். அதற்கு ரூ.730 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். ஆனால், அதிலே 1200 அடிக்குக் கீழேதான் அந்தக் கொள்ளிடத்திலேகூட நீராதாரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கிறபோது நீங்கள் எப்படி....

முற்பகல் 11—35

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்தில் எங்கெல்லாம் மிகு நீர் இருக்கிறதோ அந்தப் பகுதியில்தான் ஆழ்துளைக் கிணறு அமைத்து எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, சென்னையில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே பல மாவட்டங்களில் குடிநீர்ப் பிரச்சினை இன்று கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிற காரணத்தாலே அதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும்

[திரு. சி. ஞானசேகரன்] [2004 பிப்ரவரி 6

இணைந்து, அதற்கு நிதி ஒதுக்கீடு கொஞ்சம் அதிகமாகக் கொடுத்து இந்தப் பிரச்சினையை நீங்கள் சமாளிக்க வேண்டும். எல்லா இடங்களிலும் இந்தப் பிரச்சினை கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலவச வேட்டி சேலையைப் பொறுத்தளவில் இன்று பல இடங்களில், கிராமப்புறங்களில் இலவச வேட்டி சேலை கொடுக்க முற்பட்டபோது, கொடுக்க முடியாத சூழ்நிலை வந்தவுடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுத்து, யாரெல்லாம் அந்த கார்டு, அதாவது 'எச்' கார்டு இல்லாத மற்ற அத்தனை பேருக்கும் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இப்போது உருவாக்கியிருக்கிறீர்கள். ஆனால் இன்னும் சேலை வந்து சேரவில்லை. ஏனென்றால் இப்போதுதான் நீங்கள் order கொடுத்திருக்கிறீர்கள். அப்படி இருக்கிறபோது எல்லா ஊர்களிலும் இப்போது பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு நீங்கள்..

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொங்கல் திருநாளன்று ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக சேலைகளும் வேட்டிகளும் வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் 81 இலட்சம் சேலைகளும், 74 இலட்சம் வேட்டிகளும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீண்டும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோரிக்கை வந்ததையடுத்து, யாரெல்லாம் கூப்பன் மூலம் அரிசி பெறுகிறார்களோ அவர்களையும் சேர்த்து 1 கோடியே 7 இலட்சம் பேர் என்றும், கூப்பன் இல்லாத, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மக்கள் 4 இலட்சமும் சேர்த்து 1 கோடியே 11 இலட்சம் சேலைகளும், 1 கோடியே 11 இலட்சம் வேட்டிகளும் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலும் பேரூராட்சிப் பகுதிகளிலும் 20-2-2004-க்குள்ளாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 21-2-2004-லிருந்து நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் கொடுத்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*



2004 பிப்ரவரி 6]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டைப் பொறுத்தளவில் இப்பொழுது நீங்கள் சேலைகள் கொடுப்பதில் பிரச்சினை வருகிறது. ரேஷன் கார்டே இன்னும் சிலபேருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. ரேஷன் கார்டுக்கு மனு செய்து, கிட்டத்தட்ட நாங்கள் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கொடுத்ததுகூட கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே நீங்கள் உடனடியாக அதற்கு ஆய்வு செய்து, ரேஷன் கார்டை அவர்களுக்குக் கொடுத்து விட்டீர்கள் என்று சொன்னால் அவர்களும் இந்த இலவச வேட்டி சேலையைப் பெறக்கூடிய ஒரு சூழல் உருவாகும். Rice coupon கூட, நீங்கள் ஒரு காலக்கெடு கொடுத்து அந்தக் காலகட்டத்தில் வாங்காதவர்கள் இன்று பல ஏழைகள் rice coupon பெற முடியாமல் இருக்கிறார்கள். ஆக நீங்கள் மீண்டும், application call for செய்து தகுதியுள்ளவர்களுக்கு rice coupon கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. பொதுவாக புதிய தொழிற்கொள்கையை அறிவித்தீர்கள். அந்தப் புதிய தொழிற்கொள்கையில் இதுவரை யாராவது, தனியார் Private Sector-ல் வரக்கூடிய சில தொழில்கள் இருக்கின்றனவா? Unemployment இன்னும் நிறைய இருக்கிறது. Employment கொடுத்து பலபேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய சூழல் இன்னும் வரவில்லை. அதாவது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி சொல்வீர்கள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கூட 339 பஞ்சாயத்து யூனியன்களில், 72-க்குத்தான் 2½ ஆண்டுகளில் ஆணையே கொடுத்திருக்கிறீர்கள். மற்றவற்றிற்கும் விரைந்து ஆணையைக் கொடுத்து வேலைவாய்ப்புக் கொடுக்கும் வகையில் தொழில் முனைவோரை வெளிநாட்டிலிருந்து வரவழைத்து அவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையிலே அறிவிக்கப்பட்டு இன்றைக்கு மிக வேகமாக, விரைவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற, இன்னும் குறிப்பாக, சிறப்பாகச் சொல்லவேண்டுமென்றால், அண்ணல் காந்தியடிகளாக வாழ்ந்து

வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருக்கிற 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 73 புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாகத் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், தொடங்கப்பட்ட அந்த 73 தொழிற்சாலைகளின் திட்ட மதிப்பீடு சுமார் 49.44 கோடி ரூபாய் என்பதையும் நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 708 திட்டங்களுக்காக ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதனடிப்படையில் மிக விரைவிலே மேற்கொள்ளப்படவிருக்கிற 708 ல் 73 போக மீதியிருக்கிற திட்டங்கள் இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் சிறப்பாகத் தொடங்கி செயல்பட இருக்கின்றன எனபதையும் நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆளுநர் உரையிலே, புதிய தொழிற்சாலை அமைப்பதற்கு ஒரு ஆய்வுக்காக ஏற்பாடு செய்து வல்லுநர் குழு அமைக்கப்படும் என்றும் புதியதோர் தொழிற் கொள்கை வகுக்கப்பட்டு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுடைய கூட்டமைப்பு ஒன்று Consortium அமைக்கப்படும் என்றும் சொன்னீர்கள். அதை இதுவரையிலே செய்யவில்லை. அதனைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வந்த கட்டுமானத் தொழில் மற்றும் வீடுகள், மனைகள் வாங்குதல் விற்றல் Real Estate business ஆகிய தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சிமெண்ட் தொழிலில் நேர்மையற்ற வணிக நடைமுறையைத் தவிர்ப்பதற்காக தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுவதாகவும் சிமெண்ட் விலையேற்றத்தைச் சமாளிக்க முறையான கட்டுப்பாட்டு அமைப்பு ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீங்கள் ஆளுநர் உரையிலே 2001-லே சொன்னீர்கள். இப்போது மீண்டும் சிமெண்ட் விலை மிக அதிகமாக ஏறிவிட்டது. ஸ்டீல் விலை ஏறிவிட்டது. மணல் விலையைப் பொறுத்த அளவிலே இப்போது பார்த்தால் அரசாங்கம்



ஏற்றுக்கொண்ட பின்னாலும்கூட மணல் ...' (மணியடிக்கப்பெற்றது)... இதோ முடித்துவிட்டேன்.

மக்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அந்தத் தொழிலைக்கூட செய்யமுடியவில்லை காரணம் சிமெண்ட் விலை உயர்வு, மணல் விலை உயர்வு, அதேபோல இப்போது ஸ்டீல் விலை உயர்ந்த காரணத்தினாலே கொஞ்சங்கூட (குறுக்கீடு) ஏனென்றால் அப்போதெல்லாம் இந்தியா சிமெண்ட் சீனிவாசன் போன்றவர்கள் எல்லாம் இருந்து ஒரு Syndicate வைத்தார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். இப்போது அவர்கள் எல்லாம் யாரும் இல்லை. முரசொலி மாறன் என்று எல்லாம்கூடச் சொன்னீர்கள். அவர்கள் யாரும் இப்போது இல்லை. அப்படி இல்லாத கட்டத்தில் ஏன் இப்போது சிமெண்ட் விலை மிக அதிகமான அளவு உயர்ந்தது? ஏன் ஸ்டீல் விலை உயர்ந்திருக்கிறது? இதற்கு எல்லாம் ஒரு ஆய்வுக் கூட்டத்தை, தயவுசெய்து நடத்தி, அதையெல்லாம் குறைத்தால்தான் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதோடு, பணப் புழக்கம் நீங்கள் எதிர்பார்த்தபடி வரும்; Real Estate business ஓரளவுக்கு மீண்டும் தழைக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம். (குறுக்கீடு) பேசியது போதும், போதும். இப்போது நேரம் இல்லை. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்று பதில் அளித்தார்கள். அதிலே எல்லோருக்கும் நாங்கள் பட்டுவாடா செய்துவிட்டோம். பணம் எல்லாம் கொடுத்து ஆயிற்று என்று சொன்னார்கள். அது போன வருடத்திற்குரியது. எப்போதுமே கரும்பு அனுப்பினோம் என்று சொன்னால் 14 நாட்களுக்குள் நீங்கள் agreement-படி பணத்தைக் கொடுக்கவேண்டும். இப்போது டிசம்பர் மாதம் கரும்பு அனுப்பிய, இப்போது இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு போன வருடத்திலேதான் T.N.S.C. பாங்கிலே (குறுக்கீடு) நீங்கள் பணத்தைக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், திரு. ஆறுமுகம், (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்வார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் விளைவாக நேற்றைய முன்தினம், 4 ஆம் தேதி எல்லா கரும்பு ஆலைகளுக்கும் பணம் அனுப்பப்பட்டிருக்கிறது. அது முறையாக எல்லா கரும்பு விவசாயிகளுக்கும் கண்டிப்பாகச் சென்றடையும். இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரவைப் பருவத்திற்கான பணம் பிறகுதான் வழங்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த ஆளுநர் உரையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். முடித்துவிடுங்கள் திரு. ஆறுமுகம்.

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போது வெறும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை, நேரம் இல்லை. திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும் டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரைமீது நடக்கின்ற இந்த விவாதத்திலே பல்வேறு தலைவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே கொடுக்கப்பட்டிருக்கிற உரை இன்றைக்கு தமிழக மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு ஒரு எதிர்பார்ப்பை நிறைவு செய்கிற உரையாக அமையவில்லை என்பதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





தமிழகம் முழுவதும் இன்றைக்கு வறட்சி தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. வறட்சியினாலே பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் கடந்த ஆண்டு தமிழக அரசாங்கம் வறட்சி நிவாரணம் வழங்குவோம் என்று கூறியிருந்தது. ஆனால் விவசாய மக்களுக்கு அது எந்த அளவிற்குச் சென்றடைந்தது என்று சொன்னால், மிகவும் சொற்பமான அளவிற்குத்தான் விவசாயிகளுக்குச் சென்றடைந்தது என்பதை இந்த அவையிலே மீண்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுப்போன தென்னை மரங்களுக்கு நிவாரணம் கொடுக்க இருக்கிறோம் என்று சொன்னீர்கள். அது ஒரு சொற்பமான நபர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு மீதி விவசாயிகளின் தென்னை மரங்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டு, நடுத்தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-45*

ஆளுநர் உரையிலே, குடிநீர்த் திட்டத்தின்படி 2004-லே மார்ச்சிற்குள் 6 ஆயிரம் குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படும் என்றும் அதற்கான நிதி 572 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ராஜீவ்காந்தி குடிநீர்த் திட்டத்திலே எவ்வளவு நிதி அடங்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இந்த ஆண்டு தமிழகத்தைப் பொறுத்தவரையிலே சென்னை மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக தண்ணீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் இருக்கிறது என்று பல்வேறு வல்லுநர்கள் சொல்கிறார்கள்; பல்வேறு பத்திரிகைகளிலும் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், சேலம், தருமபுரி, இராமநாதபுரம், திருச்சி என்று பல்வேறு மாவட்டங்கள் இப்போதே வறட்சியின் பிடியிலே தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் குடிதண்ணீர் பிரச்சினை எந்த அளவிற்குப் போகும் என்பதை நினைவில் கொண்டு இந்த அரசாங்கம் இப்போது குறைந்தது 50 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகள்.....

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையை வருகிற மார்ச் மாதத்திற்குள் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை எந்த ஆண்டிலும் ஒதுக்கீடு பண்ணாத அளவிற்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே போர்க்கால அடிப்படையிலே, அவருடைய ஆலோசனைப்படி செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** குடிதண்ணீர் பிரச்சினை இல்லாமல் இந்த ஆண்டு இருந்தால் தமிழக அரசுக்கு, தமிழக மக்கள் நன்றிபடைத்தவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே பக்கம் 18-லே பத்தி 21-லே ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. ஆற்றுப் படுகைகளைப் பாதுகாப்பதற்கும், வகைதொகையில்லாமல் மணல் வெட்டி எடுப்பதன் காரணமாக ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சியாக, பொதுப் பணித் துறையின் மூலம் மட்டுமே மணலை முறையாக வெட்டி எடுக்கும் சீரான திட்டத்தினை அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதையும், நமது நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்வதுடன் அரசுக்குக் கூடுதல் வருவாயையும் ஈட்டித்தரும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கையை கடந்த ஆண்டு பாட்டாளி மக்களுடைய கோரிக்கையாக வைத்து அதை நிறைவேற்றியதற்காக அரசாங்கத்திற்கு நாங்கள் பாட்டாளிகள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேசமயத்தில் என்னுடைய தொகுதியிலே திருக்கழுக்குன்றத்தில் எடையாத்தூரிலே இந்த மணல் எடுக்கின்ற பிரச்சினையில் நேற்று முன்தினம் அந்தப் பகுதி மக்களே அதை நிறுத்திவிட்டார்கள். அதிலே ஆள் ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். 2, 3 ஆள்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுப் படுகையிலிருந்து மணல் எடுப்பது





கடந்த காலங்களிலே வரைமுறையை மீறியும், சட்டத்தை மீறியும் மிகப் பெரிய ஆழங்கள் வைத்து மணல் எடுக்கப்பட்டு வந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிந்து குடிநீர் ஆதாரங்கள் பாதிக்கப்படாமலும், நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும் அரசே மணலை எடுத்து விநியோகம் செய்யும் திட்டத்தினை அறிவித்தார்கள். அதனடிப்படையில் எங்கெல்லாம் மணல் மிகுதியாக இருக்கிறதோ அந்தப் பகுதியில் மணல் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 3 அடி ஆழத்திற்கு மேல் எங்கும் மணல் எடுக்கக்கூடாது என்று கூறப்பட்டு அந்த அடிப்படையில்தான் மணல் எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் புகைப்படத்தைக் காலையில் என்னிடம்கூடக் காண்பித்தார்கள். அந்தப் புகைப்படம் முன்பு எடுக்கப்பட்டதா அல்லது தற்போது எடுக்கப்பட்டதா என்ற வினாவைக்கூட நான் அவரிடம் கேட்டேன். அவர் தற்போது எடுக்கப்பட்டது என்று சொன்னார். எந்தப் பகுதியில் அந்த மாதிரி நடைபெறுகிறது என்ற விவரங்களையும் நான் அவரிடம் வாங்கி வைத்திருக்கின்றேன். அந்தத் தகவலையும் நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சொல்லி, நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்று மணல் அதிகமாக எடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களையும் கேட்டிருக்கிறேன். அது வந்த பிறகு நான் அதற்கு விரிவான விளக்கம் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாக எங்குமே பழைய முறையில் அளவிற்கு அதிகமாக எடுக்கப்பட்டு வந்த மணல் தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்குக்கூட எங்கெல்லாம் குடிநீர் ஆதாரங்கள், குடிநீர்க் கிணறுகள் இருக்கின்றனவோ அங்கே சுற்றுப்புறங்களில் 500 மீட்டருக்கு அருகில் மணல் அள்ளக்கூடாது என்றும், 3 அடி ஆழத்திற்கு மேல் எங்குமே மணல் அள்ளக்கூடாது என்றும் நாம் விதியை ஏற்படுத்தி அந்த வகையில் தான் மணல் எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் மணலும் தாராளமாக, கட்டுமானப் பணிகளுக்குக் குறைந்த விலையில் தமிழகம் எங்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

**திரு. கே. ஆறுமுகம்:** அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு தகவல். அதிலே அங்கே ஒப்பந்தக்காரர்களாக டெப்போக்கள் நடத்தி வருபவர்கள் நேரடியாக அங்கே ஆற்றிலேயே வருகின்ற லாரிகளை விட்டு எடுப்பதாகத் தகவல். அதனால்தான் நேற்றைக்கு முன்தினம்கூட அந்தப் பகுதி மக்கள் மறியல் செய்திருக்கிறார்கள். அதுவும், அவர் பயிரிடுகின்ற நிலத்திற்கு 50 அடிக்குப் பக்கத்திலேயே மணல் எடுத்திருக்கிறார்கள். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் துணை போன அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலே அனைத்து அலுவலர்களும் தமிழிலேதான் கையெழுத்து இடவேண்டுமென்று ஒரு அறிவிப்பை 1984-லே வெளியிட்டார்கள். ஆனால், இன்றைய அளவிலே தமிழிலே கையெழுத்துப் போட மறுக்கிற அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற அதிகாரிகளுக்கும் அலுவலர் பெருமக்களுக்கும் — இப்போது அரசுகூட ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.— தமிழிலே கையெழுத்து போட்டால்தான் சம்பளம் வழங்கப்படும் என்கிற கோரிக்கையைக் கண்டிப்பாக இந்த அரசாங்கம் எடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால் நாம் தமிழுக்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு, தமிழ் மொழிக்குச் செய்கிற ஒரு சேவையாக இதை வைக்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழையே மறந்துவிடுகிறார்கள். இன்றைக்கு அலுவலகங்களிலே ஆங்கில நடைமுறைதான் அதிகமாக இருக்கிறது. அதை மாற்றுவதற்கு முதற்கட்டமாக இப்போதாவது தமிழிலே கையெழுத்தாவது இட வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசாங்கம் அந்த அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் அறிவுறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பணிபுரிகிற அரசு அலுவலர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முதற்கொண்டு அனைவரும் தமிழ் மொழியை ஆட்சிமொழியாகப் பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு அவர்கள் தமிழிலேதான் கோப்புகளைத் தயாரிக்க வேண்டும், தமிழிலேதான் கையெழுத்து இட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு அவர்களுக்கு அதற்காக தனித் தேர்வையே நடத்தி வருகிறது. இதிலே எந்தவித



குறைபாடும் இல்லை. அப்படியிருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாராவது அதிகாரிகள் அதைப் பின்பற்றவில்லையென்று சொன்னால், நிச்சயமாக அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்கும். அரசு கண்காணிப்போடுதான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது தமிழிலே எழுத வேண்டுமென்று கூறினார்கள். நீங்கள் உங்களுடைய தலைவரைக் கூறும்போது டாக்டர் என்று கூறினீர்கள். அதற்குப் பதிலாக மருத்துவர் என்று கூறுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருப்பப்பட்டவர்கள் நடைமுறையிலே இருக்கிற காரணத்தினாலே, வழக்கில் உள்ள காரணத்தினாலே டாக்டர் என்று சொல்கிறார்கள். மருத்துவர் என்றும் சொல்லி அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கிற நாம், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையிலே கையெழுத்துக்கூடப் போடவில்லை என்பதுதான் உறுப்பினருடைய ஆதங்கம். அதிலும்கூட என்னுடைய வேண்டுகோளாகச் சொல்ல விரும்புவது இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டிலே கையெழுத்துப் போடுகின்ற நேரத்திலேகூட, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களாகிய நாம் முன்மாதிரியாக இருந்து, தமிழிலே கையொப்பம் இட வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த மாமன்றத்திலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழக அரசாங்கத்தில் தமிழக அலுவலர்கள் தமிழிலேயே கையெழுத்து இட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள், உங்களுடைய ஐயா அவர்களை டாக்டர் ஐயா அவர்கள் என்று அழைக்கிறீர்களே, மருத்துவர் ஐயா என்று அழையுங்கள் என்று சொல்கிறார். நாம் பயன்படுத்துகிற பொருள், இங்கே இருக்கின்ற பொருளை, நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட 10 பொருளை தமிழிலே உடனடியாகச் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. நாம் எல்லாம் அடிமை நாட்டிலே ஆங்கில மொழியையே பயின்றுவிட்டவர்கள். அதைத் திருத்த வேண்டுமென்றுதான் உங்களுடைய தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழைத் தமிழகத்திலே ஆட்சிமொழியாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை நடைமுறைப் படுத்துவதற்காகத்தான் எங்களுடைய கோரிக்கையை நாங்கள் வைக்கிறோம்.

தமிழக அரசாங்கம் இதுவரையிலே ஆதிதிராவிட மாணவிகளுக்கு, பிளஸ் 1, பிளஸ் 2 படித்த மாணவிகளுக்கு 1.44 இலட்சம் சைக்கிள்களை வழங்கியிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில் மதம் மாறிய ஆதிதிராவிட சகோதரிகளுக்கும் சைக்கிள் வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், கடந்த ஆண்டிலே இருந்து தமிழகத்திலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்குக்கூட இந்தச் சைக்கிள் 2004-2005 ஆம் ஆண்டிலே வழங்கப்படுமா என்ற ஆதங்கத்தில் இருந்தார்கள். அதை ஆளுநர் உரையிலே இந்த அரசாங்கம் சொல்ல மறந்துவிட்டது. எனவே, எப்படியாவது இந்த ஆண்டிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் முதல் ஆண்டு, 2001-2002 ஆம் ஆண்டு செய்திக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லியிருந்தது. அது என்னவென்று சொன்னால், தமிழக அளவிலே மீன் பிடிக்கின்றவர்களுக்கு இந்திய கடல் எல்லை தெரியவில்லை. அதனாலே அடிக்கடி இலங்கைப் பகுதிகளுக்குச் செல்வதாலே அங்கேயிருக்கிற அதிகாரிகள் நம்முடைய மீனவர்களைக் கடத்தி செல்கிறார்கள். அதற்காக ஒளிரும் மிதவை விளக்குகளைப் பொருத்த இருக்கிறோம், அதனால் இதுபோன்ற பிரச்சினை இனி இருக்காது என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையிலே —

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதற்கான proposal தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்தவுடன் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** ஏறக்குறைய மூன்று ஆண்டுகளை எட்டிவிட்டது, இதுவரையிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஏனென்று சொன்னால், பத்திரிகையிலும், வானொலியிலும்—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் அந்தத் திட்டம் நிச்சயமாகச் செயல்படுத்தப்படும். அதற்கான மொத்த செலவினம் ரூ. 340 லட்சம்; ஒவ்வோராண்டும் ஆகும் செலவினம் ரூ. 140 இலட்சம். அதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு தயார் நிலையில் இருக்கிறது. மத்திய அரசினுடைய உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 11—55

**திரு. கே. ஆறுமுகம்:** இன்றைக்கு தாட்கோ மூலம் கடன் வழங்குவதற்காக படித்து இருக்கிற இளைஞர்களுக்குக் கடன் வழங்குவோம் என்று அரசாங்கம் மானியத் தொகை கொடுத்தும் கூட பல்வேறு வங்கிகளிலே, அவர்கள் கடன் பெறுவதற்கான மனுக்களைக் கொடுத்தாலும் கூட, அது கிடைக்கப்பெறாமல் படித்து இருக்கிற ஆதிதிராவிட சகோதர சகோதரிகள் இன்றைக்கு—

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து உண்மைக்கு மாறான கருத்து. எந்த வங்கியில் அப்படி மறுக்கப்படுகிறது என்ற உண்மைக் கருத்தை, தகவலைக் கொடுப்பாரேயானால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. ஆறுமுகம்:** தவறு என்று சொன்னால் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்குமேல் நான் போகவில்லை.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்துதான் அதற்கான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே. ஆறுமுகம்:** தற்போது அதன் உள்ளே போகவில்லை. உங்களை விமர்சனம் பண்ணுவதற்கான வாய்ப்பை நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்று சொன்னால் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினையை நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய Review Committee Meeting-கிலும் நாங்கள் பேசுகிறோம். ஆகவே எங்களைக் கேட்கத் தேவையில்லை. உங்களுடைய—ஆளுங்கட்சியினுடைய—சட்டமன்ற உறுப்பினர்களைக் கேளுங்கள். அதற்குமேல் நான் உள்ளே போகவில்லை. அதேபோன்று இன்றைக்கு விவசாயிகள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மின் ஒயர் திருட்டு அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் அவர்களுக்கு மின் கம்பிகள் கிடைப்பது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியைப் பற்றிச் சொல்லி விடுகிறேன். என் தொகுதி மக்கள் பிரச்சினை தொடர்ந்து மின் திருட்டு, கம்பிகள் திருடுவதனாலே மிகப் பெரிய பிரச்சினை. மின் இணைப்பு வேண்டுமென்று சொன்னால் 3 மாதம்,

6 மாதம் ஆகிவிடுகிறது. விவசாயிகள் பயிரிடும் நெல் ப்யிர்கள் அல்லது எந்தப் பயிர் செய்தாலும் கருகி விடுகிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு தமிழக அரசாங்கம் இதுபோன்று மின் கம்பி திருடுபவர்களை உடனடியாக அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால்... .

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்தித்தாள்களை நிச்சயமாகப் படித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். சமீபத்தில்கூட மின் கம்பி திருடுபவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு இருப்பது பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். எனவே, எங்கெங்கெல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவது மின் வாரியத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** நடவடிக்கை எடுத்திருக்கலாம். இருந்தாலும்கூட எங்கள் பகுதியிலே இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. இது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியிலே இந்தப் பிரச்சினை தொடர்ந்து நடப்பதாகச் சொன்னார்கள். மின் வாரியத்திற்கு உதவி செய்கின்ற வகையில் அவர்கள் இந்த மின் கம்பி திருட்டு சம்பந்தமாகத் தகவல் கொடுத்தால், அது ரகசியமாகப் பாதுகாக்கப்படும். மேலும் உறுப்பினருடைய பெயரை வெளியிலே சொல்ல மாட்டோம். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லிவிட்டார்களே! அப்புறம்... (சிரிப்பு)

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தால் உடனடியாகச் சொல்லி விடுகிறேன். எனக்குத் தெரியாதபட்சத்தில் அரசாங்கத்திடம் முறையிடுகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பற்றி நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். நம்முடைய அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தபோதுகூட M.L.A. குழுவாகச் சென்றுகூட மனுக்களைக் கொடுத்து இருக்கிறோம். அதிலே, குறிப்பாக செங்கற்பட்டு,





மீஞ்சூர், மடுவளை, களத்துவான் கால்வாய்; 30 கிராமங்களுக்கான ஏரிகளைக் கொண்டது; தண்ணீர் உள்ள கால்வாய். அதிலே அணை இருக்கிறது. அதற்கு ரூ.130 கோடி செலவாகும் என்று அதிகாரிகள் திட்டம் போட்டு இருக்கிறார்கள். நிதி இல்லையென்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியினுடைய மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாமல்லபுரத்திலே இருக்கிற சிற்பக் கலைக் கல்லூரியிலே பட்டய படிப்பு கடந்த ஆட்சிக் காலத்திலே நிறுத்தப்பட்டு விட்டது. அந்தப் பகுதியிலே கலை ஆர்வத்தை வளர்ப்பதற்கு அதைத் துவக்க வேண்டுமென்று கேட்டு இருந்தேன். அதை இந்த ஆண்டாவது நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் துவக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதேபோன்று...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிற்பக் கல்லூரி முதல்வர் மூலமாக அரசுக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. ஆறுமுகம்:** அமைச்சர் பதிலுக்கு நன்றி. செங்கற்பட்டு அரசு கலைக் கல்லூரியிலே Post-Graduate Course என்பதே கிடையாது. அங்கே அதிகமான மாணவர்கள் இன்றைக்குப் படிப்பதற்குத் தயாராக இருந்தாலும்கூட P.G. Courses - M.A., M.Sc., M.Com. courses கிடையாது. அதை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு, தாம்பரம், காஞ்சிபுரம், வண்டலூர், சிங்கபெருமாள்கோயில் ஆகிய பகுதிகளிலே இரயில்வே மேம்பாலம்— இன்றைக்கு இரயில்வே போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. சாலைப் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே இரயில்வே மேம்பாலம்—கட்டுவதற்கு எங்களுடைய அமைச்சர், முன்னாள் அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்கள் பலமுறை முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு தமிழக அரசின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதைக் கொடுத்தால் இரயில்வே துறை, நிருவாகம் செய்யத் தயாராக இருக்கிறது. அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம் மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேச்சை முடித்து விடுகிறேன். மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே மிகச் சிறந்த ஆலையாக மூன்று, நான்கு மாவட்டங்களை

உள்ளடக்கிய பகுதிக்கு ஒரே ஆலையாக இருந்த அந்த ஆலை இப்போது முடக்கப்பட்டு மூடிக்கிடக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாய மக்களுக்குப் பெரும் பாதிப்பு; அதிலே பணிபுரிந்துகொண்டிருந்த ஊழியர்களும் இப்போது நடுரோட்டிலே நின்று கொண்டிருக்கிறார்கள்.

*நண்பகல் 12—00*

அதேபோன்று எங்களுடைய பண்ருட்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கஞ்சம்பட்டி (குறுக்கீடு) கஞ்சம்ரெட்டி என்ற சமுதாயத்தினருக்கு இதுவரையிலே சலுகைகள் பெற சாதிச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை வழங்குவதற்கு இந்த அரசாங்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், உங்கள் தொகுதி கோரிக்கையோடு உரையை முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** அதை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசி கோரிக்கையாக என்னுடைய தொகுதியிலே இருக்கிற வட்டத் தலைநகர் மருத்துவமனையான திருக்கழுக்குன்றம் மருத்துவமனை இதுவரையிலே கேட்பாரற்றுக் கிடக்கிறது. அதேபோல் International Tourist Centre-ஆக இருக்கிற மாமல்லபுரம் மருத்துவமனைக்கு இடமே கிடையாது. அது மிகச் சிறிய ஒரு அறையிலே இருந்துகொண்டிருக்கிறது. இதைப் பல முறை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனைக்கு மருத்துவத் துறை சார்பாக அதிகாரிகளை அனுப்பி கடந்த வாரத்திலே இதற்கான ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக இதில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மின் கம்பித் திருட்டைப் பற்றிச் சொல்லியது தொடர்பாக இங்கே ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாகவே A.C.S.R. Aluminium Conductor—ல் இருக்கின்ற முழு அலுமினியத்தைத் திருடி மீண்டும் அதை உருக்கி விற்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே, அந்த ஒரு நிலைமையிலே திருடுவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகியிருந்த காரணத்தாலே அந்த மாதிரி வரக்கூடாது என்கின்ற வகையிலே All Alloy Aluminium Conductor—AAC— போடுவதன் மூலம் நிச்சயமாக — அந்த Alloy-யைச் சேர்ப்பதனால் அதைத் — திருடுகிற ஒரு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. அதை உருக்கவும் முடியாது.



எனவே, நம்முடைய உறுப்பினருடைய தொகுதியிலே All Alloy Aluminium Conductor போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, ஆறுமுகம், கோரிக்கைகளெல்லாம் உடனே நிறைவேறுகின்றன?

**திரு. கே. ஆறுமுகம்:** நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**•திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே உரையாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி, நன்றி, நன்றி. (சிரிப்பு) போராடி வாங்கியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாத காலத்திற்கு முன்னாலே மேட்டூரிலேயிருந்து காவிரிப் பாசனப் பகுதிக்குத் தண்ணீர் திறந்துவிட்டார்கள். என்னுடைய தொகுதியிலே காவிரிப் பாசனப் பகுதி 33,000 ஏக்கர் இருக்கிறது. தண்ணீர் வந்து சேருமோ, சேராதோ என்ற அச்சம் எனக்கு இருந்தது. அந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் கடைமடைப் பாசனப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதிக்கு மேட்டூர் நீர் வரவேண்டும் என்று நான் தொலைபேசியிலே கேட்டுக்கொண்ட வேண்டுகோளை ஏற்று, என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலேயிருக்கிற காவிரிப் பாசனப் பகுதி, விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்து உதவிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும் என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்கதான் அங்கு தண்ணீர் விடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறந்தாங்கி தொகுதியில் ஆவுடையார்கோவில் வட்டத்திலே மழையின்மை காரணமாக 90 சதவீத பயிர்கள் பட்டுப்போய்விட்டன; கருகிப்போய்விட்டன. அதைப்போலவே மணல்மேல்குடி வட்டத்திலே 90 சதவீத பயிர்கள் கருகிப்போய்விட்டன. அறந்தாங்கி வட்டத்திலே 50 சதவீத பயிர்கள் கருகிப் போய்விட்டன. கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியிலே 50 சதவீத பயிர்கள் கருகிப் போய்விட்டன. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு வரத்துவாரிகளைச் சீரமைத்தல், ஏரிகளை ஆழப்படுத்துதல் போன்ற வேலைகளை எடுத்துச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வேலைநிறுத்தம் செய்த அரசு ஊழியர்களுக்குப் பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசு கருணை உள்ளத்தோடு அவர்களை எல்லாம் மீண்டும் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அடுத்து, 'எச்' முத்திரை குத்தப்பட்ட குடும்ப அட்டைகளிலே பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட நான் அதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். 'எச்' முத்திரை குத்தப்பட்டதிலே ஏழைகளுடைய கார்டுகளுக்கும் 'எச்' முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. 5 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குக் குறைவான கார்டுதாரர்களுக்கும் 'எச்' முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அதை மீண்டும் பரிசீலனை செய்து அப்படித் தவறுதலாக 'எச்' முத்திரை குத்தப்பட்ட கார்டுகளைக் கண்டுபிடித்து அவற்றுக்கு 'பி' முத்திரை குத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான கோரிக்கை. என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மணல்மேல்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டட வசதி இல்லை. 50 அடி விட்டம் உள்ள புயல் பாதுகாப்பு இல்லத்திலே அந்த அலுவலகம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த அலுவலகத்திற்கு கட்டடம் கட்டித்



தருகிறேன் என்ற உறுதியை ஏற்கெனவே நீங்கள் தந்திருக்கிறீர்கள். அந்த மணல்மேல்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுபானக் கடைகளை அரசு ஏற்று நடத்துகிற ஒரு செயல் மிகவும் பாராட்டத்தக்க செயல்; வரவேற்கக்கூடிய செயல். பல தனியார்களுக்குச் சென்று கொண்டிருந்த வருமானம் இன்றைக்கு அரசு கஜானாவுக்கு வருகிறது என்பதிலே மிக்க மகிழ்ச்சி. அப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்த தமிழக அரசை நான் பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே இரண்டு நெடுஞ்சாலை உபகோட்டங்கள் இருக்கின்றன. ஒன்று அறந்தாங்கி; இன்னொன்று ஆவுடையார்கோவில். அறந்தாங்கி நெடுஞ்சாலைக் கோட்டத்திலே பணிகள் நேர்த்தியாகவும், தரமாகவும் நடைபெறுகின்றன. ஆனால் ஆவுடையார்கோவில் நெடுஞ்சாலைக் கோட்டத்திலே நான் எவ்வளவோ போராடியும் பணிகள் தரமாக நடக்கவில்லை. உங்களுக்கு ஒரு மனு வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில் இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், போடப்படுகின்ற சாலைகள் மிகவும் நேர்த்தியாகவும், தரம் உள்ளதாகவும் இருக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்தச் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. சாலைகள் போட்டு முடிக்கப்பட்டபின், அவர்கள் 'பில்' எழுதி அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகின்றபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் அந்தச் சாலையினுடைய தரத்தைத் தரக்கட்டுப்பாடு செய்து, தரம் உள்ள சாலைகள் என்று சான்றிதழ் அளித்த பின்புதான் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே தற்போது போடப்பட்டு வருகின்ற சாலைகள் மிகவும் நேர்த்தியானதாகவும், தரம் உள்ள சாலைகளாகவும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் சொன்னதுபோல் அந்தக் கோட்டத்தில் ஏதாவது தவறு இருந்தால், அவர்கள் சுட்டிக்காட்டுகின்றபோது, எழுத்துப்பூர்வமாகக் கொடுக்கின்றபோது, தவறு இருப்பின் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு மனு வைத்திருக்கிறேன். பேசி முடித்ததற்குப் பின்னாலே அதைக் கொடுக்கிறேன்.

ஏற்கெனவே எங்களுடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட மாவட்ட ஆய்வுக் கூட்டம் நடக்கிறபோது இதே கருத்தை நான் அங்கே வலியுறுத்தியிருக்கிறேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்கூட அதிகாரிகளிடத்திலே சொன்னார்கள். அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் சொல்லுகிற பணிகளை ஆய்வு செய்ததற்குப் பின்னாலே பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் சொல்லியும்கூட அங்கே இருக்கிற அதிகாரிகள் அதைச் செயல்படுத்தவில்லை. எங்களுடைய உதவிக் கோட்டப் பொறியாளரும், உதவிப் பொறியாளரும், அங்கே இருக்கிற ஒப்பந்ததாரர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு பணிகள் தரமாக நடக்காததற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். ஆகவே அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து வழக்கறிஞர்களிடத்திலேகூட நான் ஆலோசனை பெற்றிருக்கிறேன். ஒரு பொது நல வழக்குப் போடலாம் என்றுகூட கருதியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*பிற்பகல் 12—10*

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் ஊரிலே இருக்கிற வழக்கறிஞர் சங்கத்தினர் ஒரு மாதத்திற்கு முன்னாலே நம்முடைய சட்டத் துறை அமைச்சரைச் சந்தித்திருக்கிறார்கள். அறந்தாங்கியிலே 'சப்-கோர்ட்' வேண்டும்; அறந்தாங்கியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் வேண்டும் என்று கேட்பதற்காக அவர்கள் வந்தார்கள். அப்படி அந்த வ்ழக்கறிஞர் சங்கம் வருகின்றபோது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அடிக்கடி என்னிடத்திலே இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்; வாரத்திற்கு ஒரு முறை, பத்து நாளைக்கு ஒரு முறை என்னிடத்திலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்; இந்த ஆண்டு அதைச் செய்துவிடுகிறேன் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அந்த வழக்கறிஞர் சங்கத்தினரிடம் சொல்லியிருக்கிறார்கள். இரட்டை மகிழ்ச்சி எனக்கு. இரண்டுவிதத்திலே



நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னவென்று சொன்னால் அந்த வழக்கறிஞர் சங்கத்திலே நான் வந்து அடிக்கடி சொன்னதைச் சொல்லி அந்த வழக்கறிஞர் சங்கம் எனக்கு ஒரு விருந்துகூட கொடுத்தார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை, விருந்தோடு முடியுங்கள். (சிரிப்பு)

**திரு. ப. அரசன்:** ஆகவே, சட்டத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய வழக்கறிஞர் சங்கத்திற்குக் கொடுத்த உறுதிமொழியை இந்த ஆண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே அம்மாபட்டினம் என்கிற ஊரிலே ஓர் உயர்நிலைப் பள்ளியை இந்த வருடம் தரவேண்டும். ஏற்கெனவே புதுக்கோட்டையில் நடந்த விழாவிலே நீங்கள் அதற்கான உறுதிமொழி அளித்திருக்கிறீர்கள். ஆவுடையார்கோவிலிலே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் சாட்சியாக, மாண்புமிகு இளைஞர் நலத் துறை அமைச்சர் சாட்சியாக நீங்கள் அதைத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு அதைத் தரவேண்டுமென்று உங்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நபார்டு திட்டத்திலே 2001-02, 2002-03, 2003-04 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டட வசதி தருகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு முன்னாலே தொடங்கப்பட்ட பள்ளிகளிலும் பல பள்ளிகளுக்குக் கட்டட வசதி இல்லை. அதையும் நீங்கள் பரிசீலனை செய்து அந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கும், அந்த மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டட வசதி செய்துதர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ப. அரசன் :** இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டு கோரிக்கைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள்.

**திரு. ப. அரசன்:** இல்லை, இல்லை, இரண்டு, மூன்று கோரிக்கைகள், முக்கியமான கோரிக்கைகள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு இன்னொரு பணிவான கோரிக்கை; தமிழ் - பயிற்று மொழியாக ஆகவேண்டுமென்று சொல்லி ஏற்கெனவே இருந்த அரசாங்கம் உத்தரவு போட்டு அது நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது. புதுச்சேரியிலேகூட தமிழ் பயிற்றுமொழியாக வரவேண்டுமென்று உத்தரவு போட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலே தமிழ் பயிற்றுமொழியாக வருவதற்கு உச்ச நீதிமன்றத்தை அணுகி அந்த வழக்கிலே வெற்றிபெற்று மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழியாக வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்தான் தமிழுக்குப் பாதுகாவலர்கள் என்று சொல்லி கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு தவறான அரசாணை போட்டதன் விளைவாக சென்னை, உயர் நீதிமன்றம் அந்த அரசாணையை ரத்துசெய்து விட்டது. அதைத் தொடர்ந்து, அந்த வழக்கு இப்போது உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த வழக்கின் சாராம்சம் என்னவென்று சொன்னால் மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்கவேண்டும் என்ற அந்த அரசாணைதான் நீதிமன்றத்தினாலே நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆரம்பிக்கின்றபோது அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிக்குக் கொடுக்கப்படும் நிபந்தனை, அதாவது ஆங்கில வழி கல்வியாகத்தான் அந்தப் பள்ளியிலே கற்றுத் தரப்பட வேண்டும் என்ற அந்த நிபந்தனையோடுதான் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு ஆணை வழங்கப்பட்டது. அந்த ஆணைக்கு மாறாக இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டதன் காரணமாகத்தான் வழக்கு, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. இருந்தாலும், தமிழ் மொழி பயிற்றுமொழியாக இருக்கவேண்டும்; அனைத்துப் பள்ளிகளிலும் தொடரவேண்டும் என்பதில் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு உறுதியாக இருப்பதால் அந்த வழக்கை நாங்களும் தொடர்ந்து நடத்தி வருகிறோம். இருந்தாலும், அந்த வழக்கினுடைய தீர்ப்பு வரும்வரை காத்திருக்கக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



அறிவியல் தமிழ் என்கிற ஒரு பாடத்தை எல்.கே.ஜி. முதல் பிளஸ் 2 வரை அறிமுகப்படுத்தி தமிழகத்திலே இருக்கிற எல்லாக் குழந்தைகளும் பள்ளியைவிட்டு வெளியேறும்போது தமிழைப் படிக்காமல் வெளியேறக் கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான் அதை ஒரு பாடமாக அறிவியல் தமிழை எல்.கே.ஜி. முதல் பிளஸ் 2 வரை இன்றைக்கு அறிமுகப்படுத்தி, அந்தப் பாடத் திட்டங்கள் இந்த ஆண்டிலிருந்து துவக்கப்பட்டுவிட்டன. எனவே, நம்முடைய எண்ணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம், இந்த அரசினுடைய எண்ணம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்மீது வைத்திருக்கிற அந்தப் பற்றின் காரணமாக, அது இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது. இதிலே அரசு உறுதியாக இருக்கிறது. எனவே அந்த வழக்கையும் நாம் உச்ச நீதிமன்றத்திலே நடத்தி வருகிறோம். அதிலும் நமக்குச் சாதகமான முடிவு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், உரையை முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களிலே உரையை முடித்துவிடுகிறேன். இரண்டே இரண்டு நிமிடம்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதை அப்புறம் எழுதிக் கொடுங்கள். திரு. கே.சி. கருணாகரன். (குறுக்கீடு) வேறு என்ன? மற்றவற்றை எழுதிக் கொடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுடைய யதார்த்தபூர்வமான உண்மை வாழ்க்கை நிலைகளைப் பட்டுத் துணிபோட்டு மறைக்கிற மூடுதிரைதான், பச்சை அட்டை போடப்பட்ட இந்த கவர்னரின் உரை என்பதை நான் வருத்தத்தோடு நினைவுபடுத்த விரும்புகிறேன். கவர்னருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்; அவர் உரைக்கு அல்ல.

[திரு. கே.சி. கருணாகரன்] [2004 பிப்ரவரி 6

*கடந்த நான்கு தினங்களுக்கு முன்னால் மரியாதைக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12-வது நிதி கமிஷனில் பேசிய மிகச் சிறப்பான பேச்சை நான் வரவேற்கிறேன். அதில் அவர்கள் என்ன விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்களோ, அதுதான் இன்றைய தமிழ்நாட்டின் யதார்த்தமான நிலை. ஆனால், அந்த யதார்த்தநிலை முழுவதுமாய் இந்த உரையிலே மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்கிறபோது ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து பொறுத்தருள வேண்டும். நிறைகளைச் சொல்லிப் பாராட்டுகிற உரிமை உங்களுக்கு எவ்வாறு இருக்கிறதோ, அதே அளவிற்கு இணையான உரிமை, குறைகளைச் சொல்வதற்கும் எங்களுக்கு உண்டு என்பதை நீங்கள் அங்கீகரித்தே தீரவேண்டும்.*

*அதாவது 12-வது நிதி கமிஷனுக்கு முன்னால் எப்படி ஒரு மாநில அரசுக்கு எவ்வாறான கடமைகள் இருக்கின்றன; எப்படிப்பட்ட கடினமான நிலையை தமிழ்நாடு சந்தித்தது; இந்த இரண்டு ஆண்டுகளிலே அது சந்தித்த பிரச்சினைகள் என்ன; சமூக நலத் திட்டங்களை அமல்நடத்துவதிலே ஏற்பட்ட இடர்ப்பாடுகள் என்ன; அதை நிறைவு செய்வதிலே போதிய நிதி உதவி பெறுவதிலே இருந்த கஷ்டங்கள் என்ன; 11-வது நிதிக் குழு செய்திருக்கக்கூடிய துரோகம் என்ன என்பதை எல்லாம் முதல்வர் அவர்கள் பட்டியலிட்டுள்ளார்கள். இதிலேயும் சுருக்கமாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. 12-வது கமிஷன், ஏற்கெனவே 11-வது கமிஷன் கொடுத்திருக்கக்கூடிய அந்தத் துரோகம் இழைத்ததற்கு நேர்மாறாக, கூடுதல் நிதி தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள்.*

*இன்னொருபுறத்தில், உலக வங்கியை வெகுவாகப் பாராட்டியிருக்கிறீர்கள். தமிழ்நாடு அரசாங்கத்தை உலக வங்கி பாராட்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். கேள்வி என்னவென்று சொன்னால், உலக வங்கியிடமிருந்து நாம் பெறுவது கடனா, உதவியா? "தமிழ்நாட்டிற்கு நிதியுதவி செய்வதிலிருந்து கடந்த காலத்தில் ஒதுங்கிவிட்ட உலக வங்கி, தற்போது, மாநில அரசுக்கு, அதன் பொருளாதாரச் சீர்திருத்தச் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உதவுவதில் மீண்டும் விருப்பம் காட்டி வருகிறது. இச்செயல்திட்டத்திற்கான உலக வங்கியின் நிதி உதவி கணிசமான கால அளவிற்குத் தொடர்ந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று கவர்னர் உரை தமிழ்ப் புத்தகத்திலே பக்கங்கள் 4 மற்றும் 5-லே இருக்கிறது. இது கடனா? உதவியா?*



2004 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சித் திட்டங்களுக்கு நமக்கு நிதி தேவை. அந்த நிதியை, ஒன்று, வரி போட்டு மக்களிடமிருந்து நாம் வசூலிக்க வேண்டும்; அல்லது மத்திய அரசு உதவியாகவோ, கடனாகவோ தர வேண்டும். அடுத்த நிலை, வெளியில் நாம் கடன் வாங்க வேண்டும். அப்படிக் கடன் வாங்கிதான் பல வளர்ச்சித் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் இந்தியத் துணைக் கண்டத்தில் அனைத்து மாநிலங்களிலும் நடைமுறையில் இருக்கின்ற உண்மை.*

*பிற்பகல் 12-20*

**திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால், சரியாக எனக்கு விளங்கவில்லை. விஷயம் என்னவென்று சொன்னால்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கருணாகரன், கடன் கொடுக்கிறதே உதவிதானே?*

**திரு. கே.சி. கருணாகரன்:** *உதவி என்பது நிவாரணமாகவும் இருக்கலாம், உதவியாகவும் இருக்கலாம். ஆக, கடனைக் கடன் என்றும், உதவியை உதவி என்றும் கறாராகப் போடுவது நல்லது. ஏன் என்று சொன்னால், கடன் கொடுக்கிறவர்கள் வெறும் வட்டியை மட்டும் நம்மிடம் பெறுவதில்லை; நிபந்தனையும் விதிக்கிறார்கள். அந்த நிபந்தனைகள் இப்போது நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் அல்ல; அந்த நிபந்தனைகளின் விளைவுதான் இலவச மின்சாரம் ரத்து. அதிலே மின்சார மானியம் உட்பட, நம்முடைய ஆணைய மசோதா உட்பட சம்பந்தப்பட்டிருந்தாலும் இலவச மின்சாரம் ரத்து, மலிவு விலையிலே பொது விநியோக முறையிலே...*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் ரத்து செய்யப்படவில்லை. தவறான தகவலை அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்.*

**திரு. கே.சி. கருணாகரன்:** *ரத்து செய்துவிட்டு அதற்கு நீங்கள் திருப்பிக் கடனாகக் கொடுக்கிறீர்கள் அல்லது மானியமாகக் கொடுக்கிறீர்கள். அது வேறு. எல்லோருக்கும் தருவதில்லை. (குறுக்கீடு) சரி. இலவச மின்சாரத்தோடு அல்ல, 1200 கோடி ரூபாய் இருந்த...*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகவே கடந்த முறை இந்தக் கூட்டத் தொடரிலே சொன்னார்கள். மீண்டும் உறுப்பினருடைய ஞாபகத்திற்கு நான் அதைக் கொண்டுவர விரும்புகிறேன். அவர் அந்தப் பிரச்சினையை எழுப்பியதற்காக, ஒரு ஆண்டிற்கு ஒரு குதிரைத் திறன் உள்ள பம்பு செட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் உத்தேச அளவு 1051 யூனிட்டுகள். 5 குதிரை திறனுடைய பம்பு செட்டுகளுக்கு 5x1051 யூனிட்டுகள் என்றால் 5255 யூனிட்டுகள். மின்சாரத்தின் அடக்க விலை ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 காசுகள். மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்த கட்டணம் யூனிட்டுக்கு 20 காசுகள். வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ஏற்படும் இழப்பு 287 காசுகள். 5 குதிரைத் திறன் உள்ள பம்பு செட்டுகளுக்கு பயன்படுத்தும் மின்சாரத்தின் விலை 5255 x 3 ரூபாய் 7 காசுகள் = 16,132 ரூபாய். ஆனால், விவசாயிகள் ஆண்டிற்கு செலுத்தும் தொகை அதுகூட நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுக்குச் செலுத்தி, அவர்கள் செலுத்துவது 1,250 ரூபாய். மின்சார வாரியம் 5 குதிரைத் திறனுள்ள பம்பு செட்டுகளுக்கு வழங்கும் மின் கட்டணச் சலுகை 14,882 ரூபாய். 16.7 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு அளிக்கும் மின்கட்டணச் சலுகை 16.7 இலட்சம் x 14,882 ரூபாய்; கிட்டத்தட்ட 2491 கோடியே 25 இலட்சம் ரூபாய். இதிலே எங்கே இலவச மின்சாரம் ரத்து செய்யப்படுகிறது? இன்றைக்கும் 2,000 கோடி ரூபாய், விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது என்பதுதான் உண்மை. (குறுக்கீடுகள்)

**திரு. கே.சி. கருணாகரன்:** அனைத்து விவசாயிகளுக்கும் கிடையாது. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** அனைத்து விவசாயிகளுக்கும் கிடையாது. ஏற்கெனவே பல விவசாயிகளுக்குக் கொடுத்ததையெல்லாம் நீங்கள் கேன்சல் பண்ணியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கருணாகரன் நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நிபந்தனைகள் என்பவை மானியங்களை முழுவதுமாக வெட்டுவது, இலவசத்தை ரத்து செய்வது என்கிற பொதுவான நிலையோடு இணைந்தவை. அதன் விளைவுதான் பொது



விநியோகத் துறையிலே சென்ற ஆண்டில் நாம் ஒதுக்கிய 1200 கோடி ரூபாய், இந்த ஆண்டு 650 கோடியாக 50 சதவிகிதம் வெட்டிக் குறைக்கப்பட்டதன் விளைவுதான் இப்போது மலிவு விலை அரிசி உட்பட, ரேஷன் கார்டுகள் 'எச்' முத்திரையிலே வந்து நிற்கின்றன என்கிற வேதனையான பிரச்சினையை நாம் பொதுவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி நிபந்தனைகளுக்கும் 'எச்' கார்டுகளுக்கும் அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் உள்ள தொடர்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தர வேண்டாம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அப்படியானால், பொது விநியோக முறையைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிக் குறைத்து முழுவதுமாக அந்த முறையைச் சீர்குலைக்கும் நிலையை நோக்கிப் போக வேண்டிய அவசியம் ஏன் இந்த அரசுக்கு ஏற்பட்டது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறையை வெட்டவும் இல்லை; குறைக்கவும் இல்லை. சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. போலி அட்டைகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

**திரு. கே.சி. கருணாகரன்:** சீர்திருத்தத்தின் மூலமாக 18 இலட்சம் குடும்பங்களின் ரேஷன் உரிமை பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போலி ரேஷன் கார்டுகளுக்கு இவ்வளவு வக்காலத்து வாங்குகிறார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையில் கள்ள மற்றும் போலி வாக்காளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றோ, அதைப் பாதுகாக்க வேண்டிய அவசியமோ மார்க்சிஸ்டுகளுக்கு இல்லை. ஒரு யதார்த்தத்தை நாம் உண்மையில் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் 18 இலட்சம் குடும்பங்களுமா கள்ள கார்டுகளை வைத்து போலியாக பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தன?

[2004 பிப்ரவரி 6

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வு தொடர்ந்து நடக்கிறது. அதைவிட அதிகமாகவே இருக்குமென்றுகூட அதிகாரிகள் கருதுகிறார்கள். அந்த அளவிற்கு போலி ரேஷன் கார்டுகள் அதிக அளவிற்கு, கடந்தகால ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது. அதைத் தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது.

**திரு. கே.சி. கருணாகரன்:** தமிழ்நாட்டிலே இந்தச் சிக்கலான நடைமுறை, ஏழையெளிய மக்களின் நலனை முதன்மையாக மனதில் கொண்டு மனிதநேயத்தோடு மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கையில் 4-ஆம் பக்கத்தில் சொல்லப்படுகிறது. உண்மையில் கடுமையான வறட்சி; இலட்சக்கணக்கான விவசாய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; விவசாயத் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; கடுமையான தொழில் நெருக்கடி; மூடிய ஆலைகள் திறக்கப்படவில்லை. மேலும் மூடுவிழாவை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றன. புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பட்டியலிட்டார்கள். மிகச் சரியான கணக்கு. அதுவும் இந்த 12-வது நிதிக் குழுவில்தான் பேசியிருக்கிறார், இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருக்கிறது என்று. அது உண்மை. எங்களுடைய கவலை, எங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூன்றாவது இடத்தில் உள்ள தமிழ்நாடு முதன்மை இடத்தைப் பிடித்துவிடுமோ என்ற அச்சத்தில் நான் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன். இதற்கான ஆக்கபூர்வமான எந்த வழிகாட்டுதலையும் அல்லது செயல்திட்டங்களையும் இந்த அறிக்கையிலே எங்களால் படித்துப் புரிந்துகொள்ள முடியவில்லை. அது அரசின் கொள்கையாக இருக்கும் என்றும் நம்ப முடியவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மத்திய அமைச்சரவையில் முக்கிய பொறுப்பான தொழில் துறையை அந்தக் கட்சி வகித்தபோதும்கூட தமிழ்நாட்டிலே ஒரு தொழிற்சாலையைக்கூட கொண்டுவரவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்; கண்டிக்கத்தக்க விஷயம். ஆனால் 1991-96 ஆம் ஆண்டு—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்—ஃபோர்டு தொழிற்சாலை, ஹூண்டாய் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகள்



2004 பிப்ரவரி 6] [திரு. டி. ஜெயக்குமார்]

எல்லாம்கூட நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தமிழ்நாட்டிற்கு வரப்பெற்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போதுகூட, Saint Gobain Glass Company-யைக்கூட, அந்த நிறுவனத்தோடு பேசி, நம்முடைய தமிழ்நாட்டில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். எனவேதான் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தைப் பெருக்க வேண்டுமென்கிறவகையில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் பல்வேறுவகைகளிலே வேலைவாய்ப்பை உருவாக்கி, இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, இந்த 2½ ஆண்டு காலத்திலே, கிட்டத்தட்ட 50,000 பேர்களுக்கு I.T. மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இதைத் தெரிவிக்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-96 ஆம் ஆண்டுகள் பொற்காலமாக இருந்தன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இப்போதைய நிலையைச் சொல்கிறேன். 1991-96 ஆம் ஆண்டுகளில் நீடித்த, நிலைத்த அந்தப் பொற்காலம், உங்கள் வாக்குப்படி, 1996-2001 அவர்கள் ஆட்சியில் கற்காலமாக மாறியிருக்கலாம். அதை மீண்டும் பொற்காலமாக்குகிற பொறுப்பில் நீங்கள் இருக்கிற காரணத்தால்தான் நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இது golden age-ஆகத்தான் இருக்கும். பொற்காலமாகத்தான் இருக்கும். C.M.I.E. Report-ஐ அவர்கள் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். தமிழ்நாடு, தொழிலுக்கு உகந்த முதன்மையான மாநிலம் என்று C.M.I.E. அறிவித்து 46,000 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே முதலீடு செய்கின்றார்கள் என்றால், இதனுடைய பலனைப் போகப் போக நீங்கள் உணர்வீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** உண்மையிலேயே எதிர்காலம் நீங்கள் சொல்கிற நிலையை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதில் எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிகழ் காலம் என்பது 285 பேர் இராணுவப் பணி வேலைக்கு—இராணுவ வேலை என்றால் பாத்-ரூம் கழுவுவதற்கு, டேபிள் துடைப்பதற்கு, துணி துவைப்பதற்கான கடைநிலை வேலைக்கு—285 பணியிடங்களுக்கு—10,000 பேர் அணி

திரண்டு வந்து, நம்முடைய தமிழகக் காவல் துறை, தடி கொண்டு தாக்கி, கட்டுப்படுத்த வேண்டிய கேவலமான நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்தால் அதை மறுத்துவிட முடியாது. எதிர்காலம் என்னவேண்டுமானாலும் ஆகட்டும். ஆகவே இவைதான் நிகழ்காலத்தில் இருக்கிற யதார்த்த வாழ்க்கை. ஜனங்கள் சந்திக்கின்ற உண்மைகளை நாங்கள் சொல்லுகிறோம். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்றிரண்டு விஷயங்கள்.

அதேமாதிரி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றிச் சொன்னீர்கள். 369 ஒன்றியங்களிலே 698 திட்டங்கள் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 72 திட்டங்கள் மட்டும்தான் நிறைவேறியிருக்கின்றன. மூன்றாண்டுகளாக நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். விளைவுகள் என்ன, அறிவிப்புகள் என்ன, நடைமுறை என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறதே தவிர——

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறியாத ஒன்றல்ல; புரியாத ஒன்றல்ல. ஒரு தொழில் துவங்க வேண்டும் என்றால் உடனடியாக மாங்காயிலே மந்திரத்தை வரவழைத்துவிட முடியாது. காரணம் ஒரு தொழில் துவங்குவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், மந்திரத்திலே மாங்காயை...

பிற்பகல் 12-30

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மந்திரத்திலே மாங்காயை வரவழைத்துவிட முடியாது. காரணம் ஒரு தொழில் துவங்குவதற்கு அடிப்படையாக நிலத்தை வாங்கியாக வேண்டும். அதற்குப் பிறகு கட்டடத்தைக் கட்டியாக வேண்டும். அதற்குப் பிறகு அனைத்துத் துறைகளினுடைய அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

இந்த நடைமுறைகளெல்லாம் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றால், போர்க்கால அடிப்படையிலே முயற்சிகளை மேற்கொண்டாலும்கூட, குறைந்தபட்சம் ஒரு வருடகாலமாவது நிச்சயமாக ஆகும் என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறியாத ஒன்று அல்ல. அப்படி இருந்தும்கூட, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, அனைத்து அனுமதிகளும் அரசு



சார்பாக உடனடியாக வழங்கப்படவேண்டுமென்ற ஆணைக்கிணங்க தற்பொழுது 73 தொழிற்சாலைகள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே துவங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னமும் குறுகிய காலத்திலே இந்த அடிப்படை வசதிகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டு, இன்னும் இரண்டு மாத காலத்திற்குள்ளாக 100 தொழிற்சாலைகளுக்கு மேலாக துவங்கப்பட இருக்கிறன்றன என்பதையும், அத்துணைக்கும் மேலாக தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து ஒன்றியங்களிலேயும், 385 ஒன்றியங்களிலேயும் மிக விரைவிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறைந்தபட்சம், நான்கு அலகுகளாவது துவங்கப்படும் என்பதை நான் உறுதியாக மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மகிழ்ச்சி, நிறைவேறினால் சரி. தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்; 2003 டிசம்பர் வரை 70 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு 1.19 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் உற்பத்திக்கு ஏற்ற நிலமாக மாறியது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்துவது, இதுவரைக்கும் 3 ஆண்டுகளில் 1.19—1 ¼ இலட்சத்தைக்கூட நெருங்க முடியவில்லை. 1.19 இலட்சம்தான் வந்திருக்கிறது என்பது கணக்கு. ஆகவே நம்முடைய திட்டம் அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட முழுமையாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் இதிலும் ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள். இந்தத் தரிசுநில மேம்பாடு என்பது அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் மட்டும் அல்ல. தனியார் துறையிலே, தனியாரிடம் இருக்கின்ற நிலங்கள். Fallow Land என்ற உழப்படாமல், உழுவதற்கு தகுதி இல்லை என்ற நிலையிலே இருக்கின்ற நிலங்களும் இதற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் ஒரு விரைவுத் திட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையையொட்டி நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2004 பிப்ரவரி 6

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலைத் தரவில்லை. அறிக்கையிலே 1.19 என்று எழுதப்பட்டிருந்ததைத்தான் நான் எழுதிப் படித்தேன். அடுத்து நான் அப்பொழுதே தலையிடுகிறபோது அனுமதிக்கவில்லை. தயவுசெய்து இந்த விஷயத்தைப் பேசுவதற்கு ஒரு நிமிடம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர் போராட்டத்தைக் கம்யூனிஸ்ட்கள் தூண்டவில்லை. நாங்கள் தொடர்ந்து சொல்லிவருகிறோம். அந்தப் போராட்டம்... (மணியடிக்கப்பெற்றது) அப்போதே நீங்கள் அனுமதிக்கவில்லை. நான் பேசவேண்டும், கட்சியின் கருத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அடுத்து திரு. கிருஷ்ணமூர்த்தி (குறுக்கீடு) இல்லை, இல்லை, நேரம் முடிந்துவிட்டது. அவ்வளவுதான். திரு. கிருஷ்ணமூர்த்தி பேசுங்கள் (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அதாவது, நாங்கள் தூண்டவில்லை. வழக்குமன்றத்திற்குப் போவது சம்பந்தமான ஒரு விஷயத்தை ஒரு குற்றச்சாட்டாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு இலட்சத்து 70 ஆயிரம் அரசு ஊழியர்கள் இந்த அரசால் வேலைநீக்கம் செய்யப்பட்டபோது, கோர்ட்டுக்குப் போய், அவர்களுக்கு வேலை கிடைத்தது. அவர்களுக்கு வேலை கிடைத்த குற்றத்தை நாங்கள் செய்தோம் என்றால், அந்தக் குற்றத்தை வாழ்நாள் முழுவதும் நாங்கள் மீண்டும் மீண்டும் செய்வோம் என்பதைச் சொல்லி நான் முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு துவக்கத்திலே, 14-வது நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு இந்திய மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்ற சந்தர்ப்பத்திலும், இந்தச் சட்டமன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியுள்ளார்கள். அந்த உரையின்மீது விவாதிக்க வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, இந்த ஆளுநருடைய உரை என்பது, முடைநாற்றத்திற்குப் புனுகு பூசி மறைப்பதற்கு ஒப்பாக அமைந்துள்ளது என்று நான் கருதுகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு சென்ற ஆண்டு, மாதாமாதம் நிதி கொடுத்து உதவிடுவோம் என்று இங்கே அறிவிக்கப்பட்டது. ஆனால்



2004 பிப்ரவரி 6] [திரு. வே. கிருஷ்ணமூர்த்தி]

இன்றுவரை அந்த நிதி உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்குக் கிடைக்கவேயில்லை. தெரு விளக்கு, குடிநீர், தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்துவிட்டால், அவர்களுக்கான ஈமச் சடங்குக்கான உதவித் தொகை, தெரு கூட்டுபவர்களுக்குச் சம்பளம் போன்றவற்றைக் கொடுக்க முடியாமல் அந்தத் தலைவர்கள் மிகப் பெரிய அளவிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலையை மாற்றி, ஏற்கெனவே அறிவித்ததைப்போன்று மாதாமாதம் நிதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

*பிற்பகல் 12-35*

காவல் துறை நவீனப்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்குக் கொடுத்துவந்த ரேஷன் கூட நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு உண்மை என்னவென்றால், காவல் துறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது என்பதில், வாகனங்கள் எல்லாம் நவீனப்படுத்தப்பட்டுள்ளது உண்மைதான். ஆனாலும், திருட்டு, கொலை, கொள்ளை போன்றவை தொடர்ந்து நீடித்துக் கொண்டேயிருக்கின்றன அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கையை இங்கே உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கோலப்பன் குழு அறிக்கையை அமல்படுத்தவேண்டுமென்று தொடர்ந்து அந்த விவசாயத் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உரையிலே ஏதேனும் பாதுகாப்பு இருக்கிறதா என்று சொன்னால், நிச்சயமாக இல்லையென்று கருதப்படுகிறது. எனவே, கோலப்பன் குழு அறிக்கையை அவர்களுக்கு அமல்படுத்தி பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது.

மணல் திருட்டைத் தடுக்கின்றவகையில் அரசே மணல் விற்பனையில் ஈடுபட்டுள்ளது வரவேற்கவேண்டியதாக இருந்தாலும்கூட, மணல் விலை மிகப் பெரிய அளவிலே உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல, தமிழக அரசு சிமெண்ட் விலையைக் குறைப்போம் என்று சொல்லிய நிலைக்கு மாறாக, கடுமையான முறையிலே சிமெண்ட் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் விலை இப்போது உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சியில் ஒரு மூட்டை சிமென்ட் 215 ரூபாய்க்கு மேல் விற்றது கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும் தெரிந்திருக்கும், ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வந்ததற்குப் பிறகு, சிமென்ட் விலையைக் குறைத்து, அவர்கள் மேலும் விலையைக் கூட்டிவிடக் கூடாது என்பதற்காக, 135 ரூபாய்க்கு மேலே விற்பவர்களுக்கு 25 சதவிகிதம் tax எல்லாம் போட்டு, அதையெல்லாம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், இப்போது 10 ரூபாய், 20 ரூபாய் கூடியிருக்கிறது. இருந்தாலும் இப்போது 170 ரூபாய்க்கு சிமென்ட் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து சிமென்ட் ஆலை அதிபர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். ஆகவே, வெகுவிரைவில் சிமென்ட் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் விலை கூடியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் மணல் விலை கூடவில்லை, அதிகமாக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகரில் இந்த அரசு மணல் விற்பனையைத் தொடங்குவதற்கு முன்பாக 4,500 ரூபாய், 5,000 ரூபாய், 5,500, 6,000, ரூபாய் என்ற அளவிற்குக்கூட மணல் விலை இருந்தது. ஆனால், தற்போது 2800, 3000 ரூபாய் என்ற அளவிற்கு மணல் தாராளமாகக் கிடைக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொல்கிறபோது, 165 ரூபாய்க்கு சிமென்ட் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். இன்றைய பேப்பரை நீங்கள் பார்த்தலும்கூட, சிமென்ட் விலை 185 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல, நம்முடைய மாண்புமிகு ரெவின்யூ துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது,



மணல் விலை கூடவில்லை என்று சொன்னார்கள். மணல் விலையை உங்களுடைய பாயின்ட்-லே எடுக்கிறபோது—அதை நீங்கள் மிகவும் காலதாமதமாக சப்ளை செய்கிற காரணத்தாலே, அங்கே லாரிகள் நிறைய நேரம் நின்று வருகிற காரணத்தால், அதற்காக வாடகையையும் சேர்த்து இப்போது 6 ஆயிரம் ரூபாய் என்பதை, 8 ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் உயர்த்தி அதிகமான அளவிற்கு மணல் விலை ஏறிவிட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக லாரியை நீங்கள் dispose செய்வதற்கு நடவடிக்கை எடுப்பீர்கள் என்று சொன்னால், அந்த waiting charge எல்லாம் இல்லாமல், மணல் விலை குறைய வாய்ப்பிருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் எடுப்பதற்கு லாரிகள் வந்து நிறுத்தப்பட்டு, அது காலதாமதமாக எடுக்கப்பட்டு வருகிறது என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை அரசு எடுக்கின்றபோது இருந்த நிலை அது. ஆனால், தற்போது லாரிகள் வந்தவுடனே மணல் எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே அங்கு வந்து காலதாமதமாக நின்று எங்கேயும் மணல் எடுக்கக்கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 165 ரூபாய்க்கு சிமென்ட் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். 165 ரூபாய்க்கு எத்தனை மூட்டை வேண்டுமானாலும் நான் அவருக்கு வாங்கித் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் அதிக நேரம் விவாதிக்கப்பட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எல்லாம் தலையிட்டு, அப்போது 120 ரூபாய், 110 ரூபாய் என்று சிமென்ட் விலை குறைந்தது. பிறகு திடீரென்று இந்த அளவிற்கு உயர்ந்ததற்குக் காரணம் என்ன? அதைக் கண்டறிந்து மீண்டும் மூட்டை 110 ரூபாய் என்று கொண்டு வந்தால்தான் நீங்கள் இந்த அவையிலே கொடுத்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டதாகப் பொருள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் 215 ரூபாய்க்கு மேல் விற்றது என்பதை திரு. ஞானசேகரன் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்த விலையை 120 ரூபாய் என்ற அளவிற்குக் குறைத்தது—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்—என்றாலும்கூட, இப்போது விலை கூடியிருக்கிறது; நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆகவே, ஆலை அதிபர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் குறைப்பதற்கான முயற்சியை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

*பிற்பகல் 12-40*

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அமைச்சர் பெருமக்களுடைய விளக்கத்திற்கு நன்றி. எது எப்படியிருந்தாலும் சாதாரண மக்கள் மணல் விலையாலும், சிமெண்ட் விலையாலும் எந்த ஒரு சாதாரண கட்டடமும் கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதை இங்கே நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று, தமிழக அரசு தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு நிலம் வாங்கி வழங்குவதற்கு 70 கோடி ரூபாய்க்கு உதவி செய்வதாக, மானியம் அளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சாதாரண பெண்கள், சமூக சுரண்டல் மற்றும் பொருளாதார சுரண்டல் ஆகிய இரட்டைச் சுரண்டலுக்கும் உள்ளானவர்கள். தாழ்த்தப்பட்ட பெண்கள் குடிநீருக்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள்; இந்தப் பெண்களுக்கு இந்த அறிவிப்பு என்பது குடிக்கத் தண்ணீர் இல்லாத நேரத்தில், கொப்பளிக்கப் பன்னீர் என்பதுபோல அமைந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தைத் திசை திருப்புகிறார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பல்வேறு சிறப்பான திட்டங்களை, தாழ்ந்து கிடக்கின்ற, குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற மக்களையெல்லாம் உயர்த்துகிற வகையில் சிறப்பான திட்டங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை பெரும்பான்மையான இடங்களில் எதிர்பார்த்துக்





கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு வரவேற்பு கொடுத்துக்கொண்டே வருகிற திட்டங்களைத்தான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின், நிலம் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏழையெளிய பெண்களுக்கு நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தை நீங்கள் எதிர்க்கிறீர்களா என்பதை இந்த நேரத்தில் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல: இப்படிப்பட்ட நிலைகளை எல்லாம், தமிழக மக்கள் இன்றைய சூழ்நிலையில் இந்த அவையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே இப்போது கொண்டு வருகிற திட்டத்தை அமோகமாக வரவேற்று, இந்தத் திட்டங்கள் மூலமாக நிலம் இல்லாத ஏழையெளிய மக்கள், கூலி விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பாக, பெண்களுக்கு இந்த நிலத்தைக் கொடுப்பதன் காரணமாக அவர்கள் விவசாயத் தொழில்—தன்னுடைய சொந்த நிலத்தில் விவசாயம்—செய்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நல்ல திட்டமாக இந்தத் திட்டம் அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அந்த ஆதிதிராவிடர் மலைவாழ் மக்களுடைய பெண்களுக்கு நிலம் கிடைக்க வேண்டுமென்ற ஆதங்கத்தோடு குறிப்பிடுகிறேன். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்கிற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தில் அவர்களுக்கு இலவசமாக நிலம் கொடுத்து உதவலாம். அதற்கு மாறாக பாதி பணம் கட்ட வேண்டுமென்பது ஒரு கடினமான பிரச்சினையாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இதை நான் சொல்கிறேன். ஆகவே அவர்களுக்கு இலவசமாக நிலம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தில் பாதி மானியம், பாதி கடன், கையிலிருந்து அவர்கள் எந்தப் பணமும் தர வேண்டியது இல்லை.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** கடன்; அவர்கள்தானே, மீதி பாதியைக் கட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தரிசுநில மேம்பாட்டுத்

[திரு. வே. கிருஷ்ணமூர்த்தி] [2004 பிப்ரவரி 6

திட்டத்தின் மூலம் அவர்களுக்கு இலவசமாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று, ரேஷன் கார்டுகளுக்கு 5000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு 'எச்' முத்திரை குத்தப்பட்டதால் பெரிய அளவிலே, சாதாரண மக்கள்கூட கஷ்டப்படுகிறார்கள். எனவே *(மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்துவிடுகிறேன். அனைவருக்கும் ரேஷன் பொருள் வாங்குகிற வாய்ப்பினை மீண்டும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது மாவட்டத்தினுடைய கோரிக்கைகள். தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டமாக வருகிற 9-ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ளது. தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருந்தது. தமிழகத்தை ஆய்வு செய்த மனிதவள மேம்பாட்டுத் துறையானது, தருமபுரி மாவட்டம் அனைத்து அம்சங்களிலும் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவித்துள்ளது. தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனி கிருஷ்ணகிரி மாவட்டமாக 9-ஆம் தேதி அறிவிக்க இருக்கிறார்கள். அவர்களுக்கு வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால் எங்களுடைய மாவட்டத்தினுடைய நீண்டநாளாகச் சொல்லப்பட்ட கோரிக்கையான, அனைத்துக் கட்சிகளுடைய கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அந்த அறிவிப்பை இங்கே அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பனைமரம், தென்னை மரம் ஏறும் தொழிலாளர்கள் வெல்லம் காய்ச்சவோ, தெளிவு இறக்கவோ அனுமதி மறுக்கப்படுகிறது. அவர்களுக்கு licence கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க பனை ஏறும் தொழிலாளர்களுக்காக அவர்களுடைய வாழ்வில் ஒளி கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒன்றாம் தேதி முதல் அனுமதி



2004 பிப்ரவரி 6] [திரு. கே. பாண்டுரங்கன்]

கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடுமட்டுமின்றி, இன்று பனையேறுகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு, தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற 200 பனை ஏறுகின்றவர்களுக்கு பதநீரிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற அந்த வெல்லத்திற்கான உபகரணங்களைக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டிலே 200 கருவிகள் இலவசமாக வழங்கியிருக்கிறார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் நான் இந்த நேரத்திலே மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 12-45

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்து விடுகிறேன். எனது தொகுதியில் அனைத்துச் சாலைகளும் பழுதடைந்துள்ளன. அந்தச் சாலைகள் பழுதுபார்க்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். இந்த மன்றத்தில் அறிவித்து இரண்டு ஆண்டுகள் ஆனபிறகும்கூட, அங்குத்தி சுனையின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதாக அறிவிக்கப்பட்டு இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை உடனடியாக செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டையை ஒட்டியுள்ள பெரிய ஏரி தூர்வாரப்பட வேண்டும். அது நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வருகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலை அடிவாரத்தில் கடப்பாரை ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய ஏரியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அரூர் தொகுதியில் கல்லாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க வேண்டுமென்றும், தீர்த்தமலையிலிருந்து அம்மாப்பேட்டை செல்லும் வழியில் வறட்டை ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வே. கிருஷ்ணமூர்த்தி] [2004 பிப்ரவரி 6

ஊத்தங்கரை வட்டம், கொட்டுக்காரம்பட்டியில்—எனது சொந்த ஊரான அந்த ஊரில்—உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று, 5,000 ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டாவது கல்வி அமைச்சர் அவர்கள், அதற்கு ஆவன செய்து, பள்ளி தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 13 (2)-ஐப் பயன்படுத்துதல் மற்றும் விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13(2)-ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தும், சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தியும், 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2004) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் ஏற்கப்பட்டது.



## 6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறவகையில், இப்போது டாஸ்மாக் மட்டுமே எல்லா இடங்களிலும் இதுபோன்ற மதுபான சில்லறை வியாபாரத்தைச் செய்வதற்கான உரிமம் வழங்கப்பட வேண்டும். அதுவும், 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குமுன் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமங்கள் எதுவும் புதுப்பிக்கப்படக் கூடாது என்கிறவகையில் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள். இப்படிக் கொண்டு வருகிற இந்த நேரத்தில், நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், பல கிராமங்களில் இந்த டாஸ்மாக் கடைகளை இப்போது நீங்கள் திறந்து, அங்கே ஒயின் ஷாப்பிலே, சில கடைகளிலே 50 ரூபாய்க்குக்கூட வியாபாரம் ஆகவில்லை. சில இடங்களிலே 500 ரூபாய்க்குக்கூட வியாபாரம் ஆகாத கடைகளெல்லாம்கூட இருக்கின்றன. ஆனால், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருகிறபோது, கிராமங்களையாவது நீங்கள் விட்டுவிட்டு, நகர்ப்பகுதியில் வேண்டுமானால் நீங்கள் இதுபோன்ற கடைகளை வைத்துவிட்டு, கிராமப்பகுதிகளிலே இருக்கக்கூடியவர்களையும் குடிகாரர்களாக மாற்றி, கெடுத்துவிட வேண்டாம் என்கிற

---

6-2-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அடிப்படையில், நான் கேட்டுக்கொள்கிறேன், கிராமப் பகுதிகளிலே இந்த டாஸ்மாக்—இப்படிப்பட்ட முயற்சியை நீங்கள் தயவு செய்து கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசுக்கும் இழப்புதான். 50 ரூபாய்க்குக்கூட சில இடங்களிலே விற்பனை ஆகாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. டாஸ்மாக்கிலே இருக்கக்கூடிய District management ....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே டாஸ்மாக் மூலம் கடைகள் திறக்கப்படுவதன் நோக்கமே, கிராமப்புறங்களில் கள்ளச் சாராயம் மிகுதியாக உருவாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் வரக்கூடாது என்று சொல்கிற அரசு, உண்மையிலேயே இதுபோன்ற மதுபானக் கடைகளுக்கும் நீங்கள் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பூரண மதுவிலக்கைத் தமிழகத்திலே கொண்டு வந்தீர்களென்று சொன்னால்—அதுதான் எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய இலட்சியம். எங்களுடைய கொள்கை—அந்தவகையிலே செயல்படுத்தினால் உங்களைப் பாராட்டுவேன். ஆனால், நீங்கள் கள்ளச் சாராயத்தைப் பொதுவாக....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையும், இலட்சியமும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, சில இடங்களிலே, அதாவது கர்நாடகாவிலே உங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சில நேரங்களிலே மாறுபடுகிறது. அதேபோல, மற்றப் பகுதிகளிலே, மும்பை போன்ற பகுதிகளிலேகூட நீங்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் போகிறீர்கள். அதேபோல, நீங்கள் இடத்திற்குத் தகுந்தாற்போல சில இடங்களிலே மாற்றிக் கொள்கிறீர்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய இந்தக் கொள்கை நிச்சயமாக இங்கே பூரண மதுவிலக்கு என்பதுதான். நான் மட்டுமல்ல, காமராஜர் காலத்தினுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழகத்தில் மது என்கிற



அரக்கன் உள்ளே நுழையக்கூடாது என்பதிலே பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட மிகவும் உறுதியாக இருந்தார்கள். அதற்குப் பின்னாலே வந்தவர்கள்தான்—நீங்கள்— கடையைத் திறந்துவிட்டீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே..

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் பேசுகின்றபோது கள்ளுக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று பேசினார்கள். அப்போதே நான் கேட்டேன், இது உங்களுடைய கட்சியினுடைய கொள்கையா என்று கேட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** அவருடைய தனிப்பட்ட கருத்தைச் சொல்லியிருப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பூரண மதுவிலக்கைப் படிப்படியாக அரசு கொண்டு வர வேண்டும். நிதிநிலை சீரடைந்துவிட்டது என்று நிதி அமைச்சர் அவர்கள் ஓரளவுக்கு இப்பொழுது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். டாஸ்மாக் என்ற நிறுவனத்திற்கு, பொதுவாக, இந்தத் துறைக்கு இப்பொழுது நீங்கள் M.D.-ஆக போட்டிருக்கக் கூடியவர் Rural Development துறையில் மிகவும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அவரைக் கொண்டு போய், நீங்கள் இப்படிச் சாராயத்தை விற்பதற்கு, மதுக் கடைகளை நடத்துவதற்குக் கொண்டு போய் நியமித்துவிட்டீர்கள் என்கின்ற ஏக்கம் எங்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட நல்ல ஐ.ஏ.எஸ். ஆபீசர்களை எல்லாம் நம்முடைய வளர்ச்சிக்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வருவாய் என்கின்ற காரணத்தினாலே இவர்களை இதிலே போய் மாட்டி விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டு பூரண மதுவிலக்கைப் படிப்படியாக நீங்கள் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நோக்கத்திற்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு இப்போது அமல்படுத்தப்படுகிறதோ அந்தத் திட்டம் முழுமையாக வெற்றிபெற வேண்டுமென்ற கருத்திலே அபிப்பிராயங்களை இதிலே சொல்ல வேண்டியிருக்கிறது. கள்ளச் சாராயம் ஒழிக்கப்படுவதையும், நியாயமான விலையிலே கலப்படம் இல்லாத சரக்காக இது கிடைப்பதையும் உறுதிப்படுத்துகின்ற முறையில் சர்க்கார் நடத்துவதாகச் சொல்கிறோம். ஏற்கெனவே ஒரு முறை, கடந்த முறை, மலிவு விலை மது என்ற முறையில், பாக்கெட் சாராயம் என்ற முறையிலே மாநில அரசு அறிவித்தது. அப்போதும், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகத்தான் என்று சொன்னோம். மீண்டும் அது இரத்து செய்யப்பட்டது. ஏன் என்று சொன்னால், அது நஷ்டத்திலே ஓடியது அல்லது வேறுவிதமாக அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று. அப்படிப்பட்ட அனுபவம் இதில் வந்து விடக்கூடாது என்று எச்சரிக்கையோடு ஜனங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய பகுதிகளில் இருக்கிற கடைகளை அப்புறப்படுத்துவதற்கும், இதில் நேரத்தை இன்னும் கொஞ்சம் குறைப்பதற்கும், சட்டம்-ஒழுங்கு இதனால் கெடாமல் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலேகூட, சில இடங்களில் தொடங்கப்பட்ட சில நாட்களிலேயே, அங்கொன்றும், இங்கொன்றுமாக நம்முடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய ஊழியர்களே, இதிலே கலப்படம் செய்து விற்பதாகத் தகவல் இருக்கிறது—உடைத்து ஊற்றுவதிலே—நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டு மூன்று இடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்று.

இன்னொன்று; இதன் பண வசூலில் திருட்டு நடக்கிறது என்பதும் இருக்கிறது. ஆகையினால் போதிய பாதுகாப்போடு Security system உட்பட சில ஏற்பாடுகளைச் செய்து அவற்றை முறையாக நடத்தவும், கள்ளச் சாராயம் முற்றிலுமாக ஒழிக்கப்படும் நோக்கத்தோடும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகவும், அதேநேரத்திலே விற்பனை முறையைச் சீர்படுத்துவதற்காக,



ஒழுங்குபடுத்துவதற்காகக் கொண்டு வரக்கூடிய வகையிலே என்று இங்கே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சரவர்கள், இதற்கு முன்னாலே முதலமைச்சராக வந்த நேரத்திலே, 'என்னுடைய முதல் கையெழுத்தே பெண்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக' என்று சொல்லி அன்று கள்ளச் சாராயத்தை ஒழிக்கக்கூடிய நடைமுறைகளை அறிவித்தும் இதுவரையிலே கள்ளச் சாராயம் ஒழிக்கப்படவில்லை. ஆனால், இப்பொழுதுகூட நாங்கள் உறுதியாக இருக்கிறோம், இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று சொல்லக்கூடிய நிலையிலே கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு உறுதிபூண்டு விடுவீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக ஒழிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட திருத்தங்கள் கொண்டு வருவதாலே கள்ளச் சாராயத்தை நிச்சயமாக ஒழித்துவிட முடியாது. ஆகவே, கள்ளச் சாராயம் ஒழிக்கப்படவேண்டுமென்பதிலே அரசு உறுதியாக இருக்க வேண்டும். அதேபோன்று கிராமப்புறங்களிலே இப்படி மதுக் கடைகளைக் கொண்டு வந்து இதனாலே விற்பனை பெருகிவிட்டது, அதிகாரிகள் பத்திரிகைகளிலே மகிழ்ச்சியோடு, 'இன்று முதல் நாள் விற்பனை மிக அதிகமாக இருக்கிறது, இரண்டாவது நாள் கூடிவிட்டது' என்று சொல்கிறார்கள். நம்முடைய நிதி அமைச்சர்கூட—ஏதோ குறையாகச் சொல்லவில்லை—இப்பொழுது கூடுதலாக அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வருமானத்தைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால் அரசுக்கு வருமானம் வர வேண்டுமென்பதற்காக 8 ஆயிரம் மதுக் கடைகளைத் திறந்து கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய ஏழையெளியவர்களுக்கு, அதுவும் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கக்கூடிய இந்த இளைஞர்கள் மாலை வரையிலே காத்திருந்துவிட்டு குடிக்கச் செல்கிறார்கள். ஒரு மாதம், இரண்டு மாதம் குடித்துவிட்டு அதற்கு அடிமையாகி, தவறான வழிகளிலே செல்வதற்கான ஒரு தூண்டுகோலாக அது அமைகிறது. ஆகவே, எக்காரணம் கொண்டும் மதுக் கடைகளைக் கொண்டு வரக்கூடாது என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 12-55

அதிலும் கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பெண்கள் இன்று மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். கள்ளச் சாராயத்தை நான்

ஆதரிக்கவில்லை. ஒழிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். அதைக்கூட, 50 ரூபாய், 100 ரூபாய் வருமானம் வருகிறது என்று சொல்லக் கூடியவன், 10 ரூபாய் 20 ரூபாய் கொடுத்துக் குடித்துவிட்டு மீதியை வீட்டுக்குக் கொடுப்பான். ஆனால் பிராந்திக் கடையில் கூடுதலான விலை என்ற காரணத்தினாலே சம்பாதிக்கக்கூடிய தினக் கூலியை அதற்கே செலவழித்துவிட்டு குடும்பம் நடுத்தெருவிலே நிற்கக்கூடிய நிலைக்கு பல குடும்பங்கள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் வருமானத்தைக் கருத்திலே கொள்ளாமல்—இந்த நாட்டு மக்களின் வாழ்வுரிமை முக்கியமானது—இதுமக்களுக்காக இருக்கக்கூடிய அரசாங்கம் என்பதை நிலைநாட்டக்கூடியவகையிலே இந்த மதுக் கடைகளைக் கட்டாயமாக விரிவாக்கம் செய்யக்கூடாது. இப்படிப்பட்ட திருத்தங்கள்கூட தேவையில்லை. மதுக் கடைகள் வந்தால்தானே திருத்தங்கள் தேவை. ஆகவே, மதுக் கடைகளே வேண்டாம். அதிலும் குறிப்பாக, கிராமப்புறங்களிலே கொண்டு வருவதனாலே, சட்டம் ஒழுங்கு ஏராளமாகச் சீர் கெடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நகர்ப்புறங்களிலே மதுக் கடைகள் இருந்தால் அங்கே காவல் நிலையங்கள் இருக்கின்றன; ஒரு பிரச்சினை என்று வந்தால் உடனடியாக அங்கே காவல் நிலைய அதிகாரிகள் ஓடோடி வந்து சம்பவத்தைத் தடுக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இரவு நேரங்களிலே 12 மணி வரை என்று சொல்கிறீர்கள். அதனால் அங்கே பல்வேறு குழப்பங்கள், சண்டைகள் சச்சரவுகள் ஏற்படுகின்றன. காவல் நிலையங்கள் இல்லாததால் அங்கே சட்டம் ஒழுங்கு கெடுவதற்கும், திருட்டு, கள்ளத்தனம் ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே இந்தக் கிராமப்புற மதுக் கடைகளை நீங்கள் நிச்சயமாக ஊக்குவிக்கக் கூடாது. அதை நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட திருத்தங்கள் தேவையில்லை என்ற கருத்துகளை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லி மீண்டும் இங்கே மதுவிலக்கை, பூரண மதுவில்க்காகக் கொண்டுவரவேண்டுமென்று கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் ஒழிக்கப்படவேண்டும்; போலியான மது வகைகள் விற்பனையைத் தடைசெய்யவேண்டுமென்ற அடிப்படையிலே கொண்டு வரப்பட்டுள்ளது இந்தச் சட்டத் திருத்தம். பொதுவாக டாஸ்மாக் நிறுவனத்தின் மூலமாக விற்கப்படுகின்ற மது வகைகளிலேகூட



போலியான மதுவகைகள் விற்கப்படுகின்றன என்ற செய்தி கடந்த வாரத்திலேகூட வந்தது. அதேபோல, குறிப்பாக கிராமப்புறங்களிலே டாஸ்மாக் நிறுவனத்தின் மூலமாக மதுக் கடைகளைத் திறப்பதன் மூலமாக கிராமப்புற பகுதிகளிலே இருக்கின்ற ஏழை விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் தங்களுடைய வருமானத்தை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதிலும் குறிப்பாக, குடியிருப்புப் பகுதிகளிலே டாஸ்மாக் நிறுவனத்தினுடைய கடைகள் திறந்திருக்கின்ற சூழ்நிலையில் அந்தக் குடியிருப்புப் பகுதிகளிலே பல்வேறு பிரச்சினைகள் எழுகின்ற, சட்டம் ஒழுங்கு சீர்கெடக்கூடிய அளவிலே சில சம்பவங்கள் நடைபெறுகின்றன என்ற அடிப்படையிலே பொதுவாக கிராமப்புறங்களைப் பொறுத்தமட்டிலும் மதுக் கடைகளைத் திறப்தை ஒத்திவைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, அதை முழுமையாக ரத்து செய்யவேண்டுமென்ற அடிப்படையிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலி மதுபான வகைகள் உரிமம் பெற்ற தனியார் கடைகளில் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கும், கூட்டணி சேர்ந்து கடைகளை எடுத்துக்கொண்டு மதுபான சில்லறை விற்பனை வணிகத்தைத் தன்வசப்படுத்திக் கொள்வதைத் தடுப்பதற்கும் மற்றும் நுகர்வோர் நலன்கருதி மதுபானங்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்வ்தைத் தடுக்கவும் அரசு 26-10-2003 முதல் 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்திற்கு அவசரச் சட்டத்தின் மூலம் திருத்தம் கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தின்படி மதுபான வகைகளைச் சில்லறை விற்பனை செய்வதற்கான சிறப்பு உரிமம் அரசுக்குச் சொந்தமான டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிப்பதோடு வேறு எந்தத் தனி நபரும் சில்லறை விற்பனை செய்ய இயலாது என்ற அடிப்படையில் இந்த மாமன்றத்தில் சட்டத் திருத்தம் 7-11-2003 அன்று நிறைவேற்றப்பட்டது. மற்றும் ஆளுநரின் ஒப்புதலும் 14-11-2003 அன்று பெறப்பட்டு 15-11-2003 அன்று சட்டமாக இயற்றப்பட்டது. இருப்பினும் தனியார் சில்லறை விற்பனை முறை மாற்றப்பட்டு, சட்டத்தில் அரசுக்குச் சொந்தமான டாஸ்மாக் நிறுவனம் மட்டுமே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 பிப்ரவரி 6

மதுபான சில்லறை விற்பனை செய்யலாம் என்பதை எதிர்த்து சில நபர்கள் முந்தைய ஆண்டில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இந்த ஆண்டும் புதுப்பித்தல் உரிமை அவர்களுக்கு உள்ளது என்று உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

*பிற்பகல் 1-00*

அரசால் இயற்றப்பட்ட இந்தச் சட்டம், அரசியலமைப்புச் சாசனத்தின்படி செல்லுபடியானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதிலும், நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட புதுப்பித்தல் உரிமையை எந்தவகையிலும் அது பாதிக்காது என்றும் தீர்ப்பளித்தது. அரசுக்குச் சொந்தமான டாஸ்மாக் நிறுவனம் மட்டுமே, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனையைச் செய்யலாம் என்ற கொள்கையை நிலைநாட்டி இயற்றப்பட்டுள்ள இச்சட்டத்தை, மேலும் தெளிவுபடுத்தும்வகையிலே, முந்தைய உரிமைதாரர்களுக்கு ஆதரவாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படைத் தன்மையை நீக்கும்வகையில், உரிமம் புதுப்பித்தல் குறித்து, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளின் விதி 14 நீக்கப்பட்ட தேதியினை, 2001-2002-க்கான ஆயத் தீர்வை கொள்கைக்கான அரசாணை பிறப்பித்த நாளான 22-6-2001 முதற்கொண்டும், தமிழ்நாடு மதுபான 'பார்'களில் சில்லறை விற்பனை விதிகளின் விதி 5-ஐ, 23-4-2002 முதற்கொண்டும் முன்மேவுபலன் retrospective effect அளித்து நீக்கும்வகையில், அவசர நிமித்தம், ஏற்கெனவே மேதகு ஆளுநர் அவர்களால் 28-1-2004 அன்று பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக முறையான சட்டம் இயற்றப்படும்பொருட்டு, இந்தச் சட்டத் திருத்த மசோதா இந்த மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். கலப்படம் இல்லாதவகையிலும், மக்கள் ஆட்சேபனைக்குரிய பகுதியில் கடைகளை நடத்தக்கூடாது என்பதையும் சொன்னார்கள். ஏற்கெனவே மக்கள் எங்கெல்லாம் ஆட்சேபனை தெரிவிக்கிறார்களோ, அங்கெல்லாம் கடைகள் அமைக்கப்படுவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கலப்படம் அங்கொன்றும், இங்கொன்றும் நடப்பதாகச் சொன்னார்கள். அந்தவகையிலே இல்லாதபடி ஒரு நல்ல தூய நிர்வாகத்தை மாண்புமிகு



2004 பிப்ரவரி 6] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் அதுவும் களையப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தவகையிலேயும், நம்முடைய மதுபானங்கள் விற்பதன் மூலம், எந்தப் பகுதியிலும் சட்டம்-ஒழுங்கு சீர்குலையாதபடி மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2004) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9-2-2004 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் நேரம் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 9-2-2004 திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்த நேரத்தை, அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

9-2-2004 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின். இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 9-2-2004 அன்று திங்கட்கிழமை, காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிலவகை வண்டிகளைப் பொறுத்தமட்டில் வரிவீதத்தை உயர்த்தியது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 28-3-2003 ஆம் நாளிட்ட 282 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[2004 பிப்ரவரி 6

20. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் இரண்டாம் விவர அட்டவணையின் (A) இனத்தில் குறிப்பிட்டுள்ள புதிய வண்டிகளைப் பதிவு செய்யும் தருணத்தில், தொடர் வண்டி (Trailer) அல்லது பக்கவண்டி (Side car) இணைந்த அல்லது இல்லாத வகைகளைச் சேர்ந்த மோட்டார் வண்டிகள் தொடர்பாக செலுத்தத்தக்க வரிவீதத்தை அதிகரித்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 28-3-2003 ஆம் நாளிட்ட 283 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 2 ஆம் வகையைச் சேர்ந்த III பகுதியில் (a) இனத்தில் குறிப்பிட்டுள்ள வரியில் இருபத்தைந்து சதவீத்தை மேல்வரியாக விதித்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 28-3-2003 ஆம் நாளிட்ட 284 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. சுமையுடன் கூடிய சரக்கு வண்டிகளின் எடை 15,000 கிலோ கிராமுக்கும் மேற்படுமாயின் அவற்றின் காலாண்டு வரி வீதம் 2500 ரூபாயிலிருந்து சுமையுடன் கூடிய சரக்கு வண்டிகளின் எடையானது (15,000 கிலோ கிராமுக்கும் மேற்படுமாயின் ஒவ்வொரு 1000 கிலோகிராம் மற்றும் அதன் பகுதிக்கு ரூ.400 கூடுதலாக) ரூபாய் 2,500 ரூபாயாக (சுமையுடன் கூடிய சரக்கு வண்டிகளின் எடையானது 15,000 கிலோ கிராமுக்கும் மேற்படுமாயின் ஒவ்வொரு 250 கிலோகிராம் மற்றும் அதன் பகுதிக்கும் ரூ.75 கூடுதலாக) குறைக்க அறிவித்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 28-3-2003 ஆம் நாளிட்ட 285 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

23. சுமையேற்றப்பட்ட எடை 15,000 கிலோகிராமுக்கு அதிகமாக உள்ள சரக்கு வண்டிகளுக்கான காலாண்டு வரிவீதத்தை ரூ.2500-லிருந்து 15,000 கிலோ கிராமுக்கு மேற்படும் ஒவ்வொரு 250 கிலோ கிராம் சுமைக்கும் அதன் பகுதிக்கும் கூடுதலாக ரூ.75-லிருந்து



2004 பிப்ரவரி 6]

ரூ.2300 ஆக (15,000 கிலோ கிராமுக்கு மேற்படும் ஒவ்வொரு 250 கிலோ கிராம் சுமைக்கும் அதன் பகுதிக்கும்) கூடுதலாக ரூ.50/-ஆக குறைத்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 28-3-2003 ஆம் நாளிட்ட 286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

24. உள் துறையில் 20-3-2003 அன்று உருவாகி 29-3-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/HO/214/ (b-5)/2003 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 1-4-2003 ஆம் நாளிட்ட 585 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

25. மோட்டார் வாடகை வண்டிகள் (Motor Cabs) சுற்றுலா வாடகை வண்டிகள் (Tourist Taxis) மாக்சி கேப்ஸ் வண்டிகள், தனியார் சேவை வண்டிகள் மற்றும் 15,000 கிலோ கிராம் சுமையேற்றப்பட்ட எடைக்கும் மிகையாக உள்ள சரக்கு வண்டிகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் 1-12-2001 முதல் 30-3-2003 ஆம் நாள் வரையிலான கால அளவிற்குச் செலுத்த வேண்டிய வரி வேறுபாட்டுத் தொகையைச் செலுத்தத் தவறியதற்காக, செலுத்தத்தக்க அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 21-7-2003 ஆம் நாளிட்ட 622 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

26. (1) TN-59-Q-8685 (பஜாஜ் மூன்று சக்கர வண்டி) (2) TN-59-Q-5866 (மாருதி ஆம்னி-5 இருக்கை) மற்றும் TN-59-L-8695 (ஸ்வராஜ் மஸ்தா-பள்ளி வேன்) (Swaraj Mazda-School Van) ஆகிய மூன்று வண்டிகளுக்கு, இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும், 50 சதவீத வரி விலக்கு அளிப்பது குறித்தும், மதுரை-635 107, அரும்பனூர் அஞ்சல், சுந்தரராஜன்பட்டி என்ற முகவரியிலுள்ள பார்வையற்றோருக்கான இந்தியன் சங்கத்தைச் சேர்ந்த

மேற்சொன்ன வண்டிகளைப் பொறுத்தமட்டில், அவற்றை வாடகைக்கோ, பரிசுக்காகவோ பயன்படுத்தப்படாமல் கருணை அடிப்படையில் ஆற்றும் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் TN-59-L-8695 ஆம் எண்ணுள்ள வண்டியைப் பொறுத்தமட்டில், இந்த வரிச்சலுகை 5 ஆண்டுகளுக்கு மட்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது குறித்தும் உள் (போக்குவரத்து-1) துறையின் 23-9-2003 ஆம் நாளிட்ட 928 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் 1-12-2003-ஆம் நாளிட்ட 423 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

28. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)' (தமிழ், ஆங்கிலம்)

29. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

30. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

6. உடுக்குறியிடாத் வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

7. உடுக்குறியிடாத் வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

தமிழ்நாடு ... 185088 ... 600 009